"இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்.
அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்" (லூக் 1: 31)

# தாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல் ~ 07 மார்கழி 2008 ~ மாசி 2009 ஊற்று 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

அன்பு உள்ளங்களுக்கு,

**புதிய ஆண்டில்...**

தாகம் இன்னுமொரு திருவழிபாட்டு ஆண்டினுள் நுழைகின்றது. மார்கழி 2008 முதல் கார்த்திகை 2009 வரைக்குமான காலப்பகுதியை நான்கு நூல்களாக உள்ளடக்கி தாகம் தொடர்ந்து வெளிவரும். அதன் முதல் காலாண்டு வெளியீடு மார்கழி 2008 முதல் மாசி 2009 காலப்பகுதிக்கானது. இவை தரும் சிந்தனைகளை முறையாகப் பயன்படுத்தி பயனடைய வேண்டுமென்பது எனது விருப்பம்.

**தேடல்கள்**

மனித வாழ்வு ஓர் தேடல். எது இந்த தேடல்? சிலர் இறைவனைத் தேடுவது என்பர், சிலர் உண்மையைத் தேடுவது என்பர், சிலர் நிலைவாழ்வைத் தேடுவது என்பர். இந்தத் தேடலை அடைய கிறிஸ்தவர் பைபிளையோ, திருச்சபையின் வழிகாட்டலையோ நாடுவர். உண்மையைத் தேடுவோர் அதை ஞானிகளின் அமுத வாக்கில் நாடுவர். நிலைவாழ்வைத் தேடுவோர் தமது நற்செயல்களில் நாடுவர். கிறிஸ்தவர் நாம் கடவுளைத் தேடுகிறோம். அந்தக் கடவுளை எமக்கு வெளியே தேடுகிறோம். விவிலியம், திருவழிபாடுகள், மறைக்கல்வி, செபமாலைத் தியானம் என்று பல வெளிச்செயல்களில் கடவுளைத் தேடுகிறோம். இது நியாயமானதே. ஆனால் இறைவனை வெளியே தேடுவதைவிட என்னுள் தேட நான் முயல்கின்றேனா? தேடல் நிறைந்த எனது பயணம் வெளியே அல்ல, எனக்குள் அமைய வேண்டும். எனது உள்ளத்தை நோக்கிய எனது தேடல் என்னுள் என்னை வெளிப்படுத்தும். அப்போது என்னுள் உறையும் இறைவனை உணர்ந்துகொள்ள முடியும். கிறிஸ்து என்னுள் வாழ்கிறார் என்று தூய பவுலைப் போல நானும் துணிந்து கூறமுடியும். எமது தேடல் பயணம் தொடர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொக்கிஷம்**

விவிலியம் ஓர் பொக்கிஷம். அதைத் தோண்டத் தோண்ட முத்துக்கள் வந்தவண்ணமே இருக்கும். விவிலியத்தை நாம் பல கோணங்களிலிருந்து பார்த்து, தியானித்துப் பயனடையலாம். அதில் ஒன்று மனித உணர்வு களிலிருந்து விவிலியப் பகுதிகளைப் பார்ப்பதாகும். எமது நாளாந்த செயல்களில் எமது உள்ளணர்வுகளை நாம் அவதானித்து இனம்காண்கின்றோமா? கோபம், மனவேதனை, மகிழ்ச்சி, வெறுப்பு, எரிச்சல், பொறாமை, இரக்கம் போன்ற உணர்வுகள் எம்மிலிருந்து வெளிப்படுகின்றன. இவை பற்றிய உணர்வு எமக்குண்டா?

இயேசு, அவரது பெற்றோர், உறவினர்கள், ஊரார், சீடர்கள், பொதுமக்கள், யூதத் தலைவர்கள், பிற இனத்தவர்கள், அரசியல் தலைவர்கள் என்று பலரை நற்செய்திகளில் நாம் சந்திக்கிறோம். இயேசுவை சந்தித்தபோது இவர்களது உள்ளுணர்வுகள் எவ்வாறு இருந்தன. இவர்களது உள்ளுணர் வுகளை இனம்கண்டு அதன் பின்னணியில் சிந்தனைகளை முன்வைக்க முனைகின்றேன். இந்த திருவழிபாட்டு ஆண்டின் தியானங்கள் இதை இலக்காகக் கொண்டு வாசகர்கள் உங்களை வழிநடத்தும் என்பது எனது நம்பிக்கை. விசேடமாகத் தவக்காலத்தில் வரும் தியானங்கள் இயேசுவின் உள்ளுணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமையும்.

**நிறைவாக...**

2009 கார்த்திகை மாதத்தோடு எனது தாகம் நூல் வெளியீட்டை நிறைவுசெய்யத் திட்டமிட்டுள்ளேன். பல நடைமுறைக் கஷ்டங்கள் காரணமாக இந்த முடிவை எடுக்க வேண்டியுள்ளது. இயேசுவை அனுபவிக்கும் எமது பயணத்தில் விவிலியம், விளக்க நூல்கள் அனைத்தும் வெறும் கருவிகளே. அவை தரும் வழிகாட்டலை அறிந்து தொடரவேண்டும் எமது ஆன்மீகப் பயணம். உங்கள் பயணத்தில் நீங்கள் இறையனுபவம் நிறைவாகக் காண வாழ்த்தி முடிக்கிறேன்.

**அருட்தந்தை நோயல் இம்மானுவேல்**
***ஆசிரியர்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

மார்கழி 2008 ~ மாசி 2009

தேடல் – 07 ஊற்று – 01

ஆசிரியர்: அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

வெளியீடு: அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

அட்டைப்படம்: செல்வன் டாவின்

விலை: 50/-

பதிப்பகம்: Teleprints, Kandy.

**உங்கள் தொடர்புகளுக்கு:**

Fr. Noel Emmanuel,
"Thagam"
National Seminary,
Ampitiya 20160.
ph. 081-2219586 / 0602822160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருகைக்காலம் முதல் ஞாயிறு
### 30 - கார்த்திகை 2008

*எசே 33: 7-9 திபா 95: 1-2, 6-9 உரோ 13: 8-10 மத் 18: 15-20*

***சகோதர அன்பு***

### முன்னுரை

திருவழிபாட்டு ஆண்டில் திருவருகைக் காலம், கிறிஸ்து பிறப்புக் காலம், பொதுக்காலம், தவக்காலம், பாஸ்கா காலம் என்று பல காலங்கள் அமைந்துள்ளன. அனைத்துக் காலங்களும் விசுவாசிகளை மனமாற்றத்திற்கும் ஒப்புரவிற்கும் அழைக்கின்றன. திருவழிபாட்டு ஆண்டு ஆண்டவரின் திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிருடன் ஆரம்பமாகின்றது. இது நான்கு அல்லது அதற்குக் குறைவான வாரங்களை உள்ளடக்குகின்றது. கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருக்கும் காலமிது. இந்த வருகை இரண்டு வகைப்படும்.
1. உலக முடிவில் உலகைத் தீர்ப்பிடுவதற்காக கிறிஸ்து அரசரின் இரண்டாம் வருகையை இது குறிக்கும். திருவருகைக் காலத்தில் முதல் இரண்டு வாரங்களும் இரண்டாம் வருகை பற்றிய சிந்தனைகளைத் தருகின்றன.
2. சரித்திரத்தில் கிறிஸ்துவின் பிறப்பு. மார்கழி 17 முதல் 24ம் திகதிவரைக்குமான இக்காலத்தில் கிறிஸ்துவின் பிறப்பிற்கு எம்மையே தயார் செய்ய இந்நாட்கள் அழைக்கின்றன.

இந்த இரண்டு வருகைகளின் பின்னணியிலேயே இக்காலத்து வாசகங்களும் அமைந்துள்ளன. இந்நாளின் வாசகங்களைத் தியானிப்போம்.

### இறைவாக்கினரின் பணி

எசேக்கியேலைப் போல பல இறைவாக்கினர்கள் கடவுளால் பணிக்கென அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் தமது பணியை முறையே செய்தும் உள்ளனர்.

எசேக்கியேல் இறைவாக்கினர் தொடக்கத்தில் யூதாவின்மேல் அதன் பாவங்களுக்குத் தீர்ப்பு, தண்டனை போன்ற செய்திகளைக் கொண்டுவந்தாலும் யூதா தண்டிக்கப்பட்டபோது நம்பிக்கையின் செய்தியைக் கொண்டுவந்தார். கடவுள் தண்டிக்கும் கடவுளல்ல. உரிய எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டும் மக்கள் மனம்மாறாத நிலையிலேயே கடவுள் அவர்களைத் தண்டிக்கின்றார். இங்கு இறைவாக்கினர் தனது கடமையைச் செய்தும் மக்கள் திருந்தாதபோது அவர்களுக்குத் தண்டனை உண்டு. அதேபோல இறைவாக்கினரும் தனது இறைவாக்குப் பணியைச் செய்யாது விட்டால் அவருக்கும் தண்டனை உண்டு என்று கடவுள் எச்சரிப்பதை முதல் வாசகத்தில் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோதர அன்பு**

மன்னிப்பதில் இருக்க வேண்டிய மனநிலையையும், தவறிய சகோதரரை வென்றெடுக்க வேண்டிய பொறுப்புகளையும் நன்செய்தியில் இயேசு வலியுறுத்து கின்றார். மன்னிப்பதற்கான கடமையை தனிப்பட்ட கடமையோடு நிறுத்திவிட முடியாது. ஒருவர் தன் பாவங்களால் ஊதாரித்தனமாக வாழும்போது அவரை அன்பினால் வென்று மீண்டும் கிறிஸ்தவ சமூகத்தினுள் கொண்டுவர வேண்டியது ஒவ்வொரு அங்கத்தவரின் கடமையாகும். ஆனால் தவறிய சகோதரர் அவமானப்படாமல் இருக்கத் தனித்து செயல்படுவது நல்லது. ஆனால் அவர் இதற்கு இணங்காமல் தொடர்ந்தும் பாவத்தில் வாழ்ந்தால் மேலும் சாட்சிகளைச் சேர்ப்பது நல்லது. ஒருவரைக் குறைகூறுவதோ, தீர்ப்பிடுவதோ அல்லது தண்டிப்பதோ இலகுவானது. ஆனால் அவர் தனது தவறுகளுக்காக மனம்நொந்து திருந்தி சமூகத்தில் ஒன்றாக வேண்டும் எனும் நல்மனதோடு செயல்படுவது கடினமானது. பாவத்தில் இருக்கும்போதோ, திருந்த முயலும்போதோ, திருந்தியபின்போ அவரைப் பற்றிய எமது மனநிலை மிக முக்கியமானது. ஏனெனில் நாம் எமது மனிநிலையை வார்த்தைகளால் வெளியிட அது அவருக்குப் பலமாகவோ அல்லது தடையாகவோ அமைந்து விடும். அவரது பாவங்களைவிட பல தடவைகளில் எமது தீய மனநிலையே ஒருவர் திருந்தி வாழத் தடையாகிவிடுகின்றது.

**மனக்கவலை**

நான் திருந்தி மன்னிப்புக் கேட்டு புதுவாழ்வு வாழ விரும்பினால் சமூகம் என்னை ஏற்றுக்கொள்ளுமா? அடுத்தவர் என்னை அவமானப்பத்தலாம், ஏளனமாகப் பேசலாம், என் தவறுகளைக் காலத்துக்குக் காலம் சுட்டிக்காட்டலாம் எனும் கவலையே அவர்கள் மனம்மாறத் தடையாகி விடுகின்றன. இந்த உணர்வுகளுக்கு நாம் மதிப்பளித்து செயல்பட்டால் பாவிகள் பற்றிய எமது மனநிலையும் மாறும், அவர்களும் நம்பிக்கையோடு ஒப்புரவாக வழிவகுக்கும்.

**செயல்பட...**

* எனது எதிராளிகளை நான் எந்த மனநிலையோடு பார்க்கிறேன்?
* அவர்களைப் பழிதீர்க்க என் வார்த்தைகளால் அவர்களது மனதைப் புண்படுத்தி ஒப்புரவிற்கு நானே தடையாக இருந்துள்ளேனா?
* அவர்கள் திருந்த வேண்டுமென எந்த முயற்சிகளை நான் எடுத்துள்ளேன்?
* எதிராளிகளின் குற்றங்களா அல்லது அவர்களது மனமாற்றமா எனக்கு அவசியமாகத் தெரிகின்றது?

ஒப்புரவின் மக்களாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01 – திங்கள் - மார்கழி 2008

எசா 2: 1–5 திபா 122: 1–2, 4–9 மத் 8: 5–11

***பணிவு***

நூற்றுவர் தலைவர் தனது பையன் குணமடைய வேண்டுமென்று தன்னைப் பணிந்து இயேசுவிடம் வரம் வேண்டினார்.

**நூற்றுவர் தலைவர்**

உரோமைய இராணுவத்தில் நூற்றுவர் தலைவர்கள் அதன் முதுகெலும்பைப் போன்றவர்கள். உரோமைய படையில் 6000 வீரர்கள் இருப்பார்கள். இப்படை 60 நூறு வீரர்களாகப் பிரிந்து செயல்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் நூறு வீரர்கள் இருந்தனர். ஒவ்வொரு பிரிவும் ஒரு நூற்றுவர் தலைவரின் கீழ் இருந்தது. இவர்களுக்கு அதிகாரம், பலம் இருந்தது.

புதிய ஏற்பாட்டில் வரும் ஒவ்வொரு நூற்றுவர் தலைவரும் மதிப்போடு வர்ணிக்கப்பட்டனர் (காண். மத் 27: 54, திப 10: 22, 26, 23: 17, 23: 24, 24: 23, 27: 43). ஆயினும் நற்செய்தியில் வரும் நூற்றுவர் தலைவர் வித்தியாசமானவர். தன் பையனுக்காகத் தன்னைத் தாழ்த்தி இயேசுவிடம் இவர் உதவி கேட்டார். இதுபோன்ற பகுதி லூக்கா 7ம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ளது. அங்கு இவரது பணியாளருக்காக இவர் பரிந்து பேசுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பையனோ, பணியாளரோ யாராயினும் இவருக்கு இரக்கம் மிகுதியாக இருந்தது எனலாம். அதேவேளை இவருக்குள் ஆழமான விசுவாசமும் இருந்தது. அந்த விசுவாசமே இயேசுவையும் பிரமிக்கச் செய்தது (8: 10). பிற இனத்தாரோடு யூதர்கள் வைத்திருக்க வேண்டிய உறவின் எல்லைகளை 'மிஸ்ரா' எனும் சட்டநூல் தெளிவுபடுத்துகின்றது. பிற இனத்தவரின் வீட்டிற்குள் யூதர்கள் நுழையக்கூடாது. ஏனெனில் அவர்களது இல்லங்கள் அசுத்தமானவை. 'நான் வந்து குணமாக்குவேன்' என்று இயேசு கூறியதற்கு இவர் தனது விசுவாசத்தின் உச்சத்திற்கே சென்றார். 'ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்...'

**செயல்பட...**

✸ தனது பையன் அல்லது பணியாளன், யாராக இருந்தாலும் இந்த நூற்றுவர் தலைவரைப் போல எமக்கும் இரக்கம், பரிவு உள்ளதா?

✸ எமது விசுவாசத்தின் ஆழம் எவ்வளவு? எனது விசுவாசத்தைப் பார்த்து இயேசு இன்று பிரமிப்பாரா? எனவே நம்பிக்கையில் வாழ்வோம். ஆண்டவரின் புதுமைகளை வாழ்வில் உணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 ~ செவ்வாய் - மார்கழி 2008

எசா 11: 1-10 திபா 72: 1-2, 7-8, 12-13, 17 லூக் 10: 21-24

### தற்பெருமை

இயேசு தன் தந்தையைப் போற்றுகின்றார். தூயவர்களுக்கும் பணிவுள்ள வர்களுக்கும் தன்னை வெளிப்படுத்தியதற்காக அவர் தந்தைக்கு நன்றி கூறினார். இதன் பின்னணியில் படித்தவர்கள், அறிவாளிகள் பற்றிய மனநிலை யும் வெளிப்படுகின்றது.

**ஞானிகள், அறிஞர்கள்**

இயேசுவை ஞானிகள், அறிஞர்கள் வெறுத்து ஒதுக்கியே வந்துள்ளனர். ஏனெனில் இயேசுவின் போதனைகளும் வாழ்வும் இவர்களுக்கு எப்போதும் பெரும் சவாலாகவே இருந்துள்ளன. அதேபோல மக்களும் இயேசுவிடம் பெரும் நன்மைகளைப் பெற்றவர்களாக யூதத் தலைமையை விட்டுவிட்டு இயேசுவையே பின்தொடர்ந்தனர். மக்கள் சாதாரண பாமர மக்கள். ஆழமான நம்பிக்கை கொண்டவர்கள். அரசியல், பொருளாதார, சமய பாரங்களால் அழுத்தப்பட்ட இவர்கள் இயேசு கொண்டுவந்த ஆன்மீக விடுதலையை வரவேற்றனர்.

இயேசுவோ ஞானிகளையும் அறிஞர்களையும் வெறுக்கவில்லை. கல்வி யையோ அறிவாற்றலையோ அவர் மறுக்கவில்லை. மாறாக, கல்விமான்களின் தற்பெருமையையே அவர் வெறுத்தார். அறிவின்மையையும் நம்பிக்கை யையும் இயேசு தொடர்புபடுத்தவில்லை. மாறாக அவர் அடக்கத்தையும் நம்பிக்கை யையுமே தொடர்புபடுத்தினார். ஒருவர் சாலமோன் மன்னனைப்போல ஞானம் நிறைந்தவராக இருக்கலாம். ஆனால் அவருள் எளிமை, நம்பிக்கை, குழந்தை உள்ளத்தைப்போல குற்றமற்ற உள்ளம் இல்லாவிட்டால் அவர் அனைத்தையும் இழந்தவராவார்.

யூதக் குருக்கள் இதை உணர்ந்திருந்தார்கள். இயேசுவின் பின்னால் மக்கள் திரண்டு சென்றதையும், நன்மைகள் பல பெற்றதையும் தெளிவாகவே அறிந்திருந்தார்கள். இவர்களது தற்பெருமை இயேசுவை அதிகம் அறிந்துகொள்ள விடவில்லை. ஆயினும் நிக்கதேம் போன்ற தலைவர்கள் இயேசுவிடம் துணிந்து வந்து நன்மைகள் பெற்றனர் (காண். யோவா 3).

**செயல்பட...**

☛ எனது தற்பெருமை இயேசு அனுபவம் பெறத் தடையாக உள்ளதா? பணிந்து இயேசுவிடம் வந்து வாழ்வு பெறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1கொரி 9: 18-19, 22-23 திபா 117: 1-2 மாற் 16: 15-20

## தூய பிரான்சிஸ் சவேரியார்

சென்று போதியுங்கள் என்று தன் சீடர்களை இயேசு பணித்தார். இதன் பின்னணியில் நாம் திருச்சபையின் தன்மைகளையும் கடமையையும் பார்ப்போம்.

### 1. திருச்சபையின் போதிக்கும் பணி

கிறிஸ்துவை அறியாதவர்க்கு கிறிஸ்துவையும் அவர் கொண்டுவந்த ஒப்புரவுச் செய்தியையும் பறைசாற்றுவது கிறிஸ்தவர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

### 2. திருச்சபையின் குணமாக்கும் பணி

மனிதருக்கு வாழ்வு கொடுக்க, உடல், ஆன்ம விடுதலை கொடுக்க இயேசு உலகிற்கு வந்தார். இப்பணி அவருக்குப்பின்பு திருச்சபையால் தொடரப்பட வேண்டும்.

### 3. திருச்சபையின் அதிகாரம்

பாம்புகளைப் பிடித்தும், கொல்லும் நஞ்சைக் குடித்தும் ஆபத்தில்லாமல் இருப்பது என்பதை வார்த்தைக்கு வார்த்தை எடுப்பதைவிட அதன் உள்ளார்ந்த அர்த்தத்தை உணர்ந்துகொள்வது முக்கியம். ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழ்வின் சவால்களைச் சந்திக்க சக்தி பெற்றவராகின்றார் என்பதே உண்மை. கிறிஸ்தவ பண்புகள், கிறிஸ்தவக் கல்வி, வாழ்ந்து காட்டிய சான்றோர் போன்றன இதற்கு உதவுகின்றன.

### 4. திருச்சபை தனித்து விடப்படுவதில்லை

திருச்சபையில், திருச்சபையாக இருந்து கிறிஸ்து செயல்படுகின்றார். இதை அவரே சீடர்களுக்கு வாக்களித்தார். அவரது பிரசன்னம் இன்றும் அனைவருக்கும் பெரும் பலமாக அமைந்துள்ளது.

✔ எனது வாழ்வில் எந்தளவிற்கு கிறிஸ்துவின் பிரசன்னத்தை உணர்ந்து வாழ்ந்து காட்டுகின்றேன்?

✔ அன்று கிறிஸ்து கொடுத்த பணிப்பை இன்று எனதாக்கி உண்மைக் கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து காட்டுகின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 – வியாழன் - மார்கழி 2008

எசா 26: 1- 6 திபா 118: 1, 8-9, 19-21, 25-27 மத் 7: 21, 24-27

### வாக்கு, வாழ்வு

இறைவாக்கிற்கும் வாழ்வுக்கும் முடிச்சு போடுகின்றார் ஆண்டவர். வார்த்தையைக் கேட்பதோடு மட்டும் நின்றுவிடுவதால் வாழ்வு கிடைக்காது. அந்த வாக்கை வாழ்ந்து காட்டவும் வேண்டும்.

**வாக்கும் வாழ்வும்**

இயேசு பழைய ஏற்பாட்டு நூல்களை நன்கு அறிந்திருந்தவர். அதேபோல தச்சுத் தொழில் மூலமாக கட்டடக் கலைகளிலும் அனுபவம் பெற்றிருந்தார். பாலஸ்தீனாவில் வீடு கட்டுமுன் பலவற்றை சிந்திக்க வேண்டும். அங்கு கோடை காலத்தில் மணல்மேடுகளாக இருப்பவை மழை காலத்தில் ஆறாக மாறிவிடும். வீடு கட்டுவோர் மணல்மேடுகளைப் பார்த்து ஏமாந்து விடக்கூடாது. எனவே மணலையும் கடந்து பாறையைக் குடைந்து வீட்டிற்கான அடித்தளமிடும்போதே பெருங்காற்றும் மழையும் வந்தாலும் அது நிலையாக இருக்கும். வாழ்வின் அடித்தளமும் அப்படியே.

***இறைவார்த்தையைக் கேட்ட வேண்டும்:*** அதிகம் பேசிப் பேசி நாம் இறைவார்த்தைக்கு செவிகொடுக்கத் தவறி விடுகின்றோம். இது இன்று இருக்கும் பாரிய சிக்கல். கிறிஸ்து எதைப் போதிக்கின்றார், திருச்சபை எதைப் போதிக்கின்றது என்பதை அறியாமலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் போதனைகள் தரும் சவால்களுக்கு முகம்கொடுக்க விரும்பாமல் அவரது கட்டளைகளை அறிந்துகொள்ளத் தயங்குவோரும் உண்டு. கிறிஸ்துவின் போதனைகளுக்கு செவிசாய்த்து அவை தரும் செய்திகளை அறிந்துகொள்ள முன்வருவோம்.

***இறைவார்த்தையை வாழ்ந்துகாட்ட வேண்டும்:*** திருவிவிலியத்தை நாம் மனனம் செய்யலாம். விவிலிய வசனங்களையும் மனனம் செய்து சந்தர்ப்பங்கள் வரும்போது பாவிக்கலாம். ஆனால் அவற்றின்படி வாழ்ந்து காட்டாவிட்டால் பயனில்லை என்பதே ஆண்டவர் தரும் செய்தி.

☆ எனது வாழ்வில் இறைவாக்கிற்கும் வாழ்விற்கும் உள்ள தொடர்பு என்ன?
☆ இறைவாக்கை எனது வாழ்வின் வழிகாட்டியாக நான் பயன்படுத்து கின்றேனா அல்லது எனது சுயநல வாழ்வில் இருந்துவிடுகின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 ~ வெள்ளி - மார்கழி 2008

எசா 29: 17-24 திபா 27: 1, 4, 11-14 மத் 9: 27-31

### ***பார்வை***

இயேசு பார்வையற்ற இருவருக்கு பார்வை கொடுத்தார். இவர்களது ஆன்மீக அனுபவம் பற்றி சிந்திப்போம்.

**பார்வை இழத்தல்**

பார்வையற்ற தன்மை என்பது பாலஸ்தீனத்தில் மிகவும் கொடூரமான வியாதி. கிழக்கிலிருந்து வரும் சூரிய ஒளியின் கொடுமையும், தூய்மை, சுகாதாரமற்ற நிலையும் ஒருவரை பார்வையற்ற நிலைக்குத் தள்ளுகின்றது. விசேடமாக பாலஸ்தீனத்தில் ஒருவகைப் பூச்சிகளும் தூய்மையற்ற ஈக்களும் கொண்டுவரும் தொற்றுநோய்களால் மக்கள் பார்வையற்ற நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். நற்செய்தியில் வரும் பார்வையற்ற இருவரும் இயேசுவை நோக்கிக் கூவி அவர் பின்னால் சென்றாலும் இவர்களுள் நம்பிக்கை இருந்ததா?

**பார்வையற்றோரின் நம்பிக்கை**

இவர்கள் இயேசுவின் பின்னால் சென்றாலும் இயேசுவோ இவர்களது வேண்டுகோளை உடனேயே நிறைவேற்றவில்லை. இயேசுவின் வல்ல செயல்களைக் கண்ட மக்கள் அவரைப் புகழ்ந்தவண்ணமே சென்றனர். நற்செய்தியில் வரும் பார்வையற்ற இருவரும் மக்களோடு மக்களாக இயேசுவைக் கூப்பிட்டிருக்கலாம். அப்படியாயின் இயேசு சென்றபின் இவர்களும் தமது வழியே போயிருக்கலாம். எனவே இவர்களது கோரிக்கை நேர்மையானதா, இவர்களது தேவை உண்மையானதா என்று அறிய வேண்டியது அவசியம். ஏனெனில் ஏழைகளாக இருப்பதிலும் பல நன்மைகள் இருந்தன. பொறுப்புகள் இல்லை, கடின உழைப்பு இல்லை. எனவே இவர்களது தேவையையும் நம்பிக்கையையும் அறிய இயேசுவே அவர்களிடம் ஓர் பொருத்தமான கேள்வி கேட்டு அவர்களைக் குணமாக்கினார். இவர்கள் மக்களோடு இருந்தாலும் இயேசுவின் தனிப்பட்ட கேள்வி இவர்களை ஆன்மீக அனுபவத்தினுள் கொண்டுவந்தது. 'ஆம் ஐயா' என்று கூறியவர்கள் குணமாக்கலைப் பெற்று சான்றுபகரத் தொடங்கினார்கள்.

✝ எனது விசுவாசம் இயேசு அனுபவத்தினுள் என்னை இட்டுச் செல்கின்றதா?
✝ எனது இயேசு அனுபவம் அவரை அடுத்தவர்க்கு அறிமுகம் செய்யத் தூண்டுகின்றதா? ஆன்மீகப் பார்வை பெற அவரை நம்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 - சனி - மார்கழி 2008

எசா 30: 19-21, 23-26 திபா 147: 1-6 மத் 9: 35-10: 1, 6-8

### பரிவு

இயேசுவைத் தேடி மக்கள் திரளாக வந்தனர். அவர்களது ஆன்மீகத் தாகத்தைக் கண்ட இயேசு பரிவு கொண்டு அவர்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்தார். சீடர்களுக்கும் அதிகாரங்கள் பல கொடுத்து பணிக்கென அனுப்பி வைத்தார்.

### சரீர, ஆன்மீக விடுதலை

ஆயர் இல்லா ஆடுகளைப் போல அலைந்தனர் இயேசுவின் காலத்து மக்கள். பரிவோடு வழிநடத்த வேண்டியவர்கள் தமது கடமைகளை சரிவர செய்யாதபோது மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு ஆன்மீக விடுதலை யோடு சரீர விடுதலையும் தேவைப்பட்டது. எனவே இயேசு பல இடங்களுக்கும் சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றினார்.

***இயேசு பறைசாற்றினார்:*** கடவுளின் இரக்கச் செய்தியைக் கொண்டுவந்த இயேசு அவர் சென்ற இடங்களிலெல்லாம் விண்ணரசைப் பற்றிய நற்செய்தி யைப் பறைசாற்றினார். இதுவே அவரது முதன்மையான பணியாக இருந்தது. ***இயேசு குணமாக்கினார்:*** பலவித நோய்களாலும் துன்பப்பட்ட மக்கள்மீது அவர் மனமிரங்கி அவர்களுக்குப் பணிசெய்தார். தன் சீடர்களையும் பணிக்கென அனுப்பிவைத்தார்.

### இயேசுவின் பரிவுள்ளம்

மக்களைப் பார்த்த இயேசு அவர்கள்மேல் இரக்கம் கொண்டார். அவரது இந்த உள்ளுணர்வு மக்களுக்குத் தேவையான விடுதலையைக் கொடுக்கத் தூண்டியது. சந்தர்ப்பங்கள் கிடைத்தபோது அவர் யூதத் தலைவர்களின் பொறுப்பற்ற தன்மைகளையும் கண்டிக்கத் தவறவில்லை. இந்த இரக்கம் இயேசுவைப் பின்செல்லும் அனைவருக்கும் இருக்க வேண்டும். உலகக் கட்டுகளிலிருந்து விடுதலையைத் தேடும் மக்களுக்கு ஆன்மீக விடுதலை தரும் நிலையான வாழ்வு பற்றிய உண்மையை அறிவிக்க வேண்டியது எமது பொறுப்பு.

✿ இயேசுவின் பரிவுள்ளம் எனக்கும் உள்ளதா? நான் அடுத்தவரை அணுகும் முறையிலிருந்து அதை உணர்ந்துகொள்ளலாம்.

✿ அனைவரும் மீட்புப் பெறவேண்டும் என்பது எனது இலக்காக உள்ளதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருகைக்காலம் 2ம் ஞாயிறு
## 07 - மார்கழி 2008

*எசா 40: 1-5, 9-11 திபா 85: 8-13 2பேது 3: 8-14 மாற் 1: 1-8*

### ஆயத்தம்

மக்களை ஆயத்தம் செய்ய காலத்துக்குக் காலம் இறைபணியாளர்கள் கடவுளால் அனுப்பப்பட்டனர். காலத்தின் தேவைக்கேற்பவும் பின்னணிக்கு ஏற்பவும் இவர்களது பணியும் போதனையும் அமைந்திருந்தன. அவற்றை நாம் அறியும்போது நாம் பெற வேண்டிய செய்தி தெளிவாகிவிடும். எசாயா, திருமுழுக்கு யோவான் இருவரும் மக்களை ஆயத்தம் செய்வதை வாசகங்களில் காணலாம். அவை தரும் செய்தியை அறிய முயல்வோம்.

### பாலைநிலத்தில் கூக்குரல்...

இஸ்ரயேல் மக்கள் தமது பாவங்களுக்குத் தண்டனையாக பாபிலோனில் அடிமைகளாக வாழ்ந்தனர். இக்காலத்தின் பின்னணியில் எசாயா 40-55 வரையுள்ள அதிகாரங்கள் எழுதப்பட்டன. இக்காலத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து, ஆறுதல் அற்றவர்களாக வாழ்ந்தனர். ஆயினும் நெறிந்த நாணலை முறிப்பவர் அல்ல கடவுள். புகையும் திரியை அணைப்பவர் அல்ல அவர். எசாயா மூலமாக எதிர்காலத்திற்கான நம்பிக்கையைக் கொடுத்தார் ஆண்டவர்.

### வழியை ஆயத்தமாக்குங்கள்

இஸ்ரயேலர்கள் எகிப்து நாட்டிலிருந்து விடுதலை பெற்றதை ஒருபோதும் மறந்ததில்லை. அதன் அவலங்களை இவர்கள் பரம்பரை பரம்பரையாக பகிர்ந்து வந்துள்ளனர். இப்போது இவர்கள் பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்தனர். கடவுளையும் அவரது நியமங்களையும் அறிந்தும் இவர்கள் சுயநல வாழ்வு வாழ்ந்துள்ளனர். இதனால் கடவுள் இவர்களைத் தண்டித்தார்.

'வழி' எனும் சொல் விவிலியத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. அது மனிதருக்கும் கடவுளுக்கும் வாழ்வோடு கலந்த ஒன்றாக அமைந்துள்ளது. கடவுளுக்கோ இரண்டு வழிகளே உண்டு. நன்மை, தீமை. தீய வழியிலிருந்து நல்வழிக்கு அழைத்துவருவதே யூதத் தலைவர்களின் கடமையாகும். இந்த வழியை அறிந்துகொள்ளவும் அந்த வழியில் நடந்து வாழ்வு பெறவும் மக்கள் அழைக்கப்பட்டனர்.

### யோவானின் கூக்குரல்

நற்செய்தியை இரண்டு பகுதியாகப் பிரித்துத் தியானிக்கலாம். திருமுழுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோவானின் போதனை, அவரது வாழ்வு. ஆண்டவரின் வழியை அறிவித்து மக்களை ஆயத்தம் செய்வதே திருமுழுக்கு யோவானின் பணியாகும் (மாற் 1: 3). கிறிஸ்தவமே 'வழி' என்றுதான் அழைக்கப்படுகின்றது. (காண். திப 9: 2, 19: 9, 23). திருமுழுக்கு யோவான் மக்களை ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தம் செய்த சம்பவத்திலிருந்து மாற்கு நற்செய்தியாளர் தனது நற்செய்தியைத் தொடங்குகின்றார்.

## யோவானின் செய்தி

இயேசுவின் வருகையை முன்னறிவிப்பதோடு நின்றுவிடாமல் யோவான் மக்களை ஆயத்தம் செய்தார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறைவாக்கினர்கள் கடவுளின் வழியை மக்களுக்கு அறிவித்தாலும் வழியாகிய இயேசுவையே திருமுழுக்கு யோவான் அறிவித்து மக்களை ஆயத்தம் செய்ய அழைத்தார். பாவங்களை அறிக்கையிட்டு திருமுழுக்குப் பெறுவதன் மூலமாக ஒருவர் தம்மை ஆயத்தம் செய்யலாம். ஒப்புரவு இங்கு செய்தியின் நோக்கமாகின்றது. ஒருவர் தனக்கும் அடுத்தவருக்கும், இறைவனுக்கும் தம் பாவங்களை அறிக்கையிடுவதன் மூலமாக உண்மையான ஒப்புரவு இடம்பெறுகின்றது. இவ்வாறு ஆயத்தம் செய்பவர் இயேசுவை அறியவும், ஏற்கவும் தம்மை தயார் செய்கின்றார்.

## யோவானே வழியாக...

யோவான் தனது வாழ்வின் மூலமாகவே கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லும் வழியாக வாழ்ந்து காட்டினார். எவ்வாறு?

1. அவர் பாலைநிலத்தில் வாழ்ந்தார். அது கடினமான வாழ்வு. சொகுசு இல்லாத, பாதுகாப்பு இல்லாத வாழ்வு. ஆன்மீக வாழ்வு.
2. அவர் ஒட்டக முடியை ஆடையாக அணிந்திருந்தார். ஆடம்பரமற்ற வாழ்வு இது. இது உலகப் போக்குகளுக்கு இடமளிக்கவில்லை.
3. வெட்டுக்கிளியும் காட்டுத் தேனுமே அவரது உணவு. ஏழ்மை வாழ்வு இது. உடல் பசியல்ல இறைத்தாகமே அவரது முன்னுரிமை.

## வாழ்ந்துகாட்ட...

☆ திருமுழுக்கு யோவானைப் போல இன்று வாழ்வது எனது அழைப்பல்ல. ஆனால் அவர் கொண்டுவந்த செய்தியை வாழ்ந்து காட்டுவது எனது கடமையாகும். இதை உணர்ந்திருக்கின்றேனா?

☆ மனமாற்றம், ஒப்புரவு எனது வாழ்வின் நாளாந்த செயலாக மாறியுள்ளதா? நான் தினமும் கடவுளின் புதுப்படைப்பாக மாற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 – திங்கள் - மார்கழி 2008

தொநூ 3: 9–15, 20 திபா 98: 1–4 எபே 1: 3–6, 11–12 லூக் 1: 26–38

## தூய மரியாவின் அமலோற்பவப் பெருவிழா

மரியா தொடக்கத்திலிருந்தே கடவுளால் விசேட பணிக்காக அழைக்கப் பட்டவர் என்பதில் ஐயமில்லை. அவரது அழைப்பு நிகழ்ச்சியும் தொடக்கத்தில் இறைவனின் வாக்கும் (காண். தொநூ 3: 15) இதற்கு சான்றுகள். இயேசுவின் பிறப்பிற்கு தளமாக அமைய அழைக்கப்பட்ட மரியாவின் உள்ளுணர்வுகளைப் பார்ப்போம்.

### அருள் மிகப் பெற்றவர்...

கிரேக்கத்தில் 'அருள்' எனும் சொல் மகிழ்ச்சி, ஞானம் ஆகிய இரு சொற்களோடு இணைந்துள்ளது. இங்கு அருள் மிகப் பெற்றவர் என்று குறிப்பிடப்படுவதை நிறைவு என்று பார்ப்பதைவிட அவர் இறைவனின் பணியாளராக செயல்பட அழைப்புப் பெறுகிறார் என்பது பொருந்தும். அதேபோல மரியாவின் நற்குணங்களின் பயன்களைவிட மரியாவின் நற்குணங்களே அழுத்தம் பெறுகின்றன. மரியா கடவுளின் அருளினதும் நன்மைத்தனத்தினதும் இலக்காக அமைந்துள்ளார். மரியா தொடக்கத்திலிருந்தே ஆயத்தம் செய்யப்பட்டவராக இருந்ததால் கடவுளின் அருளும் அவருள் வழிந்தோடியுள்ளது. அதேபோல விவிலியத்தில் மரியாவே மனிதருள் அதிகம் ஆசீரையும் வாழ்த்துக்களையும் பெற்றவராகின்றார் (காண். லூக் 1: 28, 30, 35, 42–49, 2: 19, 34).

### ஆண்டவர் உம்முடனே...

இந்த வார்த்தைகள் சாதாரண வாழ்த்தாகத் தெரிந்தாலும் (காண். ரூத் 2: 4) இது ஆண்டவரிடமிருந்து வருவதால் தனித்துவமான பணியையும் சிறப்பையும் பெறுகின்றது. மீட்பராம் இறைவனின் வாக்கு இங்கு நிறைவேறத் தொடங்குகின்றது. தனது சிறப்பு அழைப்பு பற்றிய விபரங்களை அறிந்த மரியா அவற்றை தனியே சிந்தித்து வந்தார். அவர் கலங்கினாலும் இறைவன் தன்னோடு இருக்கிறார் (இம்மானுவேல்) எனும் நம்பிக்கையில் இதுவரை வாழ்ந்தவர் அதை உறுதி செய்து அவரது கட்டளைக்கு தன்னைப் பணித்தார்.

➡ மரியாவுக்கு வந்த அழைப்புபோல் எனக்கும் ஓர் அழைப்பு உண்டு என்பதை உணர்ந்து கடவுளின் அழைப்புக்கு 'ஆம்' என்றுள்ளேனா?

➡ எனது அழைப்பு என்ன? எனது அர்ப்பணிப்பு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 - செவ்வாய் - மார்கழி 2008

*எசா 40: 1-11 திபா 96: 1-3, 10-12 மத் 18: 12-14*

### இறையன்பு

காணாமற்போன ஆடு பற்றிய உவமையின் மூலமாக இறைவனின் அளப்பரிய அன்பை எடுத்துரைக்கிறார் இயேசு.

**தேடும் ஆயர்**

அன்று பாலஸ்தீனாவின் நில இயல் அமைப்பில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகள் இலகுவாக வழிதவறி சென்றன. அங்கு மேய்ச்சல் நிலம் சமதரையில் இருக்கவில்லை. அவை மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் இருந்தன. இவற்றில் ஒடுக்கமான மலைப்பகுதிகளும் குழிகளும் கணவாய்களும் இருந்தன. மேய்ச்சல் பகுதிகளும் பரந்து இருந்தன. எனவே ஆடுகள் மலைகளுக்கிடையேயும் கணவாய்களிலும் சிக்கிவிடும். யாராவது அவற்றைத் தேடிவந்து காக்காவிட்டால் இறக்கும்வரை அவை அதனுள் இருக்கும்.

இந்தப் பின்னணிகளை அறிந்திருந்த பாலஸ்தீன ஆயர்கள் துணிவோடு அவற்றைத் தேடிச் சென்று, காத்து, மீட்டுவருவர். தமது ஆடுகள் பல மைல் தொலைவு சென்றிருந்தாலும் அவற்றின் அடிச்சுவடுகளைப் பார்த்துத் தேடிச் செல்வர். வெற்றியோடு வந்தால் கொண்டாட்டமும் நிச்சயம். ஏனெனில் இழந்ததை அடைந்த மகிழ்ச்சி, வெற்றியோடு திரும்பிய மகிழ்ச்சி இரட்டிப் பாகிறது. அதேபோல அன்றைய சமூகத்தில் ஆடு வளர்ப்பு என்பது ஓர் சமூகச் செயலாக இருந்தது. பலர் ஒன்றாகக் கூடி தமது மந்தையை பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்வர். ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவும் காட்டு மிருகங்களிடமிருந்து தமது மந்தைகளைக் காக்கவும் இது உதவியது. இந்நிலையில் ஒரு ஆடு வழிதவறிச் சென்றால் அந்த ஆயர் ஏனைய ஆடுகளை இவர்களின் கண்காணிப்பில் விட்டுச் செல்லலாம்.

**தேடிவரும் கடவுள்**

தொடக்கத்திலிருந்தே மனிதன் பாவம் செய்தான். ஆனால் மனிதனை தன்னோடு ஒப்புரவாக்க கடவுள் மனிதனைத் தேடிவந்துள்ளார். சரித்திரம், விவிலியம் இதற்கு மிகுதியான சான்றுகளைத் தருகின்றன. ஏனெனில் கடவுள் இரக்கமும் பரிவும் உள்ளவர்.

➠ இன்று நான் காணாமற்போன செம்மறியா? இறைவனின் இரக்கத்தை உணர்ந்து அவரிடம் திரும்பி புதுவாழ்வு வாழலாமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசா 40: 25-31 திபா 103: 1-4, 8, 10 மத் 11: 28-30

## இளைப்பாறுதல்

வாழ்வின் பல பாரங்களால் சோர்ந்துபோயிருந்த மக்களுக்கு ஆறுதல் தருகின்றார் இயேசு. அவரது நுகம் என்பது என்ன?

### வாழ்வின் சுமைகள்

இயேசுவின் காலத்தில் கடவுளை அறியவும், நல்லவர்களாக வாழவும் பலர் முயன்று நலிந்து போயிருந்தனர். இவர்களுக்கு இயேசுவின் அழைப்பு திறந்துவிடப்பட்டுள்ளது. கடவுளை அறிவது கடினம். அப்படி அறிந்தாலும் அதை அடுத்தவர்க்கு விளக்குவது கடினம் என்று கிரேக்கர் கூறுவார்கள். கடவுளைத் தேடும் முயற்சி இயேசுவில் முடிவுறுகின்றது என்பது இயேசுவின் செய்தி. யூதர்களுக்கு சட்டமும் அதைக் கடைப்பிடித்தலும் பெரும் பாரமாகியது. மோசே ஆரம்பத்தில் நல்ல நோக்கோடு சட்டத்தைக் கொடுத்தாலும் யூதத் தலைவர்கள் அவற்றை கடைப்பிடிக்க முடியாதளவிற்கு மாற்றிவிட்டார்கள். இதிலிருந்து விடுபட இவர்களால் முடியவில்லை.

### நுகம் அழுத்தார், எளிதானது

பாலஸ்தீனாவில் எருதுகளுக்கு மரத்தினாலான நுகத்தடி செய்வார்கள். இதற்கு எருது கொண்டுவரப்பட்டு, அளவு எடுத்து அதைச் செய்வார்கள். எனவே அது எருதுக்கு அளவாக அமைய அது பாரமாக எருதுக்கு இருக்காது. அது கழுத்தை அழுத்தாது, எளிதாக எருதுக்கு இருக்கும். இந்த பின்னணியில் இயேசு அவர் தரும் நுகம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

என் சுமை எளிதாயுள்ளது என்றார் அவர். எமக்கு வாழ்வு தந்தவர் அவர். அவரே எமது பலம், பலவீனம், வாழ்வை அறிந்திருக்கிறார். எனவே அவர் தரும் அழைப்பு, பணி, வாழ்வு எல்லாம் அதற்கேற்பவே அமைந்திருக்கும். எம்மால் தாங்க முடியாததை தருபவர் அவரல்ல. ஏனெனில் இங்கு அன்பு எனும் தன்மையும் அடங்கியுள்ளது. ஏனெனில் அன்போடு கொடுக்கப்படும் பாரமும், அன்போடு பெறப்படும் பாரமும் பாரமாகத் தெரியாது, எளிதாகவே தெரியும். பெற்றோர் பிள்ளைகள் உறவில் இதை நாம் காண்கின்றோம்.

- என்னையும், கடவுளையும் அடுத்தவரையும் அன்பு செய்வதே எனது பாரம் என்று உணரும்போது அதுவே இன்பம். அது கடினமற்றது.
- எனது மனநிலையை சோதித்து இயேசு தரும் நுகத்தை ஏற்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 – வியாழன் - மார்கழி 2008

எசா 41: 13–20 திபா 145: 1, 9–13 மத் 11: 11–15

### துன்பங்கள்

திருமுழுக்கு யோவானைப் பற்றி சான்று பகர்ந்த இயேசு விண்ணரசு பற்றிய ஓர் முக்கிய செய்தியையும் குறிப்பிடுகின்றார். விண்ணரசு அல்லது இறையாட்சி பற்றிய செய்தி குழப்பமாகத் தோன்றுகின்றது. இயேசுவின் வார்த்தைகளின் பின்னால் உள்ள செய்தியைப் பார்ப்போம்.

**வன்முறையும் விண்ணரசும்**

இயேசுவின் இந்த வார்த்தைகளைப் பற்றி பல விளக்கங்கள் கொடுக்கப் பட்டன. இயேசு மனிதராகப் பிறந்து பணிவாழ்வைத் தொடங்கியதிலிருந்து அவருக்கு எதிர்ப்புகள் வந்தன. வார்த்தைகளால் வன்முறைகள் தொடங்கி பின் அவரை சிலுவையில் கொன்று தமது வன்முறையைக் காட்டினார்கள் அவரது எதிரிகள். இயேசு முன்வைத்த விண்ணரசை அழிக்க வேண்டும் என்று செயல்பட்டவர்கள் பலர். விண்ணரசு அறிவிக்கப்படத் தொடங்கிய திலிருந்து எதிர்ப்புகள் வந்தவண்ணமே இருந்தன. இயேசுவின் போதனைகள் எதிர்க்கப்பட்டன. அவரது வருகையையும் வாழ்வையும் சவாலாகவே கருதியது யூதத் தலைமை. எனவே இந்த துன்பங்களும் சவால்களும் தன் சீடர்களுக்கும் வரும் என்பதை அறிந்திருந்த இயேசு அதை முன்குறித்து வைக்கின்றார்.

**வன்முறையும் நம்பிக்கையும்**

விண்ணரசு என்பது தன் மக்களுக்கான இறைவனின் திட்டம். இயேசு அதை அறிமுகம் செய்தார். அதை அடைய அனைவரையும் அழைத்தார். அழைப்பை ஏற்பவர்கள் அதன் சவால்களையும் எதிர்கொள்ள ஆயத்தமாக வேண்டும். திருச்சபை சரித்திரத்தில் பலர் எதிரிகளிடமிருந்து வன்முறைகளை பல கோணங்களிலிருந்து சந்தித்துள்ளனர். ஆனால் அதையும் கடந்து அழைத்த கடவுளில் நம்பிக்கை வைத்து வாழ்ந்து காட்டும்போது அந்த விண்ணரசுக்கு உரிமையுள்ளவராகிறார். இதற்கு ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும், விடாமுயற்சி வேண்டும். ஆண்டவருக்காக எதையும் செய்யத் துணிவும் பக்குவமும் வேண்டும்.

➪ விண்ணரசு பற்றிய எனது நம்பிக்கை என்ன?

➪ விண்ணரசில் பங்கேற்க நான் உரிமையுள்ளவன், உரிமையுள்ளவள் என்று என்னால் உறுதியோடு கூறமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 – வெள்ளி - மார்கழி 2008

எசா 48: 17–19 திபா 1: 1–4, 6 மத் 11: 16–19

## *மனநிலை*

ஓர் சிறிய உதாரணத்தின் மூலமாக தன் காலத்து மக்களின் மனநிலையை வெளிப்படுத்துகின்றார் இயேசு. இறைவனின் செய்தியை ஏற்க மறுப்பவர்கள் யார் வந்து எதைச் சொன்னாலும் அதை மறுக்க ஏதாவது காரணங்களைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இவர்களைச் சாடுகிறார் இயேசு.

### இயேசுவின் கவலை

தமது விருப்பத்திற்கு ஏற்றாற்போல எதுவும் அமையவில்லையென்றால் அலட்சியப் போக்கோடு மக்கள் இருப்பதை இயேசு கண்டார். இறையாட்சி மலரும் இந்த காலத்திலும் மக்கள் தமது பிடிவாதத்தோடு இருந்ததைக் கண்ட அவர் ஓர் சிறந்த உதாரணத்தின் மூலமாக தனது கவலையை வெளிப்படுத்தினார். சிறுவர்களின் விளையாட்டை மையமாக வைத்து தனது செய்தியைக் கொடுத்தார். ஊர் எல்லையில் விளையாடும் சிறுவர்கள் தமது நண்பர்களுக்கு அழைப்பு விடுப்பர். இன்று திருமணக் கொண்டாட்ட விளையாட்டு என்றால் அவர்களது நண்பர்கள் இன்று நாம் மகிழும் மனநிலையில் இல்லை என்பார்கள். அப்படியென்றால் மரண வீட்டை மையமாக வைத்து விளையாடுவோம் என்றால் இன்று நாம் புலம்பும் மனநிலையிலும் இல்லை என்பார்கள். எதைச் சொல்லி அழைத்தாலும் அதற்கு ஓர் சாக்குப்போக்குக் கூறுவார்கள். இது இவர்களது மனநிலையைக் காட்டுகின்றது.

### திருமுழுக்கு யோவானும் இயேசுவும்

மனமாற்றத்திற்கென யோவானும் இயேசுவும் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். இந்த அழைப்பை ஏற்றால் தமது சுயநல வாழ்வையும் பாதுகாப்பையும் இழக்க வேண்டிவரும் என்பதால் யூதத் தலைமை தம்மைப் பாதுகாக்க திருமுழுக்கு யோவானையும் இயேசுவையும் குறைகூறத் தொடங்கியது. யோவான் பேய்பிடித்தவர் என்றும் இயேசுவைப் போசனப் பிரியர் என்றும் கூறினார்கள். ஆயினும் இவர்கள் மக்களை இறைவனிடம் கொண்டுவருவதில் கருத்தாயிருந்தார்கள் என்பதே உண்மை.

☛ இயேசு, அவரது போதனைகள் தரும் சவால், திருச்சபை, அதன் போதனைகள் பற்றிய எனது மனநிலை என்ன? இவற்றில் குறைகண்டு எனது தவறுகளை மறைக்கப் பார்க்கின்றேனா? சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீஞா 48: 1-4, 9-11 திபா 80: 1-2, 14-15, 17-18 மத் 17: 10-13

## இயேசு

எலியாவின் வருகை பற்றிய கேள்விக்கு இயேசு ஆழமான விளக்கம் கொடுத்தார். எலியாவின் வருகை பற்றிய மக்களின் எதிர்பார்ப்புக்கு இந்த செய்தி முரணாகவே இருந்தது.

### மக்களின் எதிர்பார்ப்பு

மெசியா வருவதற்கு முன்பாக எலியா வந்து அவரது வருகை பற்றி மக்களுக்கு அறிவிப்பார் என்பது யூதர்களின் நம்பிக்கை. மலாக்கி நூலிலும் அவ்வாறு கூறப்பட்டுள்ளது (மலா 4: 5, 6). இந்த எண்ணம் மக்களது மனதில் பதிந்து எலியாவிடமிருந்து பலவற்றை எதிர்பார்த்தார்கள். அவர் வந்து அனைத்தையும் சீர்செய்து மெசியாவின் வருகைக்கு ஏற்றதாக உலகை மாற்றுவார். இந்த சிந்தனை இன்னும் வளர்ந்து எலியா எல்லாத் தீமைகளையும் தகர்த்து அனைத்தையும் சரியாக்கும் ஓர் சீர்திருத்தவாதியாகப் பார்த்தார்கள். இந்த சிந்தனையின் விளைவாக எலியாவையும் மெசியாவையும் சக்தியும் அதிகாரமும் கொண்டவர்களாகவே எதிர்பார்த்தனர் மக்கள்.

### திருமுழுக்கு யோவான், இயேசு

இயேசு முதலில் சீடர்களின் எதிர்பார்ப்பையும் மனநிலையையும் மாற்றுகின்றார். எலியா ஏற்கெனவே வந்துவிட்டார் என்பது இயேசுவின் போதனை. இந்த எலியாவே திருமுழுக்கு யோவான். அவர் எரிக்கும் நெருப்பாக அல்ல, மாறாக துன்புறும் பணியாளனாகவே வருவார். கடவுள் அனைத்தையும் தகர்த்து சீராக்குபவர் அல்ல. மாறாக, தனது தியாக அன்பினால் மக்களின் மனங்களை அசைப்பவர். மக்கள் அவரது அன்பையும் இரக்கத்தையும் உணர்ந்து மனம்மாறி ஒப்புரவாக வேண்டும் என்பதே அவரது நோக்கம். இதை தன் சீடர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். முழுமையாகப் புரிந்துகொள்ளும்வரை இவர்கள் அமைதிகாக்க வேண்டும். சென்று போதிப்பதற்கு முன்பாக இவர்கள் இயேசுவையும் அவரது சிலுவை மரணத்தின் நோக்கத்தையும் அறிந்துகொள்ள வேண்டும்.

✝ இன்று இயேசு பற்றிய எனது மனநிலை என்ன?

✝ இயேசுவை நான் தண்டிக்கும் கடவுளாகவா அல்லது நல்ல நண்பனாகவா பார்க்கிறேன்? அவர் வாழ்வு தருபவர், அவரை நம்பி வாழ்வு பெறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருகைக்காலம் 3ம் ஞாயிறு
## 14 - மார்கழி 2008

எசா 61: 1-2, 10-11 லூக் (பதிலுரை) 1: 47-50, 53-54 1தெச 5: 14-24
யோவா 1: 6-8, 19-28

### இயேசு

விடுதலை தருபவர் ஆண்டவர். அவரது வருகை மக்கள் மனங்களிலும் வாழ்விலும் மலர்ச்சியைக் கொண்டுவரும். இந்த ஆண்டவரின் வருகையையும் குணவியல்புகளையும் எசாயாவும் திருமுழுக்கு யோவானும் முன்னறிவிக்கிறார்கள். இயேசு கொண்டுவந்த மீட்பை ஏற்று வாழ்வுபெற ஒருவருக்கொருவர் ஊக்கமூட்ட வேண்டுமென தூய பவுல் அழைக்கின்றார். இயேசுவின் வருகை தரும் நன்மைகளைப் பார்ப்போம்.

### விடுதலையின் செய்தி

மக்கள் அன்றும் இன்றும் பல வழிகளில் துன்பப்பட்டவர்கள். உலகம் தரும் சோதனைகள் ஒருபுறம், வாழ்வைப் புரிந்துகொள்ள முடியாத நிலை மறுபுறம். அரசியல் அழுத்தங்கள் ஒருபுறம், சமயச் சடங்குகள் மறுபுறம். இவற்றிலிருந்து விடுபட முடியாத நிலையில் மக்கள் இருக்க ஆறுதலும் விடுதலையும் தரும் செய்தியைக் கொடுக்கிறார் எசாயா இறைவாக்கினர். ஒடுக்கப்பட்டோர், உள்ளம் உடைந்தோர், சிறைப்பட்டோர், கட்டுண்டோருக்கு ஆறுதல் தரும் செய்தி இது. தீமையைத் தகர்த்து நன்மை வழங்கும் மீட்பராக ஆண்டவர் வரவிருக்கிறார். இறைவனின் ஆற்றல் அவரோடு உள்ளது. இயேசுவும் இப்பகுதியை வாசித்து மெசியாவின் காலம் வந்துவிட்டது என்று வலியுறுத்தினார் (காண். லூக் 4: 18-19). ஆண்டவரின் ஆவி என்மேல் உளது என்பது இறைவனின் ஆற்றல், செயல்பாடு அவரில் உள்ளது என்பதைக் குறிக்கின்றது.

நன்மைகள் பெறும் மக்களின் ஆறுதல், விடுதலை, பெருமகிழ்ச்சியை மணமக்களின் மகிழ்ச்சிக்கு ஒப்பிடுகின்றார் எசாயா. மெசியாவின் வருகை தீயோருக்கு சவாலானதாகவும் பல காரணங்களுக்காக துன்புறுவோருக்கு நல்ல செய்தியாகவும் அமையும். அதேபோல ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தம் செய்யும் எமக்கு அவரது வருகை நிரந்தர விடிவையும் மகிழ்ச்சியையும் தரப்போகின்றது. அந்த விடுதலை சரீர, ஆன்மீக, தனித்துவ, சமூக விடுதலையாக அமையும். ஆனால் அதற்கு நாம் ஆயத்தமாகின்றோமா என்று சிந்திக்க முதல் வாசகம் எம்மைத் தூண்டுகின்றது. அவரது மகிழ்ச்சியில் பங்குகொள்ள நாம் தகுதியுள்ளோரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுழுக்கு யோவானின் சான்று

வரவிருக்கும் மெசியாவாகிய இயேசுவிற்கும் தனக்குமிடையே உள்ள உறவை, இடைவெளியை மக்களுக்குத் தெளிவுபடுத்த திருமுழுக்கு யோவானின் சான்று இங்கு மிக அவசியமாகின்றது. மக்களும் 'நீர் யார்?' என்று நேரடியாகவே திருமுழுக்கு யோவானிடம் கேட்டனர். ஒருதடவை இயேசுவை உறுதி செய்ய யோவானே தன் சீடர்கள் மூலமாக 'வரவிருப்பவர் நீர் தாமா? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா?' என்று கேட்டனுப்பினார் (காண். லூக் 7: 20). யூதர்கள், யூதத் தலைவர்களும் இயேசுவிடம் நீரா மெசியா என்று பல கேள்விகளைக் கேட்டுள்ளனர் (காண். யோவா 8: 25). இது அவசியம். ஏனெனில் கிறிஸ்தவம் உருவாகிய பின்பும் யோவானின் சீடர்கள் தனித்து செயல் பட்டுள்ளனர் (காண். திப 19: 1-7).

மக்களின் கேள்விகளுக்கு திருமுழுக்கு யோவான் பதில் கூறினார். 'அவர் நானல்ல' என்பது அவரது ஒரே பதில். இயேசு பல தடவைகள் தன்னைப் பற்றி விளக்கியபோது 'நானே' எனும் பதத்தைப் பயன்படுத்தியுள்ளார் (காண். யோவா 6: 35, 8: 12, 24, 9: 5, 7, 9, 14, 11: 25). இதற்கு எதிர்மாறாக யோவானும் 'அவர் நானல்ல' என்பதன் மூலமாக 'நான் மெசியா அல்ல' என்பதை வலியுறுத்துகின்றார். அதேபோல 'அவரது மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை' என்பதன் மூலமாக தன்னைத் தாழ்த்தி மெசியாவின் உண்மைத் தன்மைக்கு சான்று பகர்கின்றார்.

## ஒருவருக்கொருவர் ஆறுதல்

இயேசு கொண்டுவந்த விடுதலை, மகிழ்ச்சி, ஆறுதலை மக்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. அவரை ஓர் எதிரியாகவே பார்த்தார்கள். அவரை வெற்றி வீரராக, அரசராகப் பார்த்தவர்கள் அவரது மரணத்தால் நம்பிக்கை குன்றியிருந்தார்கள். இரண்டாம் வருகையாவது மிக விரைவாக இருக்கும் என்று நம்பியவர்களுக்கும் ஏமாற்றமே கிடைத்தது. எனவே நம்பிக்கை கொண்டவர்கள் நம்பிக்கை இழந்தவர்களுக்கு ஆறுதலாகவும் பலமாகவும் இருக்க வேண்டுமென தூய பவுல் தெசலோனிக்க மக்களுக்கு அறிவுறுத்தினார்.

## வாழ்விற்கு...

☆ இயேசுவை எனது ஆன்மீக விடுதலை வீரராக நான் உணர்ந்துள்ளேனா?

☆ அந்த ஆன்மீக விடுதலையைப் பெற நானே எனது சுயநல வாழ்வின் மூலமாக எனக்குத் தடையாக இருந்திருக்கின்றேனா?

☆ வாழ்வு தருபவர் இயேசு. வாழ்வைத் தேடிச் செல்ல வேண்டியவர் நான் என்பதை உணர்ந்து செயல்படுவேன், வாழ்வு பெறுவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 - திங்கள் - மார்கழி 2008

எண் 24: 2-7, 15-17 திபா 25: 4-6, 7-9 மத் 21: 23-27

### *அதிகாரம்*

இயேசுவின் அதிகாரம் பற்றி யூதத் தலைவர்கள் கேள்வி எழுப்பினார்கள். இயேசுவும் அவர்களிடமே ஓர் கேள்வி கேட்டு அவர்களது வாயை அடைத்தார்.

**இயேசுவின் அதிகாரம்**

இயேசுவின் போதனை, குணமாக்கல்கள், பேய்களை ஓட்டுதல், இயற்கையைக் கட்டுப்படுத்துதல் போன்றன மக்களை மலைக்க வைத்தது. இந்த பின்னணியில் தலைமைக் குருக்களும் மக்களின் மூப்பர்களும் அவரது அதிகாரத்தைப்பற்றி வினவ இயேசுவோ நேரடியான பதிலைக் கூறவில்லை. எனது அதிகாரம் கடவுளிடமிருந்தே வருகின்றது என்றால் அவரைத் தீர்த்துக்கட்டிவிடுவார்கள். ஆனால் அவரது நேரம் இன்னும் வராததால் அவர் இதுபோன்ற பல கேள்விகளுக்கு விடையை பிற்போட்டார். அதேவேளை இயேசுவின் கேள்வி இந்தத் தலைவர்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

**தலைவர்களின் அறியாமை**

இயேசு யோவானின் திருமுழுக்கு அதிகாரம் பற்றி அவர்களைக் கேட்டார். யோவான் மெசியாவை முன்னறிவித்தவர். மக்கள் பலர் அவரில் நம்பிக்கை வைத்து திருமுழுக்குப் பெற்றனர். இவரது அதிகாரம் விண்ணகத்திலிருந்து வந்தது என்றால் அவர் முன்னறிவித்த மெசியாவாகிய இயேசுவை நம்பி ஏற்றாக வேண்டும். அதற்கு இவர்கள் ஆயத்தமாக இல்லை. அதேவேளை யோவானின் அதிகாரத்தை மறுத்தால் மக்களின் சினத்திற்கு அளாக வேண்டிவரும். எனவே இவர்கள் தாம் புத்திசாலித்தனமான பதில் கூறுகிறார்கள் எனும் எண்ணத்தோடு எமக்குத் தெரியாது என்றார்கள். இதிலும் இவர்களது மடமை வெளிப்படுகின்றது. ஓர் இறைவாக்கினர் தோன்றினால் அவர் உண்மையானவரா போலியானவரா என்று அவரது போதனைகள், வாழ்விலிருந்து கண்டறிந்து மக்களை வழிநடத்த வேண்டிய இந்தத் தலைவர்கள் எங்களுக்குத் தெரியாது என்றார்கள். இவர்கள் தமக்குத் தாமே சாபத்தை வருவித்துக் கொள்கிறார்கள்.

* இயேசுவின் அதிகாரம் அன்போடும் இரக்கத்தோடும் பிணைந்துள்ளது என்பதை அறிந்துள்ளேனா? அவர் என்னை, எனது வாழ்வை ஆட்சி செய்ய வேண்டும். அதற்கு எனது ஒத்துழைப்பு அவசியம். செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 - செவ்வாய் - மார்கழி 2008

செப் 3: 1-2, 9-13 திபா 34: 1-2, 5-6, 16-18, 22 மத் 21: 28-32

### வாழ்வு

இரு புதல்வர்கள் உவமையின் மூலமாக எமது வாக்கிற்கும் வாழ்விற்கும் உள்ள தொடர்பை ஆராயத் தூண்டுகின்றார் இயேசு.

### இரண்டு மகன்கள்

தந்தையின் கட்டளைக்கு 'நான் போக விரும்பவில்லை' என்று கூறிய மூத்த மகன் பின் தன் எண்ணத்தை மாற்றி தந்தையின் கட்டளையை நிறைவேற்றினான். இளையவனோ 'நான் போகிறேன் ஐயா' என்று கூறி பின் தனது மனதை மாற்றி செயல்படவில்லை. இதுவே இயேசுவின் உவமை.

இந்த உலகில் இரண்டு வகையான மனிதர்கள் இருக்கின்றனர். முதல் வகையினரின் வாழ்க்கைத் தொழில் அவர்களது நடைமுறை வாழ்வைவிட சிறப்பானது. அதாவது இவர்களது வாக்கிற்கும் வாழ்விற்கும் தொடர்பில்லை. இவர்கள் எதையும் வாக்களிப்பார்கள் ஆனால் நிறைவேற்ற மாட்டார்கள்.

இரண்டாவது வகையினரின் நடைமுறை வாழ்வு அனைத்தையும்விட மேலானது. இவர்கள் பார்வைக்கு கடினமானவர்களாக, சுயநலவாதிகளாக, உலகப் போக்குடையவர்களாக இருந்தாலும் உள்ளார கடவுளைத் தேடுபவர் களாகவும் கடவுளின் கட்டளைகளை நிறைவேற்ற ஆர்வம் உள்ளவர்களாக வும் இருப்பர். ஆனால் உலகப்போக்கு, சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவர்களை தீயவர்களாகக் காட்டுகின்றது.

ஆயினும் இரண்டு வகையினரும் பாராட்டுதலுக்கு உரியவர்களல்ல. தமது அழைப்புக்கு ஏற்ப வாழ்பவர்களே உண்மை மனிதர்கள்.

### பரிசேயரும், பாவிகளும்

கடவுளின் சட்டப்படி நடப்போர் நாம் என்று பரிசேயர்களும் யூதக் குருக்களும் கூறினாலும் இவர்கள் நடைமுறையில் அன்பற்றவர்களாக, இரக்க மற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அதேவேளை வரிதண்டுவோரும் பாவிகளும் கடவுளை அடையவும் புதுவாழ்வு பெறவும் ஆர்வத்தோடு ஆண்டவரிடம் வந்தனர். இவர்கள் மேலானவர்கள். கடவுளின் கட்டளைப்படி வாழ்வோம் என்று வாக்களிப்பதைவிட வாழ்ந்துகாட்டுவதே மேலானது.

- ✿ எனது நம்பிக்கை, அழைப்புக்கும் வாழ்விற்கும் உள்ள தொடர்பு என்ன?
- ✿ திருமுழுக்கு வாக்குகளுக்கேற்ப நான் வாழ்ந்து வருகின்றேனா?
- ✿ வாக்கிற்கும் வாழ்விற்கும் உள்ள தொடர்பு பற்றித் தெளிவாயிருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 ~ புதன் - மார்கழி 2008

தொநூ 49: 1-2, 8-10 திபா 72: 1-4, 7-8, 17 மத் 1: 1-17

### *தலைமுறை*

இதுவரை நாம் இயேசுவின் இரண்டாம் வருகை பற்றி சிந்தித்தோம். இன்று முதல் திருச்சபை இயேசுவின் முதல் வருகை பற்றிய சிந்த னைக்கு எம்மை அழைக்கின்றது. அதற்கேற்ப வாசகங்களும் அமைந்திருக்கும்.

**தலைமுறை அட்டவணை**

ஒருவரது தலைமுறை அட்டவணை இன்று எமக்கு பொருளற்றதாக இருக்கலாம். ஆனால் யூதர்களுக்கு இது மிக முக்கியமானது. அதன் அடிப்படையில் அவரது மேன்மையைக் கணிப்பார்கள். யூதருக்கு என்று தனது நற்செய்தியை எழுதும் மத்தேயு இயேசுவின் தலைமுறை அட்டவணையை தனது நற்செய்தியின் தொடக்கத்திலேயே தருகின்றார். இயேசு முதல் ஆபிரகாம் வரைக்கும் இந்த தலைமுறை விபரம் கொடுக்கப் பட்டுள்ளது. இது 14 நபர்களைக் கொண்டு மூன்று பகுதிகளாக அமைத்துள்ளார் மத்தேயு. யூதர்களின் சரித்திரத்தின் மூன்று முக்கிய கட்டங்களை இது உணர்த்துகின்றது. ஆன்மீக உண்மைகளையும் இது வெளிப்படுத்துவதை நாம் காணலாம். யாரும் இந்த தலைமுறை அட்டவணையை மனனம் செய்து நினைவில் வைத்திருக்கலாம்.

**அட்டவணையின் மூன்று பிரிவுகள்**

1. ஆபிரகாம் தொடங்கி தாவீது அரசரின் காலம் வரைக்குமானது. இஸ்ரயேலை ஒரு சக்திமிக்க அரசாக மாற்றியவர் தாவீது. தாவீதே இஸ்ரயேலின் மிகப் பெரிய அரசராவார். இயேசு தாவீதின் மகன் என்று இங்கு காட்டப்படுகின்றது.
2. பாபிலோனிய அடிமைத்தனம் வரைக்குமானது. மக்களின் பாவங்களால் கடவுள் நாட்டையே தண்டித்த சம்பவம் இது. இஸ்ரயேல் அரசின் அழிவையும், அவமானத்தையும் காட்டுகின்றது.
3. கிறிஸ்து இயேசுவின் காலம் வரைக்குமானது. கிறிஸ்துவே உலகின் மீட்புக்கு தனது வருகையின் மூலமாக வழிவகுத்தவர் என்பதை மத்தேயு வலியுறுத்துகின்றார்.

இ வாழ்வு, தாழ்வு, மறுவாழ்வு. இந்த மூன்று நிலைகளில் நான் எங்குள்ளேன்?
இ புதுவாழ்வு கொடுக்க வந்தவர் இயேசு. அவரில் எனது எண்ணங்களை இருத்தி வாழ்வு பெறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18- வியாழன் - மார்கழி 2008

எரே 23: 5-8 திபா 72: 1-2, 12-13, 18-19 மத் 1: 18-24

### திருமணம்

இயேசுவின் பிறப்பிற்கான தளம் அமைக்கப்படுகின்றது. நற்செய்தியில் யோசேப்புவிற்கு அழைப்பு கொடுக்கப்படுகின்றது. அது தரும் சிந்தனை என்ன?

### யூதத் திருமணம்

***1. திருமண ஒப்புதல்:*** இந்த மண ஒப்புதல் யூத சமூகத்தில் குழந்தைகளாக இருக்கும்போதே பெற்றோரால் அல்லது தரகர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இதை குழந்தைகள் அறிந்திருக்கவும் ஒருவரையொருவர் பார்த் திருக்கவும் மாட்டார்கள்.

***2. திருமண ஒப்பந்தம்:*** திருமண ஒப்புதல் இங்கு வலுப்பெறுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் பெண் தன் பெற்றோர் செய்த ஒப்புதலை ஏற்காமலும் விடலாம். அனால் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டபின் இருவரும் இதற்குக் கட்டுப்பட்டவர்களாகின்றனர். இது ஒருவருடம் வரைக்கும் நிலைக்கும். இவர்கள் இக்காலத்தில் இணைந்து வாழாவிட்டாலும் கணவன் மனைவி என்றே அழைக்கப்படுவர். இந்த உறவு விவாகரத்தின் மூலமாகவே முறிபடலாம்.

***3. முறையான திருமணம்:*** இது திருமண உறுதி செய்யப்பட்டு ஒருவருட முடிவில் நடைபெறும். இப்பின்னணியில் இயேசுவின் பிறப்பு அமைந்துள்ளது.

### யோசேப்புவின் அழைப்பு

மரியா கருவுற்றிருப்பதாக யோசேப்பு அறிந்தாலும் தூய ஆவியின் மூலமாக இந்நிலை ஏற்பட்டது என்றும் குழந்தை 'இயேசு' என்று அழைக்கப்படும் என்றும் தூதரால் கனவில் அவருக்குக் கூறப்பட்டது. 'இயேசு' என்றால் கிரேக்கத்தில் வரும் யூதப் பெயர் 'யோசுவா'. யோசுவா என்றால் யாவே, மீட்பு. 'எல்லாத் தீவினைகளினின்றும் இஸ்ரயேலரை மீட்பவர் அவரே!' (திபா 130: 8) என்று திருப்பாடல் ஆசிரியர் கூறியதை யோசேப்பு நினைவுகூர்ந்து பிறக்கவிருக்கும் குழந்தை பற்றிய தெளிவையும் அவர் பெற்றிருப்பார். எனவே கனவின் மூலமாக வழிநடத்தப்பட்டபின் மரியாவை ஏற்றுக்கொள்ள அவர் தயங்கவில்லை. தூய ஆவி, இயேசு, யோசுவா, யாவே, மீட்பு அனைத்தும் அவர் தனது அழைப்பை அறிந்துகொள்ள உதவின.

♣ ஆண்டவரின் வழிகாட்டல்கள் இன்று எனக்கும் பல வழிகளில் வருகின்றது என்பதை உணர்ந்து செயல்படுகின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 ~ வெள்ளி - மார்கழி 2008

நீத 13: 2-7, 24-25 திபா 71: 3-6, 16-17 லூக் 1: 5-25

### இறையனுபவம்

செக்கரியாவுக்கு வானதூதர் காட்சி கொடுத்து எலிசபெத்திற்கு ஓர் குழந்தையை வாக்களிக்கின்றார். இவரது இறையனுபவத்தைப் பார்ப்போம்.

**செக்கரியா**

செக்கரியா என்றாலே 'யாவே நினைவுகூர்கிறார்' என்று பொருள்படும். இஸ்ரயேல் இனத்தின் முதல் தலைமைக் குரு ஆரோன். இவரது 24 பேரப்பிள்ளைகளுள் ஒருவரான அபிஜாவின் எட்டாவது பிரிவைச் சேர்ந்தவர் செக்கரியா (காண். 1குறி 24: 10). அபிஜாவின் பரிவில் உள்ள 800 குருக்களில் தூயகத்தில் தூபம் காட்ட செக்கரியாவுக்கு சீட்டிழுப்பின்படி சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த பணிசெய்யும்போது அவருக்கு குழந்தை பற்றிய செய்தி கிடைத்தது. செக்கரியாவின் இந்த இறையனுபவம் என்ன?

**இறையனுபவம்**

மக்கள் மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தாலும் அதற்கு நானும் சம்பந்தப்படுகிறேன் என்றால் நம்பமுடியாதிருக்கும். இதுவே செக்கரியாவின் அனுபவம். ஆச்சரியம், நம்ப முடியாத நிலை. வந்திருப்பவர் வானதூதர், வந்திருப்பது இறைசெய்தி, தேவையானது விசுவாசமும் அர்ப்பணிப்பும் என்பதை உணராமல் செக்கரியா உலக சிந்தனையோடு விவாதத்திற்குச் சென்றார். தானும் மனைவி எலிசபெத்தும் வயது முதிர்ந்தவர்கள். எனவே இதை எப்படி நம்புவது? இறைவனால் எல்லாம் முடியும் என்பதை இவரால் அந்த பதட்டமான நேரத்தில் உணர்ந்துகொள்ள முடியவில்லை. இதனால் அதன் விளைவையும் அவர் சந்திக்கின்றார். அவர் பெற்ற அழைப்புக்கு அவர் பேச்சற்றவராக இருந்தது ஓர் அடையாளமாகியது.

பொதுவாக விவிலியத்தில் இறைவனின் அழைப்பு என்றால் அதில் சில முக்கிய தன்மைகளைப் பார்க்கலாம். செய்தி கொண்டுவருபவர், செய்தி, சந்தேகம், அடையாளம், உறுதிப்பாடு, ஏற்பு என்று பல நிலைகள். இறைவன் தனது திட்டங்களை நிறைவேற்ற யாரையும் தெரிவுசெய்து அவற்றை நிறைவேற்றுவார் என்பதற்கு செக்கரியாவின் அழைப்பு சிறந்த உதாரணம்.

❀ இன்று எனது அழைப்பு என்ன? கிறிஸ்தவம், குடும்பம், சமூகம், பங்கு என்று பல நிலைகளில் எனது பணி, பொறுப்புகள் என்ன?

❀ எந்நிலையில் இருந்தாலும் இறைபணி செய்ய நான் ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 – சனி - மார்கழி 2008

எசா 7: 10–14 திபா 24: 1–6 லூக் 1: 26–38

### இறையனுபவம்

மரியாவிற்கு இயேசுவின் பிறப்பு பற்றிய செய்தி அறிவிக்கப்படுகின்றது. இவரது இறையனுபவம் பற்றித் தியானிப்போம்.

**மரியா**

மரியா சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். ஏனைய இஸ்ரயேல் மக்களைப்போல அவரும் மெசியாவின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தார். ஆனால் ஆண்டவரைத் தன் வயிற்றில் தாங்கும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கும் என்று அவர் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார். இந்நிலையில் அவரது உள்ளுணர்வுகள் எப்படி இருந்திருக்கும்.

***1. கலங்கினார்:*** வானதூதரின் காட்சியும் அவரது வாழ்த்தும் மரியாவைக் கலங்கச் செய்தன. இந்தக் கலக்கம் வாழ்த்தைப் பற்றியதாக அமைந்தது. அடுத்தது என்ன எனும் கேள்வியும் அவருள் எழுந்திருக்கலாம்.

***2. குழம்பினார்:*** மரியா கருவுற்று ஒரு மகனைப் பெறுவார். யோசேப்புவுக்கு மண ஒப்பந்தமாயிருந்தவர் மரியா. ஆனால் திருமணம் இன்னும் முடியவில்லை. இந்நிலையில் அவர் கருவுறுவது என்பது முடியாத காரியம். அடுத்து மகனைப் பற்றிய செய்தியும் அவருக்குக் குழப்பத்தைக் கொடுத்திருக்கும். அவர் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார், என்றென்றும் ஆட்சி செய்வார். அவர் கடவுள், அரசர். இவ்வாறு அவர் பெற்ற செய்திகளின் குழப்பத்தால் எழுந்தது அவருள் ஒரு கேள்வி. இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே! எனவே அவருக்கு மேலும் விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

***3. தெளிந்த நிலை:*** வானதூதரின் விளக்கம் மரியாவிற்கு ஓரளவு தெளிவைக் கொடுத்தாலும் அவர் முழுமையான தெளிவைப் பெற்றிருக்க மாட்டார். ஏனெனில் இது ஓர் மறையுண்மை. எனவே அவர் இறைவனின் அழைப்பிற்கும் வழிகாட்டலுக்கும் தன்னை அர்ப்பணித்து நான் ஆண்டவரின் அடிமை என்றார்.

**வாழ்வுக்கு...**

☘ மரியாவின் அழைப்பு யாருக்கும் கிடைக்காத பாக்கியம். பெண்களுள் ஆசீர் பெற்றவர் அவர். இந்த அருளை நான் பெற எனக்குத் தகுதியுண்டா?

☘ மரியா ஆண்டவரின் தாய். அவர் எனது தாயுமாவார்.

☘ ஆண்டவரின் அழைப்பு எனக்கும் உண்டு. மரியாவைப்போல நானும் ஆண்டவரின் அடிமையாக என்னை அர்ப்பணிக்கத் துணிகின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருகைக்காலம் 4ம் ஞாயிறு
## 21 - மார்கழி 2008

*2சாமு 7: 1-5, 12, 14-16 திபா 89: 1-4, 16, 18 உரோ 16: 25-27 லூக் 1: 26-38*

### ***அழைப்பு***

இயேசு தாவீதின் மகன். அவர் தாவீதின் மகனாகவே மெசியா வருவார் எனும் இறைவாக்குகளுக்கு ஏற்ப மக்களும் மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். மரியாவிற்கு குழந்தை பிறப்பின் செய்தியைக் கொடுத்த வான தூதர் கடவுள் அவருக்கு தாவீதின் அரியணையைக் கொடுப்பார் என்றும் தெரிவித்தார். இதன் பின்னணியில் பிறக்கவிருக்கும் குழந்தையின் மாண்புகளைப் பார்ப்போம். அவை இன்று எமக்குத் தரும் செய்தி என்ன?

## தாவீதின் இறையனுபவம்

தாவீது அரசர் இஸ்ரயேல் மக்களது வாழ்விலும் மனதிலும் பெரிதும் இடம்பிடித்தவர். இவர் இஸ்ரயேலருக்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார். சிறுவனாக, இடையனாக தாவீது பிலிஸ்திய படைகளின் முதுகெலும்பாக இருந்த கோலியாத்தைக் கொன்று நாட்டிற்கே பெருமை சேர்த்தவர். ஆயினும் அவருக்கு ஓர் பெரிய கவலை. தான் பெரிய அரண்மனையில் இருக்க கடவுளின் கட்டளைகள் தாங்கிய பேழை கூடாரத்தில் இருக்கின்றது. எனவே கடவுளின் பேழையை வைக்க பெரிய கோவில் ஒன்றை அமைக்க அவர் நாத்தான் மூலமாக கடவுளின் அனுமதியைக் கோரினார். ஆனால் கடவுளின் திட்டமோ வேறு. தாவீதின் வாரிசின் மூலமாக அதை நிறைவேற்றுவதாகவும் தாவீதிற்கும் அவரது பரம்பரைக்கும் நிறைய ஆசீர் வழங்குவதாகவும் கடவுள் வாக்களிக்கின்றார்.

***1. கடவுள் அழைத்தவர்:*** தாவீது சிறுவனாக இருந்தபோதே கடவுள் அவரை அழைத்து பாரிய வெற்றியை இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுத்தார்.

***2. புகழுறச் செய்தார்:*** பிலிஸ்தியர்களுக்கு எதிரான பல போர்களில் தாவீது வெற்றிகொண்டார். இதனால் தாவீது உலகின் மாமன்னர் எனும் புகழ் பெற்றார்.

***3. அரியணை நிலைக்கும்:*** தாவீதின் வாரிசு சாலமோன் மூலமாக கடவுள் தனக்கென கோவிலைக் கட்டச் செய்தாலும் தாவீதின் அரசு உறுதியாக நிலைக்கும் என்றும் கடவுள் வாக்களித்தார்.

கடவுளுக்கும் தாவீதிற்கும் ஆழமான உறவு இருந்தது. தாவீதின் இறையனுபவம் மிகப்பெரியது. அவர் கொடிய தவறுகள் செய்தாலும் மனம்திருந்தியபோது கடவுளே அவரை ஆசீர்வதித்து வழிநடத்தியுள்ளார். இதில் இறைவாக்கினர் நாத்தானும் பெரும் பங்காற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவீதின் மகன் இயேசு

மரியாவுக்கு வானதூதர் காட்சியளித்து 'அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்' என்று வாழ்த்தியபோது அவர் அந்த செய்தி பற்றி ஆழமாக சிந்தித்தார். அந்த அழைப்பு பற்றி வானதூதர் தெளிவு படுத்தியபோது அந்த உறுதிப்பாட்டில் தாவீது பற்றிய செய்தியும் வருகின்றது. 'அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்' என்றார் வானதூதர்.

பழைய ஏற்பாட்டில் தாவீதின் இறையனுபவம் மிக ஆழமானது. சிறுவயது முதல் அரசனாகிய பின்பும் ஆண்டவர் அவரோடு இருந்து அவரை வழிநடத்தி, தவறு செய்தபோது தட்டிக்கேட்டு, பாதுகாத்து, ஆசீர்வதித்துள்ளார். அந்த வழியில் மெசியாவும் தாவீதின் புதல்வனாக இருப்பார் என்று முன்னறிவிக்கப்பட்டது (காண். 2சாமு 7: 12). அதேபோல புதிய ஏற்பாட்டில் 'அபிரகாமின் மகனும் தாவீதின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்' என்று மத்தேயு நற்செய்தியாளர் தனது நற்செய்தியைத் தொடங்கினார் (மத் 1: 1). பார்வையற்றோர் இருவர் இயேசுவை 'ஆண்டவரே தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்' என்று இரங்கினார்கள் (மத் 20: 30).

## மரியாவின் இறையனுபவம்

ஏனைய யூதர்களைப்போல மரியாவும் பழைய ஏற்பாட்டு நூல்களைக் கற்றிருப்பார். இவ்வாறு மெசியாவின் வருகை பற்றியும் அவர் தாவீதின் மகனாக அழைக்கப்படுவார் என்றும் மரியா எதிர்பார்த்திருந்தார். வானதூதர் தனது செய்தியில் தாவீது பற்றிக் கூறியபோது மரியா அந்த செய்தியின் நம்பகத்தன்மையையும் ஆழத்தையும் உணர்ந்திருப்பார். இவ்வாறு வான தூதரால் வழிநடத்தப்பட்ட மரியா இறுதியில் தன்னை இறைசித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணித்தார்.

கடவுள் ஞானம் நிறைந்தவர். அவர் தனது ஞானத்தின் மூலமாக அனைத்தையும் அவர் விரும்பியபடி விரும்பிய நேரத்தில் நிறைவேற்றுகிறார் என்பது தூய பவுலின் ஆழமான நம்பிக்கை. எமக்கு மறைபொருளாக இருந்தது இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- மீட்புச் சரித்திரத்தில் இறைவனின் செயல்பாடுகள் அதிசயமானவை என்பதை உணர்ந்து, சிந்தித்து வந்துள்ளேனா?
- எனது தனித்துவ வாழ்வில் கடவுள் எவ்வாறு என்னை வழிநடத்துகின்றார் என்று தியானித்து அவருக்கு நன்றி கூறியுள்ளேனா?
- மரியாவின் இறையனுபவம் எமது அனுபவமாகட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 - திங்கள் - மார்கழி 2008

1சாமு 1: 24-28 1சாமு (பதிலுரை) 2: 1, 4-8 லூக் 1: 46-56

***மரியா***

மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது இருவரும் மகிழ்ந்தனர். எலிசபெத் வயிற்றினுள்ளே குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. இந்த மகிழ்ச்சியின் பின்னணியில் மரியாவின் பாடல் அமைந்துள்ளது.

### மரியாவின் மகிழ்ச்சி

மரியாவின் பாடல் பல பகுதிகளாகப் பரிக்கப்பட்டு சீராக தொகுக்கப் பட்டுள்ளது. இது தொடக்க நூல் 17: 17, திருப்பாடல் 103: 17, சாமுவேல் முதல் நூல் 2: 1, 2, 4-8, எசாயா 29: 19, அபக்கூக்கு, ஆகாய் போன்ற பழைய ஏற்பாட்டு நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. மரியா-எலிசபெத்து சந்திப்பு இருவருக்குள்ளும் மிக மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். இருவரும் கடவுளின் ஆசீரை அடைந்துள்ளனர். யூத சமூகத்தில் குழந்தைப் பேறு பெரும் பாக்கியமாகக் கருதப்பட்டது. இந்த அசாதாரண ஆசீரின் மகழ்ச்சியை இருவரும் மகிழ்ந்து, செபித்து, கடவுளைப் போற்றியிருப்பார்கள். இதன் விளைவே இந்தப் பாடல். பெருமகிழ்ச்சி அவரது உள்ளுணர்வு.

### மரியாவின் பங்களிப்பு

நற்செய்திகளில் கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சிகள் ஓர் தேடுதலின் விளைவாகும். கிறிஸ்துவின் உயிர்ப்புக்குப்பின் அவரது மரணம், பாடுகள், அவற்றின் முன்னறிவிப்புகள், கிறிஸ்துவின் வாழ்வு, போதனைகள் போன்றவற்றை ஆராய்ந்த கிறிஸ்தவர்கள் அவரது பிறப்பு நிகழ்ச்சிகளையும் பழைய ஏற்பாட்டில் மெசியா பற்றிய முன்னறிவிப்புகள் பற்றியும் ஆராய்ந்தனர். இவ்வாறு மெசியாவின் பிறப்பில் மரியாவின் பங்களிப்பு பெரிது என்பதை அறிந்த தொடக்ககால கிறிஸ்தவர்கள் அவரில் பெருமதிப்பு வைத்திருந்தனர். இதை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. கடவுளின் செயல்: மரியாவின் வாழ்வில் கடவுள் காட்டிய அளப்பரிய ஆசீரை முதல் பகுதி குறிக்கின்றது.

2. இதில் கடவுளின் சக்தியும் இரக்கமும் காட்டப்படுகின்றது. அவர் உள்ளத்தில் செருக்குற்றவர்களை கண்டிக்கிறார், தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.

♣ மரியாவின் மகிழ்ச்சி எனது மகிழ்ச்சியா? இன்று ஆண்டவர் என்னில் மகிழ்ந்தால் அந்த மகிழ்ச்சி எனது மகிழ்ச்சியுமாகும்.

♣ அந்த மகிழ்ச்சில் பங்கேற்க நானும் மரியாபோல பணியவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 – செவ்வாய் - மார்கழி 2008

மலா 3: 1-4, 4: 5-6 திபா 25: 4-5, 8-10, 14 லூக் 1: 57-66

### இறையனுபவம்

எலிசபெத்திற்கு குழந்தை பிறந்தது. அது கடவுளால் கொடுக்கப்பட்ட விசேட வரத்தின் விளைவு. குழந்தைக்குப் பெயர் சூட்டப்பட்டது. இந்த சம்பவங்களில் எலிசபெத்தின் இறையனுபவத்தைப் பார்ப்போம்.

### யூத மறையில் குழந்தைப் பேறு

'பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்' (தொநூ 1: 28) என்பது தொடக்கத்தில் கடவுள் கொடுத்த கட்டளை. இந்த சிந்தனை யூத சமூகத்தில் வளர்ச்சியடைந்து குழந்தைப் பாக்கியம் கடவுளின் ஆசீராகவும் குழந்தைப் பேறு இல்லாத நிலை கடவுளின் சாபமாகவும் கருதப்பட்டது. பழைய ஏற்பாட்டில் முக்கிய பெண்மணிகள் குழந்தைப் பாக்கியமின்றி இருந்துள்ளனர் (சாராள் தொநூ 15: 3, ரெபேக்கா தொநூ 25: 21, இராக்கேல் தொநூ 29: 31, அன்னா 1சாமு 1: 2). இறைவனின் இரக்கம் இவர்களோடு இருந்தது. இவர்களும் மீட்பு சரித்திரத்தில் தமது பங்களிப்பைச் செய்துள்ளனர்.

### எலிசபெத்தின் மகிழ்ச்சி

பிள்ளைகள் இல்லாத நிலை என்பது எலிசபெத்திற்குப் பெரும் குறையாகவே இருந்துள்ளது. சமூகத்தவர்களும் அவரை ஏளனம் செய்திருப்பார்கள். எனவேதான் அவர் கருவுற்றபோது 'மக்களுக்குள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க ஆண்டவர் என்மீது அருள்கூர்ந்து ஆண்டவர் இந்நாளில் இவ்வாறு செய்தருளினார்' (லூக் 1:25) என்றார். அவரோடு சேர்ந்து சமூகமும் மகிழ்ந்தது.

எதிர்பார்த்ததைப்போல குழந்தை பிறந்து யூத சட்டப்படி அதற்கு விருத்த சேதனம் செய்ய குழந்தையை கோவிலுக்குக் கொண்டுவந்து அதற்குப் பெயர் வைத்தபோது மீண்டும் ஓர் அதிசயம் நடைபெற்றது. செக்கரியாவின் வாய் திறந்து அவர் மீண்டும் பேசத் தொடங்கினார். இவையெல்லாம் எலிசபெத்திற்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி. அவரது மகிழ்ச்சியில் அனைவரும் பங்கு கொண்டனர். எலிசபெத்தின் உள்ளுணர்வுகள் மகிழ்ச்சியாகவும் நன்றியாகவும் வெளிப்பட்டது.

இ எலிசபெத்தை ஆசீர்வதித்ததுபோல கடவுள் இன்று என்னையும் ஏதோவொரு வகையில் ஆசீர்வதிக்கிறார் என்பதை அனுபவத்தில் உணர்ந்துள்ளேனா?

இ குழந்தைப்பேறு இல்லாதவர்கள் மட்டில் எனது மனநிலை என்ன?

இ எனக்கு கடவுளின் திட்டம் எதுவாகவும் இருக்கலாம். ஏற்க நான் தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2சாமு 7: 1–5, 8, 12, 16 திபா 89: 1–4, 26, 28 லூக் 1: 67–79

## இறையனுபவம்

செக்கரியா மகிழ்ச்சியால் இறைவனுக்கு நன்றிகூறிப் பாடுகின்றார். இறையனுபவத்தின் உச்சமாக பலர் ஆடிப்பாடிய சம்பவங்கள் பல விவிலியத்தில் காணலாம். செக்கரியாவின் இறையனுபவம் பற்றி மார்கழி 19ம் திகதி தியானித்தோம். இன்று அவரது பாடல் தரும் செய்திகளைப் பார்ப்போம்.

### செக்கரியாவின் பாடல்

செக்கரியாவின் பாடலும் மரியாவின் வாழ்த்துப் பாடலைப்போல பல பழைய ஏற்பாட்டு எடுத்துகாட்டுகளைக் கொண்டுள்ளது. இப்பாடல் பற்றி பல கருத்துக்கள் விவிலிய ஆராய்ச்சியாளர்களிடையே உள்ளன. யூத சமூகத்தில் இதுபோன்ற பாடல் புழக்கத்தில் இருந்திருக்கலாம். குழந்தை பெறும் பாக்கியம் பெற்ற இந்த வயது முதிர்ந்த குரு தனது உள்ளுணர்வுகளை இப்பாடலின் மூலமாக வெளிப்படுத்தினார் என்று ஆசிரியர் தர முயல்கின்றார். இப்பாடலை இரண்டு பகுதிகளாகப் பார்க்கலாம்.

1. இறைவன் இஸ்ரயேலின் வரலாற்றில் செய்த பல நன்மைகளுக்காக அவரைப் போற்றிப் புகழ்கின்றார் (68–75).
2. பிறந்திருக்கும் தனது மகன் திருமுழுக்கு யோவானையும் அவரது பணியையும் பற்றிய பகுதி (76–79).

இப்பாடலை பழைய ஏற்பாட்டின் இறுதி இறைவாக்காகவும் புதிய ஏற்பாட்டின் முதல் இறைவாக்காகவும் விவிலிய அறிஞர்கள் குறிப்பிடுவார்கள்.

### இறைவனின் திட்டம்

இறைவன் வாக்குத் தவறாதவர். அவர் வாக்களித்தபடி இஸ்ரயேலுக்கு மீட்பைக் கொண்டுவருவார் என்பது அனைத்து யூதர்களின் நம்பிக்கை நிறைந்த எதிர்பார்ப்பு. இந்நிலையில் அனைத்துப் புதுமையான சம்பவங்களில் இறைவாக்கு நிறைவேறுகின்றதா என்று பார்ப்பதும் இயல்பு. இந்த பின்னணியில் இறைவனின் வாக்குகள் தனது மகன் மூலமாகவும், மகன் முன்னறிவிக்க இருக்கும் மெசியா மூலமாகவும் நிறைவேறுகின்றது் என்பதை செக்கரியா நம்பினார். இது இவரது ஆழமான விசுவாச அனுபவம்.

♣ இறைவனின் திட்டங்கள் எனது தனிப்பட்ட அழைப்பு வாழ்வு மூலமாகவும் நிறைவேறுகின்றது என்பதை நான் உணருகின்றேனா?

♣ இறைவனின் திட்டங்கள் நிறைவேற எனது பங்களிப்பைக் கொடுக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்து பிறப்புப் பெருவிழா
## 25 - வியாழன் - மார்கழி 2008

எசா 62: 11-12 திபா 97: 1, 6, 11-12 தீத் 3: 4-7 லூக் 2: 15-20

### *மகிழ்ச்சி*

கிறிஸ்து பிறப்பு பலருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது. இதுபற்றி லூக்கா நற்செய்தியாளர் தரும் பகுதியில் பலரது உள்ளுணர்வுகளை நாம் அவதானிக்கலாம். மரியா, இடையர்கள் இவர்களது விசுவாச அனுபவங்களைப் பார்ப்போம். இவர்களது மகிழ்ச்சி இன்று எமது மகிழ்ச்சியாகவும் அமையட்டும்.

**இடையர்கள்**

கடவுள் தனது பணிக்கென பலரை அழைத்தபோது அவர்கள் தமது தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர் என்பதை நாம் விவிலியத்தில் பல இடங்களில் காணலாம். இங்கு இடையர்கள் தங்கள் மந்தைக்குக் காவல் காத்துக்கொண்டிருந்தபோது வானதூதர்கள் நற்செய்தியை அறிவித்தனர். இவர்களது முதல் அனுபவம் அச்சம். பின்பு இவர்கள் சென்று மரியாவையும் குழந்தையையும் பார்த்தபோது மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார்கள். இது இவர்களது அனுபவம். பாக்கியம் பெற்றவர்கள் இவர்கள்.

**மரியா**

கருவுற்றிருந்த மரியா யோசேப்புவுடன் எருசலேம் வரவேண்டிய நிலை. பெத்லகேமில் குழந்தை பிறந்தாலும் அந்த குழந்தைக்கு தேவையானவற்றைச் செய்ய வேண்டியது தனது கடமை என்பதை மரியா அறிந்திருந்தார். எனவே குழந்தையின் பிறப்பு, இடையர்கள் வருகை, ஞானிகள் வருகை என்று பல மாறுபட்ட சம்பவங்கள் நடைபெற அவற்றையெல்லாம் உடனேயே புரிந்து கொள்ள முடியாதவராக தனது உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார் என்கிறார் நற்செய்தியாளர். இது மரியாவுக்கே உரிய சிறப்பான பண்பு (காண். லூக் 1: 51). தன்னைச் சுற்றி நடைபெறும் சம்பவங்களைப் பற்றி சிந்தித்து அவற்றினிடையே உள்ள தொடர்புகளை அறிய முனைகின்றார் மரியா. இந்த முயற்சியின் மூலமாக இறைவனின் செயல்களை மேலும் அறிந்துகொள்ளலாம்.

♣ இடையர்கள், மரியா இவர்களது அனுபவம் பற்றி எனது கருத்து என்ன?
♣ இவர்களைப்போல நானும் இயேசு அனுபவம் பெற எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்ந்து செயல்படுகின்றேனா?

♣ ***அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்கள*** ♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 - வெள்ளி - மார்கழி 2008

திப 6: 8-10, 7: 54-60 திபா 31: 2-3, 5, 7, 15-16 மத் 10: 17-22

### தூய ஸ்தேவான் விழா

தூய ஸ்தேவான் திருச்சபையின் முதல் மறைசாட்சி. இவரது மரணம் தொடக்கத் திருச்சபையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இயேசுவின் மரணத்தின் பின்பு தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவர்கள் பயந்து வாழ்ந்தனர். தூய ஆவியின் வருகையின் பின்பு இவர்கள் துணிந்து செயல்பட்டாலும் தூய ஸ்தேவானின் மரணம் இவர்களுள் மேலும் பயத்தை உருவாக்க கிறிஸ்த வர்கள் சிதறடிக்கப்பட்டு போனார்கள் (காண். திப 8: 1). இந்த சம்பவத்தோடு கிறிஸ்துவின் நற்செய்தி எருசலேமிற்கு வெளியே பரவத் தொடங்கியது. கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் பற்றி இயேசு நற்செய்தியில் குறிப்பிடுவதைப் பார்ப்போம்.

### சீடர்கள் அடையும் துன்பம்

சீடத்துவத்தின் கஷ்டங்களை இயேசு மறைக்காமல் தெளிவாகக் கூறினார். உள்ளதை உள்ளபடி சொல்லும் இயேசுவின் பண்பு சிறந்தது. பேதுரு தடையாக வந்தபோது என்முன் நில்லாதே சாத்தானே என்று அவரை வன்மையாகக் கண்டித்தார் (காண். மாற் 8: 33). அதேபோல தன் சீடர்களோ, அரசியல், சமயத் தலைவர்களோ யாராக இருந்தாலும் அவர் உள்ளதை நேரடியாகவே கூறினார். இங்கும் தன்னைப் பின்செல்லும் சீடர்கள் எதிர் கொள்ளப்போகும் துன்பங்கள் பற்றித் தெளிவாகக் கூறி தூய ஆவியின் பாதுகாப்பையும் வாக்களித்தார். மூன்று வகையான எதிர்ப்புகளை முன்வைத்தார்.

1. ***யூத மறை சீடர்களைத் தீர்ப்பிடும்:*** யூத சங்கத்தில் இவர்களுக்கு எதிர்ப்புகளும் அவமானங்களும் வரும். சீடர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

2. ***அரசு சீடர்களை தீர்ப்பிடும்:*** இவர்கள் ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார்கள். அங்கும் பெரும் துன்பங்கள் காத்திருக்கும்.

3. ***வீட்டில் சீடர்கள் துன்பப்படுவர்:*** பெற்றோர், சகோதர சகோதரிகள் இயேசுவின் சீடர்களை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் அவர்களுக்கு பெரும் துன்பங்களைக் கொடுப்பார்கள்.

ஆயினும் சீடர்கள் வழியாகப் பேச இருப்பவர் தந்தையின் ஆவியாரே என்று இயேசு நம்பிக்கையையும் கொடுத்தார்.

♣ உலகம் தரும் சவால்கள், துன்பங்களையும் கடந்து நான் இயேசுவிற்காக வாழ்ந்து காட்டுகின்றேனா? அல்லது என் வாழ்வு வெறும் வெளிவேடமா?

♣ இயேசுவிற்காக வாழ்வதே வாழ்வு என்பதை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 ~ சனி - மார்கழி 2008

1யோவா 1: 1–4 திபா 97: 1–2, 5–6, 11–12 யோவா 20: 2–8

***நற்செய்தியாளரான தூய யோவான் விழா***

நற்செய்தியாளர் யோவானின் இறையனுபவம் மேலானது. இயேசுவின் அன்புச் சீடர் என்று அவர் அழைக்கப்படுகின்றார். இவரது இயேசு அனுபவம் என்ன என்பதைப் பார்ப்போம்.

### சென்றார், பார்த்தார், நம்பினார்

இயேசுவின் பணிவாழ்வில் அவரது போதனைகளைக் கேட்டும் புதுமைகளைப் பார்த்தும் உள்ளார் யோவான். அதைவிட இயேசு சிலுவையில் தொங்கியபோதும் இயேசுவின் உயிர்ப்பிற்குப் பின்பும் அவர் பல அனுபவங்களை இயேசுவிடமிருந்து பெற்றார். நற்செய்தியில் அவர் வெறும் கல்லறையைப் பார்த்து நம்பினார். இயேசுவின் கல்லறையின் வெறுமை பற்றிய செய்தியை மகதலா மரியா அறிவித்ததும் யோவானும் பேதுருவும் கல்லறையை நோக்கி ஓடினார்கள். இதில் யோவான் முன்சென்று பார்த்தார், நம்பினார் என்று தனது அனுபவத்தை தன் நற்செய்தியில் குறிப்பிடுகின்றார்.

யூத மக்களும் தலைவர்களும் இயேசுவை நம்புவதற்கு அடையாளங்கள் கேட்ட சம்பவங்கள் பல. ஆனால் இங்கு வெறுமையான கல்லறையைப் பார்த்தே அவரது உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டார் யோவான்.

### தொடர்புகள் தரும் வழிகாட்டல்

இயேசு இவர்களுக்கு நேரடியாகக் காட்சி கொடுத்து நான் கூறியபடியே உயிர்த்துவிட்டேன் என்று சொல்லவில்லை. ஆனால் ஆச்சரியமான இந்த அனுபவத்திலிருந்து கிறிஸ்துவின் மரணம், பாடுகள், வாழ்வு, போதனை போன்றவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளைப் பார்த்து அவரில் மேலும் நம்பிக்கை கொண்டார்கள் இவர்கள். ஆண்டவர் நேரடியாகத் தோன்றி அனைத்தையும் கூறிவிட்டால் அவரில் நம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. மறைபொருள் என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். மாறாக, ஆண்டவரே தன் சீடர்களை நிறைவாக வழிநடத்தி தமது வாழ்வின் சம்பவங்களிடையே உள்ள தொடர்புகளைக் காண உதவுகிறார்.

♣ இன்று எனது கிறிஸ்து அனுபவம் என்ன? அவரை நம்ப சான்றுகளையும் அடையாளங்களையும் காத்திருக்கின்றேனா?

♣ வாழ்வின் சம்பவங்களின் ஊடாக அவற்றின் தொடர்புகளைக் கண்டு கிறிஸ்துவில் எனது நம்பிக்கையை ஆழமாக்குவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குடும்பப் பெருவிழா
## 28 - மார்கழி 2008

தொநூ 15: 1-6, 21: 1-3 திபா 105: 1-5, 8-9 எபி 11: 8, 11-12, 17-19
லூக் 2: 22-40

### ***பொறுப்பு***

திருக்குடும்பப் பெருவிழாவாகிய இன்றைய தினத்தில் குழந்தைகள் மட்டில் பெற்றோரின் கடமைகள், பொறுப்புகளைப் பற்றி சிந்திப்பது சிறந்தது. இயேசுவும் ஓர் குடும்ப அமைப்பின்கீழ் வந்தவர். யோசேப்பு, மரியா, இயேசு மூவரும் அமைக்கும் இந்த திருக்குடும்பம் இன்றும் கிறிஸ்தவ குடும்பங்களுக்கு சிறந்த மாதிரியே.

### யூத மறையில் குடும்பம்

கடவுள் இந்த உலகைப் படைத்தபோது படைப்பின் சிகரமாக மனிதனைப் படைத்தார். அவனுக்குத் துணையாக பெண்ணைப் படைத்தார். இருவரையும் இணைத்து 'பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்' என்றும் பணித்தார் (காண். தொநூ 1: 26-28). இவ்வாறு கடவுளின் கட்டளையை நிறைவேற்ற குடும்பங்களில் குழந்தைப் பாக்கியம் முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது. குழந்தைகள் கடவுளின் ஆசீராகவும் குழந்தை பெற முடியாத நிலை கடவுளின் சாபமாகவும் யூத சமூகம் கருதிவந்தது. திருமண ஒன்றிப்பு, விசுவாசம், முதுமை போன்றன சிறந்த பண்புகளாகவும் கருதப்பட்டது. இதன் பின்னணியில் ஆபிரகாம்-சாரா, யோசேப்பு-மரியா ஆகிய இரண்டு குடும்பங்களிலும் பெற்றோரின் பங்களிப்பு, பொறுப்பு பற்றி இன்றைய வாசகங்கள் தருகின்றன. அவை தரும் ஆழமான செய்திகளைப் பார்ப்போம்.

### ஆபிரகாம் -சாரா

ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார். ஏனெனில் அவர் ஆண்டவரில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். கடவுளும் அவரது சந்ததியை பெருக்குவதாக வாக்களித்து ஈசாக் மூலமாக அதை நிறைவேற்றினார். இருவரும் வயது முதிர்ந்தவர்கள். சாரா தொடக்கத்தில் குழந்தை பற்றிய செய்தியைக் கேட்டு சிரித்தாலும் தன் தவறை உணர்ந்து கடவுளில் நம்பிக்கை வைத்தார். மொத்தத்தில் இருவரும் தமது நம்பிக்கையை, வாழ்வை ஆண்டவரில் வைத்தனர். வாழ்வின் அடித்தளம் ஆண்டவரில் இருந்தது. எனவே இவர்கள் அனைத்தையும் எதிர்கொண்டு மீட்பு வரலாற்றில் முக்கிய இடம் பிடித்தனர். யூத இனத்தின் தந்தையானார் ஆபிரகாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோசேப்பு-மரியா**

மரியாவிற்குப் பிறந்த குழந்தை கடவுளின் அருளால், தூய ஆவியின் செயல்பாட்டால் உருவானது என்பதை யோசேப்புவும் மரியாவும் அறிந்திருந்தனர். ஆயினும் இவர்கள் அதுபற்றி பெருமிதம் அடையாமல் தமது நாளாந்த கடமைகளிலும் பணிகளிலும் ஈடுபட்டனர். இது ஆண்டவரின் குழந்தை, அவரே குழந்தையைக் காப்பார் என்று இவர்கள் பொறுப்பற்றவர்களாகவோ, இறுமாப்புடனோ இருந்துவிடவில்லை. தமது கடமைகளை முறையே நிறைவேற்றினார்கள் என்பதற்கு நற்செய்திகள் சான்று பகர்கின்றன.

**1. *அரசியல் கடமைகள்:***

மக்கள் தொகையைக் கணக்கிட அவரவர் தம் ஊர்களுக்குப் போகவேண்டும் என்பது அரசரின் கட்டளை. நாசரேத்திலிருந்து பெத்லகேம் வரை இருவரும் சென்றனர். இது இவர்களது நற்பண்பைக் காட்டுகின்றது.

**2. *யூத சமயக் கடமைகள்:***

குழந்தையை ஆலயத்திற்குக் கொண்டுவந்து தமது சமயக் கடமைகளை நிறைவேற்றியதை இன்றைய நற்செய்தியில் வாசிக்கிறோம். யூத மதச் சட்டத்தின்படி குழந்தை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது (காண். விப 13: 2). விருத்தசேதனச் சடங்கின் மூலமாக ஒரு குழந்தை யூத சமூகத்தில் இணைக்கப்படுகின்றது. விருத்தசேதனத்தின் பின்பு இரண்டு சடங்குகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

1. குழந்தை கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படுதல்.
2. தாய் தூய்மையாக காணிக்கை செலுத்துதல்.

லூக்கா தனது நற்செய்தியில் இந்த இரண்டு சடங்குகளில் குழந்தை கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சம்பவத்திற்கே முன்னுரிமை கொடுத்துள்ளார். ஆயினும் இரு சடங்குகளும் இணைந்துள்ளன. ஆயினும் இயேசுவின் பெற்றோர் தமது சமயக் கடமைகளைக் குறைவின்றி நிறைவேற்றினார்கள் என்பதைக் குறிப்பிட விரும்பினார். யூதர்களின் கலாச்சாரப்படி வருவாயில் முதல் பகுதியை கடவுளுக்கு அர்ப்பணித்தனர் (காண். லேவி 2). அதேபோல மிருகங்களில் முதல் கன்றும் அர்ப்பணிக்கப்பட்டது (காண். லேவி 13: 2). இப்பின்னணியில் பிறக்கும் முதல் குழந்தையையும் கோவிலில் கடவுளுக்கு அர்ப்பணித்தனர். இந்த சமயச் சடங்குகளையும் கடமைகளையும் இயேசுவின் பெற்றோர் குறைவின்றி செய்து முடித்தனர்.

- எனது திருமண வாக்குறுதிக்கேற்ப நான் வாழ்ந்து காட்டுகின்றேனா?
- பெற்றோர் எனும் முறையில் எனது கடமைகளை குறைவின்றி செய்கிறேனா?
- பிள்ளைகளின் கல்வி மட்டுமல்ல, ஆன்மீகமும் மிக முக்கியம் என்பதை உணர்ந்து செயல்படுகின்றேனா? பொறுப்போடு செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 ~ திங்கள் - மார்கழி 2008

1யோவா 2: 3-11 திபா 96: 1-3, 5-6 லூக் 2: 22-35

***சிமியோன்***

இயேசுவைப்பற்றி சிமியோன் தனது கருத்துகளைத் தெரிவிக்கிறார். இவற்றின் முக்கியத்துவம் என்ன என்பதைப் பார்ப்போம்.

### இயேசு பற்றிய செய்தி

இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்த சம்பவத்தில் யூத சட்டப்படி மரியாவின் தூய்மைச் சடங்கோ, சிமியோன் குழந்தையைப் பார்த்த மகிழ்ச்சியோ, அன்னாவின் வாழ்வோ முக்கியமல்ல. இந்த சம்பவங்கள் மூலமாக குழந்தை இயேசு பற்றிய உண்மை வெளிப்பாடுகளே ஆசிரியர் லூக்காவிற்கு முக்கியம். ஆண்டவரின் வாக்குகள் நிறைவேறுவதை சிமியோன் கண்டார். அவர் மகிழ்ச்சி மிகுதியால் ஆண்டவரைப் போற்றிப் பாடினார். இயேசுவே உலகின் மீட்பர், பிறஇனத்தாருக்கு ஒளி, இஸ்ரயேலுக்குப் பெருமை எனும் உண்மையை சிமியோனின் பாடலில் காண்கிறோம். இந்த உண்மையை வெளிப்படுத்துகிறார் லூக்கா. இவ்வாறு குழந்தை இயேசு பற்றிய உண்மைகள் பலர் வாயிலாக வெளிப்படுகின்றன. அதேபோல குழந்தை பற்றி மரியாவிடம் திடுக்கிடும் தகவலை யும் கூறினார். குழந்தை பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும் என்றார். அதாவது இயேசுவின் வாழ்வு, போதனைகள் பலருக்கு இடைஞ்சலாகவும், சவாலாகவும் இருக்கும். அவரை எதிர்கொள்வோர் ஒரு முடிவையே எடுக்கலாம். அவருக்கு சார்பாக இருக்கலாம் அல்லது அவருக்கு எதிராக இருக்க வேண்டும்.

### மரியா பற்றிய செய்தி

சிமியோன் குழந்தை இயேசுவின் பெற்றோருக்கு ஆசிகூறி மரியா பற்றியும் குறிப்படத் தவறவில்லை. மரியாவின் உள்ளத்தையும் ஒரு வாழ் ஊடுருவிப் பாயும். மரியாவும் தனது வாழ்வில் பல இன்னல்களைச் சந்தித்தார். தனது மகன் பட்ட துன்பங்களை அருகே நின்று அவரும் அந்த துன்பத்தில் பங்குகொண்டவர் மரியா. இது இவர் எதிர்கொண்ட பாரிய சவால். ஆயினும் மகனின் மீட்புப் பணியில் பக்கபலமாக இருந்தார் மரியா.

✠ இன்று இயேசுவின் கட்டளைகள் எனக்குத் தடையாக உள்ளனவா?
✠ சிமியோனைப் போல நானும் கடவுளுக்குப் புகழ்பாட முடியுமா?
✠ இயேசுவின் மீட்புப் பணியில் நான் எவ்வாறு எனது ஒத்துழைப்பைச் செய்கின்றேன் என்று சிந்தித்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 ~ செவ்வாய் - மார்கழி 2008

1யோவா 2: 12-17 திபா 96: 7-10 லூக் 2: 36-40

### அன்னா

இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தபோது சிமியோனைத் தொடர்ந்து அன்னா எனும் பெண் இறைவாக்கினர் குழந்தையைப் பற்றி சான்று பகர்ந்தார். அவரது மகிழ்ச்சி மிகுதியானது. அன்னாவைப் பற்றித் தியானிப்போம்.

**இறைவாக்கினர் அன்னா**

சிமியோனும் அன்னாவும் இறைவனின் வாக்கில் முழுமையான நம்பிக்கை வைத்திருந்தனர். தூய ஆவியின் வழிநடத்துதலால் இவர்கள் இயேசுவிற்கு சான்று பகர்வதில் முதலிடத்தைப் பெறுகிறார்கள். இறைவாக்கினர் அன்னா பற்றி பல செய்திகளைத் தருகிறார் லூக்கா. இவர் பானுவேலின் மகள், இறைவாக்கினர், வயது முதிர்ந்தவர், கைம்பெண், எண்பத்து நான்கு வயதுடையவர், கோவிலில் திருப்பணி செய்துவருபவர். மொத்தத்தில் கடவுளின் சட்டங்களை நிறைவேற்ற வேண்டும், அவரது வாக்குறுதிகள் நிறைவேறுவதைக் காணவேண்டும் என்று ஆவலாய் இருந்தவர்.

**அன்னாவின் இறைவாக்கு**

சிமியோனும் அன்னாவும் வயது முதிர்ந்தவர்கள். இன்றைய சமூகத்தைப் போலல்லாது அன்று யூத சமூகம் முதியவர்களை ஏற்று அவர்களது ஞானம் நிறைந்த வார்த்தைகளை மதித்து வந்தது. இந்நிலையில் சிமியோன் அன்னா வின் இறைவாக்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அன்னா இறைவாக்கினராக இறையுறவில் நெருங்கியிருந்தார். அன்னாவைப் போல பழைய ஏற்பாட்டில் பல பெண் இறைவாக்கினர்கள் செயல்பட்டுள்ளனர் (காண். மிரியாம் விப 15: 20-21, தெபோரா நீத 4: 4-10, குல்தா 2அர 22: 14-20). எதிர்காலத்தில் நடைபெற இருப்பதை முன்னறிவிப்பது பொதுவாக இறைவாக்கினர்களின் பணியல்ல. இறைவனின் உண்மையைக் கூறுவதும் இறைவனுக்காகப் பேசுவதுமே இறைவாக்கினர்களின் பணி. அன்னாவும் குழந்தையைப்பற்றிப் பேசினாலும் அவர் என்ன கூறினார் என்று குறிப்பிடப்படவில்லை.

- அன்னா தனது பணியின், வாழ்வின் இலக்கை அடைய நம்பிக்கையோடும் பொறுமையோடும் காத்திருந்ததுபோல எனது இலக்கு என்ன என்பதை சிந்தித்துப் பார்த்துள்ளேனா? எனது அழைப்பு, பணி, இலக்கு என்ன?
- முதியவர்களின் அறிவுரைகள் பற்றிய எனது மனநிலை என்ன?
- ஆண்டவரே நிறைவு, முழுமை என்பதை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 – புதன் - மார்கழி 2008

1யோவா 2: 18–21 திபா 96: 1–2, 11–13 யோவா 1: 1–18

## மனிதாவதாரம்

இயேசுவின் பிறப்பு பற்றிய செய்திகளை மத்தேயு, லூக்கா நற்செய்தியாளர்கள் கூறுகின்றனர். இவர்கள் தமது செய்திகளை யோசேப்பு, மரியாவின் அழைப்புகளை அடிப்படையாக வைத்துத் தந்துள்ளனர். ஆனால் யோவான் நற்செய்தியாளர் இதே பிறப்பு செய்தியை மாறுபட்ட ஆனால் ஆழமான சிந்தனையோடு தருகின்றார்.

### தொடக்கத்தில்...

இயேசு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதனாக மரியின் மடியில் பிறந்தாலும் அவர் காலங்களையும் கடந்தவர். மனிதரை மீட்பதாக இறைவன் தொடக்கத்திலேயே வாக்களித்திருந்தார். மீட்பர், மெசியா பெண்ணிடம் பிறந்தவராக இருப்பார் என்பதையும் கூறிவைத்தார் (காண். தொநூ 3: 15). இப்பணியை செயல்படுத்த ஆபிரகாம் முதல் பலரும் அழைக்கப்பட்டனர். குலமுதுவர்கள், இறைவாக்கினர்கள், அரசர்கள் என்று பலரையும் பழைய ஏற்பாட்டு நூல்களில் காணலாம். இவர்கள் இஸ்ரயேல் அல்லது யூத இனத்தின் விடுதலைக்கும் மீட்புக்கும் காலத்திற்குக் காலம் செயல்பட்டனர். ஆனால் மனித குலத்தையே நிரந்தரமாக மீட்க அனுப்பப்பட்டவரே இயேசு. இவர் இறைமகன். எதிர்பார்க்கப்பட்ட மெசியா. ஏனைய இறைவாக்கினரோடு இயேசுவை ஒப்பிட முடியாது. இவர் தொடக்கத்தில் வாக்காக இருந்தவர். இவரே கடவுளாகவும் இருந்தார். காலத்தின் தேவைக்கேற்ப மனிதனாகப் பிறந்து, மனிதனின் அவலங்களை அறிந்து அனுபவித்து, மனிதனைத் தனது மரணம் உயிர்ப்பின் மூலமாக மீட்டார். இயேசு உலகைப் படைக்கும் வாக்கு, இயேசு இருளை அகற்றும் ஒளி. ஆனால் யூதர்களோ அவரது வாக்கைக் கேட்க விரும்பவில்லை, அவர் ஒளியில் வாழ்வுபெற முன்வரவில்லை.

இதுவே யோவானின் ஆழமான ஆன்மீக சிந்தனை. இயேசுவின் உலக வருகையை பவுலும் குறிப்பிட்டுள்ளார் (காண். பிலி 2: 6–11).

### செயல்பட...

- இயேசுவின் பிறப்பின் முக்கியத்துவத்தை நான் தியானித்துள்ளேனா?
- இன்று இயேசுவை எனது வாழ்வின் மீட்பராக உணர்ந்துள்ளேனா?
- இயேசுவே எனது வாழ்வின் வழி, ஒளி என்று உணர்ந்து ஏற்று அவரில் வாழ்வு பெறுவேன். அடுத்தவர்க்கு வாழ்வு கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனின் அன்னை தூய கன்னி மரியா பெருவிழா
## 01 - வியாழன் - தை 2009

எண் 6: 22-27 திபா 66: 2-3, 5-6, 8 கலா 4: 4-7 லூக் 2: 16-24

### *மரியா*

இன்று புதிய ஆண்டின் முதல் நாள். இந்த நாளும் இந்த ஆண்டும் அனைவருக்கும் ஆசீர் நிறைந்த நாளாக அமையவேண்டுமென்று நாம் ஆசிக்கின்றோம். ஒரே கருத்தோடு இறைவனிடமும் வேண்டுகின்றோம். இறைவனின் ஆசீரைப் பெற்ற இஸ்ரயேல் இனத்தையும் மரியாவையும் வாசகங்கள் குறிப்பிடுகின்றன. அவை தரும் சிந்தனைகளைப் பார்ப்போம்.

### இஸ்ரயேலுக்கு ஆசீர்

இறைவனின் ஆசீர் இருக்கும்போது மனிதர் தமது வாழ்வு, எதிர்காலம் பற்றிக் கவலைகொள்ளத் தேவையில்லை. ஆசீர் என்பது கடவுளின் நல்லெண்ணம் எம்மிலும் அடுத்தவரிலும் தங்க வேண்டுமெனக் கேட்பதாகும். எண்ணிக்கை நூலில் ஆண்டவர் மோசேக்கு கட்டளை கொடுத்தார். ஆரோனும் அவன் புதல்வர்களும் இஸ்ரயேலுக்கு ஆசி வழங்க வேண்டிய முறையை அவர் கூறுகின்றார். அதன் பிரிவுகள் எமக்கும் பயனுள்ளவையே:

1. ஆண்டவரின் ஆசீரோடு அவரது பாதுகாப்பும் வருகின்றது.
2. அவர் தம் திருமுகத்தை மக்கள்மேல் ஒளிரச் செய்வார்.
3. அவர் அருள்பொழிவார். அவர் இரக்கமும் பரிவும் காட்டுவார்.
4. அவர் தம் திருமுகத்தைத் திருப்பி... அவரது சம்மதத்தை இது குறிக்கும்.
5. அவர் தனது அமைதியை வழங்குவார்.

இன்று எம்மீதும் அடுத்தவர் மீதும் நாம் ஆண்டவரின் ஆசீரைக் கேட்கும்போது இந்த ஐந்து வரங்களையே கேட்கின்றோம். இறைவனின் ஆசீர் வரும்போது அந்த ஆசீர் பெறுபவரை மாற்றுகின்றது, அன்பை பரவச் செய்கின்றது, அடுத்தவரை உற்சாகப்படுத்துகின்றது, பிறர் பணியில் ஈடுபடவும் செய்கின்றது.

### ஆசீர் கொண்டுவரும் நன்மைகள்

'இறையாசீர்' என்பது ஒரே சொல். ஆனால் அது வாழ்வின் அனைத்து நன்மைகளையும் தாங்கி நிற்கின்றது. இறைவனின் ஆசீரை உணரும் ஒருவர் அவர் தரும் அன்பு, பரிவு, இரக்கம், மன்னிப்பு, பாதுகாப்பு, வழிகாட்டல், பராமரிப்பு, அமைதி அனைத்தையும் உணர்ந்துகொள்கிறார். இந்த அனுபவம் இன்று எனக்கு உண்டா என்பதே இன்றைய கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரியா பெற்ற ஆசீர்**

'அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்' என்பது வானதூதர் கபிரியேல் மரியாவுக்குக் கொடுத்த வாழ்த்து. இதுவே மரியா பெற்ற இறையாசீர். இந்த வாழ்த்து பல உண்மைகளைத் தாங்கிநின்றது. திருமணமாகாத மரியா மண ஒப்பந்தமாயிருந்த யோசேப்புவிற்கும் சமூகத்திற்கும் பதில்சொல்லியாக வேண்டும். ஆண்டவர் வழிநடத்தினார். பெத்லகேம் பயணம், குழந்தை பிறப்புக்குப்பின் இடையர் வருகை, ஞானிகள் வருகை, குழந்தையைக் காப்பாற்ற எகிப்து நோக்கிய பயணம், ஆபத்து கலைந்ததும் மீண்டும் நாசரேத்து நோக்கிய பயணம் என்று தொடக்கத்திலேயே பல சவால்களையும் சம்பவங் களையும் மரியா எதிர்கொண்டாலும் இவற்றினூடே அவர் இறைவனின் ஆசீரை உணர்ந்திருப்பார். அதற்கேற்ப அவர் அனைத்து நிகழ்ச்சிகளையும் தனது உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார் என நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். இறைவனின் வழிகாட்டலை அறிந்து அவருக்கு நன்றியுள்ளவராக இருக்க எமக்குத் தியானம் அவசியம். வாழ்வின் சம்பவங்களைத் தியானிக்கும்போது அவற்றில் இறைவனின் ஆசீரை நாமும் உணர்ந்து கொள்ளலாம் என்பதற்கு மரியாவே சிறந்த உதாரணம்.

**உள்ளத்தில் இருத்தி சிந்தித்து...**

மரியாவிடம் ஓர் சிறப்பான பண்பு இருந்தது. பெண்கள் என்றாலே அதிகம் பேசி வம்பை விலைக்கு வாங்கிக்கொள்பவர்கள் என்பது பொதுவான கருத்து. இவர்களுக்கெல்லாம் மரியா சிறந்த உதாரணம். மரியா என்ன செய்தார். இந்த அழைப்பை நான் ஏற்றால் எனது சுதந்திரம் பறிபோய்விடும் என்று இறைவனின் அழைப்பை அவர் நிராகரிக்கவில்லை. மாறாக இறைவனின் ஆசீரில் நம்பிக்கை வைத்து அனைத்தையும் ஏற்று எதிர்கொண்டார். அதே வேளை தொடக்கத்திலிருந்தே தனது அழைப்பின் மறைபொருளைப் பற்றி அமைதியில் அவர் தியானித்தும் வந்துள்ளார் (காண். லூக் 2: 19, 51).

மரியாவின் வாழ்வில் மட்டுமல்ல இன்று எமது வாழ்விலும் இறைவனின் ஆசீரும் வழிகாட்டல்களும் நிறைந்த செயல்பாடுகள் நிறைய உள்ளன. ஆனால் அவற்றை அறிந்துகொள்ள நாம் தனித்திருந்து சிந்திக்க வேண்டும். சம்பவங்களின் தொடர்புகளை ஆண்டவரே எமக்கு வெளிப்படுத்துவார்.

* என் வாழ்வில் நன்மைகளும் தீமைகளும் நிறைந்த சம்பவங்களிடையே இறைவனின் ஆசீர் நிறைந்த வழிகாட்டலை உணர்ந்துள்ளேனா?

* மரியாவைப்போல நானும் அமைதியில் என்னையும் இயேசுவையும் அறிவேன்.

**★★★ புதிய ஆண்டு இறையாசீர் நிறைந்த ஆண்டாக உங்களுக்கு அமைய வாழ்த்துகின்றேன் ★★★**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 - வெள்ளி - தை 2009

*1யோவா 2: 22-28 திபா 98: 1-4 யோவா 1: 19-28*

### ஆயத்தம்

வாழ்வில் பல தேவைகளுக்காக நாம் பல ஆயத்தங்களைச் செய்கிறோம். நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் இயேசுவின் வருகைக்காக மக்களை ஆயத்தம் செய்த சம்பவத்தை வாசிக்கிறோம். வாசகம் தரும் செய்தியைப் பார்ப்போம்.

**பாலைநிலத்தில் குரல்...**

பாலைநிலத்தின் பாதைகள் கரடுமுரடானவை. பயணம் செய்வது கடினம். கற்களும் முட்களும் நிறைந்திருக்கும். பாலைநிலம் என்பது கடுமையான வாழ்வைக் குறித்து நிற்கின்றது. வாழ்வில் வரும் துன்பங்கள், சோதனைகள், சவால்கள் பாலைநில வாழ்விற்கு ஒப்பிடப்படுகின்றது. இஸ்ரயேல் மக்கள் பாலைநில வாழ்விற்குப் பழக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு இந்த பின்னணி தெளிவாகத் தெரிந்திருக்கும். இவ்வாறு பாலைநிலத்தோடு ஒப்பிடப்படும் உள்ளம் தூய்மையாக்கப்பட வேண்டும். இதுவே திருமுழுக்கு யோவானின் பணி.

**ஆண்டவருக்காக வழியை...**

ஆண்டவருக்காக வழியைச் செம்மைப்படுத்துங்கள் எனும் எசாயாவின் இறைவாக்கிற்குப் பொருள் கொடுக்கிறார் திருமுழுக்கு யோவான். மெசியாவாகிய இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்வதற்காக அழைக்கப்பட்டவர் யோவான். தனது பணியைக் குறைவின்றி செய்து முடித்தார் அவர். மக்களது மனநிலை கடினமாயிருந்தது. திருமுழுக்கு யோவான் அங்கு மக்களை மனம்மாற அழைத்தாலும் மக்களின் கேள்வியோ 'நீர் யார்?' என்பதாகும். அவர்களது எண்ணங்களில் இவர் எலியாவாக அல்லது வரவேண்டிய இறைவாக்கினராக இருக்கலாம் என்பதாகும். ஆனால் மனம்மாறுவதற்கான முயற்சிகளை இவர்கள் மேற்கொள்ள வேண்டும். இதுவே முக்கியமானது. மக்கள் தமது பாவங்களை அறிக்கையிட்டு திருமுழுக்குப் பெற்று உள்ளங்களை சமமாக அல்லது தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இவ்வாறு மெசியாவின் வருகைக்காக இவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

☆ திருப்பலி, திருவருட்சாதனங்கள் மனமாற்றம் புதுவாழ்விற்கான அழைப்பைத் தருகின்றன. இந்த அழைப்புக்கு எனது பதில் என்ன?

☆ திருமுழுக்கு யோவானைப் போல இன்று மனமாற்றத்திற்கு அடுத்தவரை அழைக்க எனக்கும் கடமை உண்டு. உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 ~ சனி - தை 2009

*1யோவா 2: 29-3: 6 திபா 98: 1, 3-6 யோவா 1: 29-34*

***சான்று***

திருமுழுக்கு யோவான் தனது பணியின்போது இயேசுவை எதிர்கொண்டு அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். இந்த சம்பவத்தின்போது அவர் இயேசுவிற்கு சான்று பகர்ந்தார். யோவானின் சான்றுகள் என்ன?

### யோவானின் சான்றுகள்

திருமுழுக்கு யோவான் தனது போதனையின்போது இயேசுவைப் பற்றி பல சான்றுகள் கூறினார். இன்றைய நற்செய்தியில் அவற்றை வாசிக்கிறோம். ***கடவுளின் ஆட்டுக்குட்டி:*** இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி என்று கூறிய யோவான் உலகின் பாவங்களைப் போக்க வருகின்றவர் அவரே என்றார். பாவங்களைப் போக்குவது கடவுளின் செயல். இதை மனிதர் செய்யத் துணிந்தால் அவர் யூத சமூகத்தால் கடும் தண்டனைக்கு ஆளாவார். ஆயினும் யோவான் துணிந்து இயேசுவைப்பற்றிய உண்மையை வெளிப்படுத்தினார். ***எனக்கு முன்பே இருந்தார்:*** இயேசுவிற்குமுன் பிறந்தவர் திருமுழுக்கு யோவான். ஆயினும் இவர் எனக்கு முன்பே இருந்தார் என்று சொல்வதன் மூலமாக இயேசு படைப்பின் தொடக்கத்திலேயே இருந்தார் என்பதையும் வெளிப்படுத்துகின்றார் (காண். யோவா 1: 1,2). மீண்டும் இயேசு கடவுள், கடவுள் மகன் என்று சான்று பகர்ந்தார் யோவான்.

***இறைமகன்:*** இயேசு இறைமகன் என்பதை ஆவியால் திருமுழுக்கு யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அதன்படி இயேசுவே இறைமகன் என்று சான்று பகர்ந்தார். திருமுழுக்கு யோவான் இயேசுவைக் கண்டு அவருக்கு சான்று பகர்ந்தார். ஆனால் திருத்தூதர் யோவான் இயேசுவின் உயிர்ப்பிற்குப் பின்பு வெறும் கல்லறையைக் கண்டே அவருக்கு சான்று பகர்ந்தார் (சென்றார், கண்டார், நம்பினார். யோவா 20: 8). இருவரும் வெவ்வேறு விதமாக சான்று பகர்ந்தனர். ஆயினும் இருவருள்ளும் இருந்த பொதுவான ஒரு விடயம் நம்பிக்கையே. இந்த நம்பிக்கைக்கு திருமுழுக்கு யோவான் அனைவரையும் அழைத்தார். இயேசு பற்றிய தனது நம்பிக்கையை சான்றாகக் கூறி அடுத்தவரையும் இயேசுவில் நம்பிக்கைகொண்டு புதுவாழ்வு காண அழைத்தார்.

✿ இயேசுவைப் பற்றிய எனது சான்று என்ன? எனது இயேசு அனுபவத்தின் வெளிப்பாடாக அந்த சான்று அமைய வேண்டும்.

✿ இயேசுவை எனது வாழ்வில் அறிந்து அடுத்தவர்க்கும் அந்த அனுபவத்தைப் பகிர நான் அழைக்கப்படுகின்றேன் என்பதை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா
## 04 - தை 2009

எசா 60: 1-6 திபா 72: 1-2, 7-8, 10-13 எபே 3: 2-3, 5-6 மத் 2: 1-12

***இயேசு***

ஞானிகள் வருகை தரும் செய்திகள் என்ன என்று சிந்திக்க இன்றைய திருக்காட்சி பெருவிழா வாசகங்கள் அழைக்கின்றன. ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தினார். இக்காட்சி யூதர்களுக்கல்ல, மாறாக பிற இனத்தவர்க்கு. இதை எவ்வாறு யூதர்கள் புரிந்துகொள்ள முடியும்?

### மீட்பு அனைவருக்குமானது

இறைவனின் மீட்பு யூதர் தொடங்கி உலகம் முழுவதையும் வந்தடைய வேண்டும் என்பது இறைவனின் திட்டம் என்பது தெளிவு. இன்று நாம் இதை உணர்ந்தாலும் அன்று யூதர்கள் இந்த உண்மையை உணர்ந்திருக்க வில்லை. தமக்கு மட்டுமே அழைப்பு, ஆசீர், மீட்பு என்பது யூதர்களின் சிந்தனை. இந்த சிந்தனை இவர்களுக்கு இறுமாப்பையே கொடுத்தது. இதன் விளைவாக இவர்கள் பிற இனத்தவரை ஒதுக்கி வைத்தனர். இவர்களோடு எவ்வித உறவும் வைத்திருக்கவில்லை.

### எசாயாவின் முன்னறிவிப்பு

பழைய ஏற்பாட்டு நூல்களை பெரியவர் தொடங்கி சிறியவர் வரை மனனம் செய்துவைத்திருந்தனர் யூதர்கள். இவ்வாறு மனனம் செய்திருந்தாலும் அவை தந்த செய்திகளுக்குப் பின்னால் இருந்த உண்மைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள யூதர்கள் தவறிவிட்டனர் எனலாம். எசாயா இறைவாக்கினர் இயேசுவை அடையாளமாக வைத்து ஒளியைக் குறித்துக் குறிப்பிட்டதை முதல் வாசகத்தில் பார்க்கிறோம். உலகின் இருளை நீக்க வரவிருந்தது இந்த ஒளி. பிற இனத்தார் இந்த ஒளி நோக்கி வந்து வாழ்வடைவர் என்பது செய்தி. இந்த ஒளி இயேசுவில் வந்தாலும் அதைப் புரிந்துகொள்ளும் நிலையில் யூதத் தலைவர்கள் இல்லை.

### ஞானிகள் வருகை

ஞானிகள் யார் எனும் கேள்விக்கு பல விளக்கங்கள் தரப்படுகின்றன. இவர்கள் கீழ்த்திசையிலிருந்து வந்தவர்கள், அதாவது இவர்கள் பிற இனத்தவர்கள் என்று குறிப்பிட விரும்புகிறார் மத்தேயு. பிற இனத்தாருக்கும் மீட்பு உண்டு என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இங்கு எமது சிந்தனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகளின் வருகையினால் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி எடுத்துக்கொள்வோம்.

ஞானிகள் தேடிவந்த குழந்தை யூதரின் அரசர் என்று அவர்கள் வாயாலேயே கேட்ட ஏரோது கலங்கினான். அவன் தாமதியாது எல்லாத் தலைமைக் குருக்களையும், மறைநூல் அறிஞர்களையும் அழைத்து உண்மை எதுவென விசாரித்தான். தனது பதவிக்கும், பாதுகாப்புக்கும் தடையாக வரும் யாரையும், எந்த சூழ்நிலையையும் அடியோடு அழிக்கத் தயங்கவில்லை ஏரோது. இங்கு பிறந்திருப்பது குழந்தை என்பதால் கண்டுபிடித்து அழிப்பது சுலபம் என்று எண்ணியிருக்கலாம். ஆனாலும் எந்தத் தவறுக்கு இடந்தர விரும்பவில்லை.

இயேசுவின் பிறப்பையொட்டி மூன்று விதமான பிரிவு உருவாகியது.

***1. ஏரோது:*** இயேசுவின் பிறப்பை அறிந்ததும் ஏரோது வெளிக்காட்டியது பகைமையும் விரோதமுமே. தனது பதவிக்கும் எதிர்கால பாதுகாப்பிற்கும் இயேசு தடையாக வந்துவிடுவார் என்பது ஏரோதின் கவலை. ஏரோதைப் போன்றோர் தமது விருப்பப்படி வாழவே விரும்புவர். ஆனால் இவர்களுக்கு பெரும் சவாலாக இயேசு வந்துவிடுவார். தனது விருப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் கிறிஸ்து விரும்புவதற்கு ஏற்ப வாழ்ந்து காட்டுவதே ஒரு கிறிஸ்தவனின் கடமை.

***2. குருக்களும் மறைநூல் அறிஞர்களும்:*** இவர்களது அலட்சியப் போக்கு இவர்களது கண்களை மறைத்தது. பழைய ஏற்பாட்டு நூல்களை இவர்கள் அறிந்திருந்தார்கள். ஞானிகள் குறிப்பிட்டதை அடிப்படையாக வைத்து இவர்கள் மெசியாவின் பிறப்பைப்பற்றி அறிந்திருக்கலாம். இவர்கள் மீக்கா நூலில் மெசியா பற்றிய முன்னறிவிப்பையும் குறிப்பிட்டார்கள் (காண். மீக் 5: 2). ஆனால் இவர்களது அலட்சியப் போக்கு மெசியாவைக் காண்பதிலிருந்து இவர்களைத் தடுத்துவிட்டது. இதனால் இயேசுவின் பிறப்பு இவர்களுக்கு எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

***3. தேடிவந்த ஞானிகள்:*** பிறந்திருக்கும் குழந்தையைப் பார்த்து வணங்க வேண்டும் எனும் தூய உள்ளத்தோடு வந்தவர்கள் இவர்கள். இயேசுவும் தன்னை இவர்களுக்கு வெளிப்படுத்தினார். இயேசுவின் வாழ்விலும் இவர்களைப் போல பலர் இயேசுவைத் தேடிந்து வாழ்வு பெற்றனர்.

**சிந்தனைக்கு...**

★ மேற்குறிப்பிடப்பட்ட மூன்று பிரிவினரில் நான் எந்த பிரிவைச் சேர்ந்தவன்?

★ இயேசுவின் வருகை அன்று மட்டுமல்ல, இன்றும் நடைபெறுகின்றதை உணர்ந்து செயல்பட்டால் எனக்கும் ஞானிகளின் அனுபவம் கிடைக்கும்.

★ அடுத்தவரிலும் அவர்கள் துன்பங்களிலும் இயேசுவைக் காண முயல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1யோவா 3: 22-4: 6  திபா 2: 7-8, 10-11  மத் 4: 12-17, 23-25

## நற்செய்தி

இயேசு தனது பணிவாழ்வைத் தொடங்குகிறார். இவற்றின் முக்கியத் துவம் என்ன என்பதை இன்றைய சிந்தனையில் பார்ப்போம்.

**பணி தொடக்கம்**

உரிய காலம் வந்தபோது இயேசு தனது இல்ல வாழ்விற்கு முடிவுகட்டி பணிவாழ்வைத் தொடங்கினார். நற்செய்தியில் அவரது பணிவாழ்வின் முக்கிய மூன்று செயல்பாடுகளைப் பார்க்கிறோம்.

***1. நற்செய்தி முழக்கம்***

இயேசு தொடக்கத்தில் மனம் மாறுங்கள் என்று நற்செய்தி முழக்கம் செய்தார். இவ்வாறு இயேசு மக்களின் அறியாமையைப் போக்கினார். அவர் கடவுள் பற்றிய உண்மையை அறிவித்தார். இதன்மூலம் கடவுள், நிலைவாழ்வு பற்றிய மக்களின் நம்பிக்கையின்மையைப் போக்குகின்றார்.

***2. மறையுண்மையைக் கற்பித்தார்***

நற்செய்தி முழக்கம் என்பது கடவுளைப் பற்றி அறியாதோருக்கானது. கற்பிப்பதென்பது ஏற்கெனவே நம்பிக்கை கொண்டோருக்கான மேலதிக விளக்கமாகும். அதையே இயேசு கலிலேயாவில் யூதரின் செபக்கூடத்தில் செய்தார். எனவே இயேசு விவிலியம் பற்றிய மக்களின் தவறான எண்ணங் களிலிருந்து அவர்களை விடுவிக்கின்றார். மனிதர் உண்மையைத் தெரிந்தாலும் அதற்குத் தவறான விளக்கம் கொடுப்பதுண்டு. தவறான முடிவுகளை எடுப்பதும் உண்டு. இயேசுவோ உண்மையை தெளிவுபடுத்த வந்தார்.

***3. குணமாக்கினார்***

மக்களுக்கு ஆன்மீக விடுதலை மட்டுமல்ல, பல்வேறு விடுதலைகளும் பலவித குணமாக்கல்களும் தேவைப்பட்டன. இயேசு மக்களை அவர்களின் துன்பங்களிலிருந்து விடுவித்தார். மொத்தத்தில் உண்மையை போதிக்க மட்டு மல்ல, உண்மையை செயலாக்கம் பெறவும் செய்தார். இதுவே அவர் பணி. கடவுள் பற்றிய உண்மையைக் கூறத் தொடங்கியவர் அதை விளக்கி மக்களின் அறியாமையைப் போக்கி, மக்களது வாழ்வின் அவலநிலைகளிலிருந்து அவர்களை விடுவித்தார்.

❋ இயேசு தொடங்கிய நற்செய்தியைத் தொடர்ந்து முழங்க எனக்கும் அழைப்பு உண்டு என்பதை உணர்ந்து செயல்படுகின்றேனா?

❋ இயேசு அனுபவம் நிறைவாகப் பெற ஆசித்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 ~ செவ்வாய் - தை 2009

1யோவா 4: 7-10 திபா 72: 1-4, 7-8 மாற் 6: 34-44

***பணி***

மக்களின் அவலநிலை கண்டு இயேசு அவர்கள் மீது மனமிரங்கி அவர்களுக்குப் போதித்தார், உணவளித்தார். ஆயனில்லா ஆடுகள் போல இருக்கும் மக்கள்மீது இரங்கிய இயேசுவின் மனித, இறைத்தன்மைகளைத் தியானித்து எமது கடமையை உணர்வோம்.

### இயேசு கற்பித்தார்

ஆயனில்லா ஆடுகள் போல இருந்த மக்கள் மீது இரங்கி இயேசு பலவற்றை அவர்களுக்குக் கற்பித்தார். கற்பித்தல் என்பது விவிலியத்தை ஏற்கெனவே அறிந்தவர்களுக்கு மேலும் உண்மையான விளக்கங்களைக் கொடுப்பதாகும் என்பதை ஏற்கெனவே பார்த்தோம். யூத மக்கள் பழைய ஏற்பாட்டு நூல்களை நன்கு அறிந்து மனனம் செய்திருந்தனர். ஆனால் இவற்றிற்கு விளக்கங்கள் கொடுத்து மக்களை சரியான வழியில் நடத்த வேண்டியது சட்ட வல்லுனர்களினதும் யூதத் தலைவர்களினதும் கடமை யாகும். இதை இவர்கள் முறையாக நிறைவேற்றாததால் மக்கள் இயேசுவிடம் தொடர்ச்சியாக வந்தவண்ணமிருந்தனர். இவர்களது ஆன்மீகத் தாகத்தை அறிந்து இயேசு பலவற்றைப் போதித்தார்.

### இயேசு உணவளித்தார்

மக்களது தேவை ஆன்மீகம் மட்டுமல்ல. ஆன்மீகத் தேவைகளைப் போக்கினாலும் ஏனைய தேவைகளும் அவர்களுக்கு இருந்தன. இங்கு இவர்கள் இயேசுவினிடம் வழிகாட்டலைப் பெற வந்தாலும் இப்போது இவர்கள் பசியோடு இருக்கிறார்கள். எனவே இவர்களுக்கு உணவளிக்க வேண்டுமென்பது இயேசுவின் விருப்பம். அங்கு மக்களிடம் இருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் இயேசு ஆசீர்வதித்து பகிர்ந்து கொடுக்கச் சொன்னார். மக்களது பங்களிப்பும் இறைவனின் ஆசீரும் இணையும்போது வாழ்வு வளம்பெறும். மக்கள்மீது இரக்கம்கொண்ட இயேசு அவர்களது ஆன்மீக சரீர தேவைகளை நிறைவேற்றினார்.

☆ இயேசுவின் பணி இன்றும் தொடர்கிறது. அதற்கு எனது பங்களிப்பும் ஒத்துழைப்பும் என்ன என்பதை உணர்ந்துள்ளேனா?

☆ மக்களது சரீர, ஆன்ம தாகம் தீர உதவுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 - புதன் - தை 2009

1யோவா 4: 11-18 திபா 72: 1-2, 10-13 மாற் 6: 45-52

### *கருணை*

இயேசுவின் சீடர்கள் கடலில் தவிக்க இயேசு கடலில் நடந்துவந்து அவர்ளைக் காத்த சம்பவத்தை நற்செய்தியில் வாசிக்கிறோம். இந்த சம்பவம் பல செய்திகளை நமக்குத் தருகின்றன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

**இயேசுவும் சீடர்களும்**

இயேசுவோடு இருக்கும் வரைக்கும் சீடர்களுக்குக் கவலை இருக்க வில்லை. மக்களுக்குப் போதித்து அவர்களது பசியையும் போக்கியபின்பு தன் சீடர்களை தமக்குமுன் பெத்சாயிதாவுக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினார். பின் தந்தையோடு செபத்தில் ஈடுபட்டிருந்தார். இயேசுவை விட்டுப் பிரிந்த சீடர்கள் கடலில் தண்ணீரில் தவித்தனர். இயேசுவின் எண்ணம் உதவி தேவைப்பட்ட சீடர்களை நோக்கிச் சென்றது. அவர்கள்மீது இரக்கம் கொண்டு அவர்களை நோக்கிவந்து காற்றையும் கடலையும் அடக்கினார். இதுபோன்று இயேசு தன் சீடர்களுக்குச் சார்பாகப் பேசியோ அல்லது செயல்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. மொத்தத்தில் இயேசு சீடர்களுக்குப் பக்க பலமாகவும் பாதுகாப்பாகவும் இருந்துள்ளார். ஆயினும் அவரது பாடுகள் மரணத்தின்போது சீடர்கள் சிதறுண்டு போய்விடுவார்கள் என்பதற்காக தனது சக்தியையும் மாட்சிமையையும் இயேசு காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தியுமுள்ளார். அப்பங்களைப் பலுகியதும், கடல்மீது நடந்ததும் சில உதாரணங்கள். யூதர்களுக்கு கடல் தீய சக்தியின் இருப்பிடமாக இருக்க இயேசு அதன்மீது நடந்து கடலையும் காற்றையும் அடக்கவல்ல சக்தியைக் காட்டினார்.

**இயேசுவும் நாமும்**

சீடர்களுக்கு வந்த இடர்களைப் போல எமது வாழ்விலும் பல இடர்களை நாம் சந்திக்கின்றோம். அன்று சீடர்களால் இயேசுவை நேராகப் பார்த்து உதவியோ விளக்கமோ கேட்க முடிந்தது. ஆனால் இன்று எமக்கு அந்த நிலையில்லை. ஆயினும் எமது துன்ப வேளைகளில் இயேசு உடனிருந்து செயல்பட்டு எமக்குத் துன்பங்களை எதிர்கொள்ள சக்தியையோ அதிலிருந்து விடுதலையையோ தருகின்றார். இது எமது நம்பிக்கை.

✻ எனது இன்னல்கள் நிறைந்த வேளைகளில் இயேசு உடனிருந்து எனக்குப் பாதுகாப்பைத் தருகின்றார் என்பதை உணர்ந்துள்ளேனா?

✻ எனது விருப்பமல்ல, அவரது விருப்பமே என்று செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 – வியாழன் - தை 2009

1யோவா 4: 19-5: 4 திபா 72: 1-2, 14-15, 17 லூக் 4: 14-22

***பணி***

இயேசு தன் பணிவாழ்வைத் தொடங்கிய விதத்தை லூக்கா நற்செய்தியாளர் விபரிக்கின்றார். அவரது பணி இலகுவாக அமையாது என்பதை இப்பகுதி தெளிவாக்குகின்றது. பணிவாழ்வில் வரக்கூடிய சவால்களையும் சுட்டிக்காட்டுகின்றது.

### அனுப்பப்படுதல்

மீட்பு சரித்திரத்தில் ஆண்டவர் பலரை அழைத்து பணிக்கென அனுப்பியுள்ளார் என்பதை பழைய ஏற்பாட்டு நூல்களில் வாசிக்கிறோம். இவ்வாறு இறைபணியாளராக இவர்கள் மக்களை நோக்கிச் சென்று கடவுளின் செய்தியைக் கூறினாலும் மக்கள் இவர்களையும் இவர்கள் கொண்டுவந்த செய்திகளையும் ஏற்காத சம்பவங்களே பல உள்ளன எனலாம். இயேசு அனுப்பப்பட்டவர். அனுப்பியவர் கடவுள். இயேசுவுக்கும் ஏனைய இறைவாக்கினரைப் போல பல எதிர்ப்புகள் வரும் என்பதை நற்செய்தி காட்டுகின்றது.

'ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது...' என்று தொடங்குவதன் மூலமாக இறைவனின் ஆற்றல் அவர்மீது உள்ளது என்பது வெளிப்படுகின்றது. அதேபோல 'அவர் என்னை அனுப்பியுள்ளார்' என்பதன் மூலமாக இறைவனுக்கும் அவருக்கும் உள்ள நெருங்கிய உறவு தெளிவாகின்றது. எசாயா இறைவாக்கினரின் அனுபவம் இது.

### ஆண்டவரின் அருள்தரும் ஆண்டு

விடுதலை என்பது மக்களுக்கு நற்செய்தி பெரும் நற்செய்தியே. அரசியல், சமயம், பாவம் போன்றவற்றிலிருந்து விடுதலை மக்களுக்குத் தேவையாக இருந்தது. யூபிலி ஆண்டு என்பது அன்று விடுதலையின் ஆண்டாகும். கடன், அடிமை வாழ்வு என்று பலநிலைகளிலிருந்தும் விடுதலை. இவ்வாறு இயேசு கொண்டுவந்த நற்செய்தியை மக்கள் நம்பி வியப்புற்றாலும் அவரது குடும்பப் பின்னணி இயேசுவை நம்புவதற்குப் பெரும் தடையாகியது. இவர்களால் மேற்கொண்டு அவர் கொண்டுவந்த புதுவாழ்வை அனுபவிக்க முடியவில்லை.

✹ இயேசு கொண்டுவந்த செய்தியை எனது வாழ்வாக்குகின்றேனா?

✹ இயேசு அனுப்பப்பட்டவர் போல இன்று நாவும் கடவுளது இரக்கத்தை வெளிப்படுத்த அழைக்கப்பட்டேன் என்பதை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 ~ வெள்ளி - தை 2009

*1யோவா 5: 5–13 திபா 147: 12–15, 19–20 லூக் 5: 12–16*

### அன்பு

தொழுநோயாளர் ஒருவரை இயேசு குணமாக்கினார். இயேசுவின் அன்பு இந்த சம்பவத்தின் மூலமாக எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதைப் பார்ப்போம்.

### தொட்டு குணமாக்கினார்

தொழுநோய் என்பது தோல் சம்பந்தமான அனைத்து நோய்களையும் குறிக்கும். தொழுநோய் இன்று மாற்றக்கூடிய நோயாக இருந்தாலும் அன்று அது தொற்றுநோயாகவே இருந்தது. இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். மக்களை இவர்கள் எதிர்கொண்டால் உடனே 'அசுத்தம்' என்று கூவி மக்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். நோய் நீங்கினால் குருக்களிடம் காட்டி அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

இயேசுவில் நம்பிக்கை கொண்ட இந்த தொழுநோயாளி அவரிடம் துணிவோடு வந்து வேண்டினார். 'இயேசு கையை நீட்டி, அவரைத் தொட்டு...' தன் வார்த்தையால் அவரைக் குணமாக்கினார். இயேசு இவரைக் குணமாக்க விரும்பினார். நோய் எனும் கட்டிலிருந்து அவரை விடுவிக்க விரும்பினார். எனவே சமூகக் கட்டுகளையும் தாண்டி இயேசு அவரைத் தொட்டு குணமாக்கினார்.

### குருக்களிடம் காட்டி...

இயேசு இந்த தொழுநோயாளியைக் குணமாக்கினாலும் சட்டப்படி குணமானவர் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனது குணமாக்கல் மட்டும் போதும் என்று இருந்துவிடாமல் அவரை சமூகம் அங்கீகரித்து ஏற்பதற்கு ஏற்றவாறு குருக்களிடம் சென்று காட்டி சட்டப்படி காணிக்கையை செலுத்தும்படி இயேசு அவருக்குக் கட்டளையிட்டார்.

குணமானவரை ஆண்டவர் மட்டுமல்ல சமூகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இயேசுவின் நோக்கமாக இருந்திருக்கலாம். ஏனெனில் இவர் தொடர்ந்து அந்த சமூகத்தில் வாழவேண்டும். இயேசுவின் அன்பு அன்றும் இன்றும் எம்மை வழிநடத்துகின்றது. அவரது அன்புக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தால் எம்மையும் அடுத்தவரையும் நாம் விடுவிக்கலாம்.

✝ இயேசுவின் அன்பின் பாதிப்புகளை என் வாழ்வில் உணர்ந்துள்ளேனா?

✝ எனக்கு விடுதலை தரும் ஆண்டவர் என் மூலமாக அடுத்தவரை விடுவிக்கிறார் என்பதை உணர்ந்து அவரது அன்புக் கட்டளைக்குப் பணிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1யோவா 5: 14-21 திபா 149: 1-6, 9 யோவா 3: 22-30

## பணிவு

திருமுழுக்கு யோவான் தனது மனநிலை, வாழ்வு, போதனை மூலமாக பலரது மனங்களிலும் பதிந்துள்ளார். இயேசுவைப் பற்றிய உண்மை அவரது சீடர்களுக்குத் தெரியாதபோதும் அவர் அதை தெளிவாக, மறைவின்றி, வெளிப்படையாகக் கூறினார். அவரது பணிவு பெரியது.

### அவரது செல்வாக்கு

இயேசு பற்றிய உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைத்து அவர்களை இயேசுவிடம் அழைத்து வரவேண்டியது அவரது பொறுப்பு. தனது கடமையை குறைவின்றி நிறைவேற்றினார் யோவான். தனது போதனைகளைக் கேட்டு பலர் திருமுழுக்குப் பெற்றனர், பலர் சீடராகினர். ஆயினும் அவர் அதில் பெருமை கொள்ளவில்லை. இயேசுவைக் கண்டதும் 'இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி' என்று இயேசுவை தன் சீடர்களுக்கு அடையாளம் காட்டினார் (யோவா 1:36). அவர்களும் இயேசுவைப் பின்சென்றபோது அவர் அவர்களைத் தடுக்கவில்லை. நீர் யார் என்று மக்கள் கேட்டபோதும் தன்னை யாரோடும் அடையாளம் காட்டாமல் மெசியாவின் வருகைக்காக அனுப்பப்பட்டவர் என்று தெளிவாகச் சொன்னார். இன்றைய நற்செய்தியிலும் இயேசுவின் செல்வாக்குப் பெருக வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

### எனது செல்வாக்கு

திருமுழுக்கு யோவான் இயேசுவைவிட வயதில் மூத்தவர், உறவினர். ஆயினும் சொந்த பந்தங்களைவிட இங்கு அவரது பணியே முன்னுரிமை பெறுகின்றது. இயேசு மெசியா என யோவான் முன்னறிவித்தவர். அதுவே அவரது மகிழ்ச்சி. மணமகனாக இயேசுவையும் மணமகனின் தோழராகத் தன்னையும் ஒப்பிடும் யோவான் அதில் அவர் அடையும் மகிழ்ச்சியையும் குறிப்பிட்டார். 'அவரது செல்வாக்குப் பெருகவேண்டும். எனது செல்வாக்குக் குறையவேண்டும்' என்றார். இதுவே யோவானின் பெரிய மனது, பெரிய மனநிலை. அந்த மனநிலையை அவர் வாழ்வாக்கினார். புகழ், பணம், பதவி, செல்வாக்கு என்று அலையும் இந்த உலகிற்கு யோவானின் மனநிலை நல்ல உதாரணம்.

✠ எனது மனநிலை என்ன? அது திருமுழுக்கு யோவானைப் போன்றது என்று என்னால் துணிந்து கூறமுடியுமா? சிந்திப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரின் திருமுழுக்குப் விழா

**11 - தை 2009**

எசா 55: 1-11 எசா (பதிலுரை) 12: 2-6 1யோவா 5: 1-9 மாற் 1: 7-11

### இறையனுபவம்

கடவுளின் பேரிரக்கத்தையும் அவர் கொண்டுவரும் புதுவாழ்வையும் மக்கள் அறிந்து, உணர்ந்து வாழ்வில் நல்ல மாற்றங்களைக் காணவேண்டும் என்று இன்றைய ஞாயிறு வாசகங்கள் அழைப்பு விடுக்கின்றன. இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். யூத சமய நடைமுறைகளுக்கு ஏற்ப இயேசு செயல்பட்டார். வாழ்வு தருகின்ற இறைவனின் அழைப்பு தரும் நன்மைகளைப் பார்ப்போம்.

**உலகம் - ஆன்மீகம்**

நாம் காணும் விடயத்திலிருந்து காணமுடியாத விடயத்தைப் புரிந்து கொள்வது இலகுவானது. வாழ்வின் சம்பவங்களிலிருந்து மறையுண்மைகளைப் புரிந்துகொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் இறைவாக்கு இந்த உண்மையைக் குறிப்பிடுகின்றது. பழைய ஏற்பாட்டில் யூதர்களின் மனநிலை மாறுபட்டது. தமக்குத் தேவையான உணவு, நீர், உறைவிடம் போன்றவற்றை இவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவை கிடைக்கும்போது அவற்றின் பின்னால் இறைவனின் அருட்கரத்தையும் அவரது இரக்கத்தையும் உணர்ந்துகொள்ள இவர்கள் தவறிவிடுகின்றனர்.

***சரீர தேவைகள்***

மக்களின் தாகத்தையும், பசியையும், நிதித் தேவைகளையும் நீக்குவதாக இறைவன் வாக்களித்து மக்களைத் தம்மிடம் அழைக்கின்றார். இது மக்களின் உடனடித் தேவைகள். இவையின்றி தம்மால் வாழ முடியாது எனும் எண்ணமும் மக்களின் மனங்களில் இருந்தது. யூத சமூகத்தில் வசதியானவர்கள் இருந்தாலும் அதைவிட வறியவர்கள் நிறைய இருந்தனர். எகிப்திலிருந்து விடுதலை பெற்று மோசேயின் வழிகாட்டலில் மக்கள் பாலைநிலத்தினூடாகப் பயணம் செய்தாலும் இவர்களது முறைப்பாடுகள் ஒன்றே. எமக்கு உணவில்லை, தண்ணீர் இல்லை.

***ஆன்மீகத் தேவைகள்***

கடவுள் இந்த மக்களுக்குத் தேவையான சரீர உதவிகளைத் தருவதாக வாக்களித்தாலும் அதைவிட விலைமதிப்பில்லாத ஆன்மீக தாகத்தைத் தீர்ப்பதாக உறுதி தருகின்றார். இதிலும் அவர் குறிப்பிடுவது இரண்டு விடயங்கள்.

**1. இறையனுபவம்:** இறைவனைக் காண வாய்ப்பிருக்கும்போதே அவரைத் தேட வேண்டும். இறையநுபவத்தை யாரும் பெற்றுக்கொள்ளலாம். அவரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை வைத்து அவரைத் தேடி வரும்போதும், எமது எண்ணங்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் அவரது எண்ணங்களின்படி எமது வாழ்வை மாற்றியமைக்கும்போதும் அவரை அனுபவிக்கலாம்.

**2. இறைவாக்கின் வலிமை:** இறைவனின் வாக்கு வலிமை வாய்ந்தது. தொடக்கத்தில் தனது வாக்கினால் உலகைப் படைத்தவர் ஆண்டவர். அந்த வாக்கு தனது பணியைச் செய்து முடிக்காமல் திரும்பாது (காண். எபி 5:12).

## இயேசுவின் இறையனுபவம்

இறைவனின் மீட்புப் பணி இயேசுவில் உச்சநிலையை அடைகின்றது. இயேசுவின் மனிதாவதாரம், பணி போன்றன கடவுளை மகிழ்வித்தன. தந்தையின் மகிழ்வையும் ஒப்புதலையும் இயேசு தனது திருமுழுக்கு நேரத்தில் அனுபவித்தார். இந்த அனுபவம் இன்று எமதாக வேண்டும். இயேசுவின் திருமுழுக்கு மூன்று முக்கிய விடயங்களைக் காட்டுகின்றன.

***1. இது அவரது முடிவின் நேரம்***

தான் இந்த உலகில் மனிதனாகப் பிறந்த நோக்கத்தை உணர்ந்து அவர் தன்னை அர்ப்பணிக்கிறார். 30 வருட வாழ்விற்குப் பின்பு தனது நேரம் வந்ததை உணர்ந்து தன்னை அர்ப்பணித்தார். இந்த நேரத்தில் இயேசு பல உணர்வுகளை அனுபவித்திருப்பார்.

***2. இது அவரது வெளிப்படுத்தலின் நேரம்***

30 வருட மறைந்த வாழ்வு. வீட்டில் பெற்றோருக்குப் பணிபுரிந்து, உழைத்து மக்களின் தேவைகள், ஏக்கங்கள், கஷ்டங்களை உணர்ந்து இப்போது தன்னையும், தனது வருகையின் நோக்கத்தையும் சமூகத்திற்கு வெளிப்படுத்துகின்ற நேரமிது.

***3. இது தந்தை ஒப்புதல் அளிக்கும் நேரம்***

'என் அன்பார்ந்த மகன் நீயே...' என்று இறைத்தந்தை தனது விருப்பை வெளிப்படுத்தும்போது இயேசுவிற்கு அது ஆழமான ஆன்மீக அனுபவமாக அமைந்திருக்கும். தந்தையின் விருப்பத்தை அறிந்துகொள்ள சிறந்த நேரமிது.

## எமது இறையனுபவம்

✧ இறைவாக்கிலிருந்து நான் இறையனுபவத்திற்குள் செல்கின்றேனா?

✧ இயேசு பற்றி நானும் சிந்தனையளவில் இருக்கின்றேனா அல்லது எனது வாழ்வின் ஒவ்வொரு அனுபவங்களிலும் அவரைக் காணத் துடிக்கின்றேனா?

✧ எந்தளவிற்கு நான் என்னை அறிகின்றேனோ அந்தளவிற்கு நான் இறைவனையும் அறியமுடியும் என்பதை உணர்ந்து வாழ்வேன்.

✧ இறைத்தந்தையை மகிழ்விப்பதாக எனது வாழ்வு அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 – திங்கள் - தை 2009

எபி 1: 1–6 திபா 97: 1–2, 6–7, 9 மாற் 1: 14–20

### நல்ல செய்தி

இயேசு தனது பணிவாழ்வைத் தொடங்குகின்றார். தொடக்கத்தில் அவர் நிலைவாழ்விற்கான நம்பிக்கையைக் கொடுத்து மனமாற்றத்திற்கு மக்களை அழைத்தார் என்று மாற்கு நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

**மக்களுக்கு நற்செய்தி**

இயேசு கொண்டுவந்தது கடவுளின் நற்செய்தி. மக்களுக்கு நிலையான வாழ்வைத் தரவல்ல நற்செய்தி இது. இது உண்மையின் நற்செய்தி (காண். கலா 2: 5), நம்பிக்கையின் நற்செய்தி (காண். கொலோ 1: 23), அமைதியின் நற்செய்தி (காண். எபே 6: 15), இறைவனின் வாக்குறுதியின் நற்செய்தி (காண். எபே 3: 6), நிலைவாழ்வின் நற்செய்தி (காண். எபே 1: 13).

**மனமாற்றத்திற்கு அழைப்பு**

பாவத்திற்கும் பாவத்தின் விளைவுகளுக்குமிடையே குழப்பம் பலருக்கு உண்டு. கடவுள் பாவத்தை வெறுக்கிறார், பாவியை அல்ல. பாவத்தின் விளைவுகளை எண்ணி மனம்வருந்துவதில் மட்டுமல்ல, பாவத்தையும் வெறுப்பதில்தான் உண்மை மனமாற்றம் உள்ளது. மனம் மாறி, இறைவனின் இரக்கத்தை உணர்ந்து வாழ்வு பெற்ற பலரை பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம். எனவே மனமாற்றத்திற்கான அழைப்பு என்பது இயேசுவின் காலத்து யூதர்களுக்குப் புதிதல்ல.

**நம்பிக்கைக்கு அழைப்பு**

இயேசு கொண்டுவந்த நற்செய்தியை நம்புவதால் பல விளைவு களுண்டு. ஏனெனில் அவரது நற்செய்தி நிலைவாழ்வைத் தரவல்லது. அதை நம்பி ஏற்றோர் வாழ்வு பெற்றனர். நம்பாதோர் இயேசுவோடு பல சந்தர்ப்பங்களில் முரண்பட்டனர்.

இயேசு கொண்டுவந்த நற்செய்தியை அவருக்குப்பின் மக்களுக்குக் கொண்டு செல்ல அவர் சீடர்களை அழைத்ததையும் நற்செய்தியில் காண்கிறோம்.

☆ மனமாற்றத்திற்கான அழைப்பை நான் எனது வாழ்வில் உணர்கின்றேனா?

☆ எனது வாழ்வின் மூலமாக அடுத்தவரை மனமாற்றத்திற்கு அழைத்து வருகின்றேனா?

☆ மனமாற்றம் நிறைந்த வாழ்வு வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 - செவ்வாய் - தை 2009

எபி 2: 5-12 திபா 8: 1, 4-8 மாற் 1: 21-28

### ***இறைசக்தி***

இயேசு தீய ஆவி பிடித்தவரைக் குணமாக்கினார். தீய ஆவிகளின் செயல்பாடுகள் பற்றியும் இயேசுவின் சக்தி பற்றியும் தியானிப்போம்.

**தீய ஆவிகள்**

அன்று தீய ஆவிகள் பற்றிய நம்பிக்கை மக்களிடையே பலமாக இருந்தது. இவை உலகை ஆக்கிரமித்திருக்கின்றன என்றும் வாழ்வின் அனைத்து நிலைகளையும் அவை ஆட்டிப்படைக்கின்றன என்றும் மக்கள் நம்பினர். உலகமே தீய ஆவிகளின் ஆட்சியில் இருந்தது என மக்கள் கருதினார்கள். இவை எங்கிருந்து வந்தன என்பதற்கும் மக்களிடையே சில கருத்துகள் இருந்தன.

1. தீய ஆவிகள் படைப்பின் காலத்திலிருந்தே இருந்தன.
2. தீய வாழ்வு வாழ்ந்து இறந்தவர்களின் ஆவியே இந்த தீய ஆவி.
3. தொநூ 6: 1-8 பகுதியை தீய ஆவிகளோடு தொடர்புபடுத்தி பலர் பார்த்தனர் (காண். 2பேது 2: 4, 5). உலகில் அழகிய பெண்களால் கவரப்பட்ட இரண்டு சம்மனசுகள் கடவுளை எதிர்த்து உலகிற்கு வந்தன. இவற்றில் ஒன்று கடவுளிடம் மீண்டும் சென்றது. இரண்டாவது உலகிலேயே இன்பம் காணத்தொடங்கியது. இவற்றின் குழந்தைகளே உலகில் உலாவரும் தீய ஆவிகள் என யூதர்கள் நம்பினர். இவை உண்ணவும், குடிக்கவும், குழந்தைகளைப் பெற்றெடுக்கவும் செய்தன. சிலரின் கருத்துப்படி இவை பெருகி ஏழரைக் கோடிக்கும் அதிகமான எண்ணிக்கையில் இருந்தன. இவை கல்லறைகள் போன்ற அசுத்த இடங்களிலும், பாலைநிலங்களிலும் வாழ்ந்தன. இவை தனித்த வழிப்போக்கர்களையும், கர்ப்பிணிப் பெண்களையும், புதுமணத் தம்பதிகளையும், இருளில் செல்லும் குழந்தைகளையும் இலகுவாகத் தாக்கும்.

இவற்றை ஓட்டுவதற்கு அன்று பலர் இருந்தனர். இவர்கள் மந்திரங்களையும், தாயங்களையும் பயன்படுத்துவார்கள். ஆனால் இயேசு ஒரு வார்த்தையால் பேயை ஓட்டியதைப் பார்த்த மக்களால் இதை நம்ப முடியவில்லை. இவ்வளவு சக்தி இயேசுவிடம் உள்ளதா என்று வியந்தனர். தீய ஆவிகளின் சான்றும் இதை உறுதிப்படுத்தின.

✯ இயேசுவின் சக்தியை மீற எதனாலும் முடியாது என்பதை நான் நம்பி வாழ்கின்றேனா? அவரில் எனக்கிருக்கும் நம்பிக்கை என்ன?

✯ இயேசுவில் வாழ்வு பெற்று அடுத்தவருக்கும் வாழ்வு கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 - புதன் - தை 2009

எபி 2: 14-18  திபா 105: 1-4, 6-9  மாற் 1: 29-39

### பணி

திருமுழுக்கு பெற்ற இயேசு தன் பணி தொடங்கினார். இயேசு எங்கும் சென்று போதித்தார், பணி செய்தார். நற்செய்தி முழங்கிய அவர் செபக் கூடங்களில் கற்பித்தார், நோய்களைக் குணமாக்கினார், தந்தையோடு செபத்தில் இருந்தார். இவ்வாறு அவரது பணிகளை இன்றைய நற்செய்தி விளக்குகின்றது. இயேசுவின் மனநிலை பற்றி சிந்திப்போம்.

**புகழ் தரும் சவால்**

இயேசு பற்றிய செய்தி எங்கும் பரவியது. அவரை நாசரேயனாகப் பார்த்தாலும் பலர் நோய்களிலிருந்து விடுவிக்கப்பட்டதைப் பார்த்தவர்கள் அவரைப் பற்றி எங்கும் அறிவிக்க மக்கள் கூட்டம் அதிகரித்தது. நோயாளிகள் அவரிடம் வந்தனர், சிலர் தூக்கி வரப்பட்டனர். இவர்கள் நோய்கள் நீங்கப் பெற்றனர். மக்களும் அவரைப் பாராட்டினார்கள்.

சீமோனும் 'எல்லோரும் உம்மைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்' என்றார். மக்கள் இயேசுவை சுற்றிச் சுற்றி வர அந்த பூரிப்பில் அவர் இருந்திருக்கலாம். அதுவே அவருக்கு வரக்கூடிய பெரும் சோதனையாக இருந்திருக்கலாம். இது இவ்வுலகில் யாருக்கும் வரக்கூடிய சோதனையாகும்.

**இயேசுவின் தெளிவு**

இயேசுவோ தனது வருகையின் நோக்கம் பற்றித் தெளிவாகவே இருந்தார். இதற்கு அவர் செய்த இரு விடயங்களை நாம் அவதானிக்கலாம்.

1. மக்கள் தந்த புகழைவிட தந்தையோடு செபத்தில் இருந்து அவரது விருப்பத்தை அறிந்துகொள்வதே அவரது முன்னுரிமையாகியது.
2. அவர் இவ்வுலகிற்கு வந்தது கலிலேயாப் பகுதிகளில் பணிசெய்ய மட்டுமல்ல. அவரது பணி பாலஸ்தீனா தொடங்கி உலகின் கடையெல்லைவரைக்கும் செல்லவேண்டும். எனவே மக்களின் புகழினாலோ, சீமோனின் வார்த்தையாலோ அவர் கவரப்படாமல் தனது பணியில் கருத்தாயிருந்தார்.

⇨ மக்கள் தரும் புகழினால் நான் கவரப்படுகின்றேனா அல்லது இறைவனின் கட்டளைப்படி வாழ்வதில் கருத்தாயிருக்கிறேனா?

⇨ வாக்கிற்கும் வாழ்விற்கும் தொடர்பு வைத்த இயேசுவைப் போல இறைவனின் கட்டளையை வாழ்ந்து காட்டுவதில் கருத்தாயிருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 - வியாழன் - தை 2009

எபி 3: 7-14 திபா 95: 6-11 மாற் 1: 40-45

### இரக்கம்

இயேசு தொழுநோயாளியைக் குணமாக்கினார். இயேசுவின் இரக்கம் நம்பிக்கையோடு வந்த தொழுநோயாளியைக் குணமாக்கியது. நற்செய்தி தரும் சிந்தனையைப் பார்ப்போம்.

### தொழுநோயின் அகோரம்

தொழுநோய் என்பது அன்று யூத சமூகத்தில் மிகக் கொடிய நோயாகக் கருதப்பட்டது. இதற்குப் பொதுவாக குணமாக்கல் இல்லை. இவர் தீட்டுப் பட்டவர் எனக் கருதப்படுவார். இவர் சமூகத்திலிருந்து விலகியே வாழவேண்டும் (காண். லேவி 13). கோணி உடை உடுத்த வேண்டும், தலை சீவியிருக்க வேண்டும், உதடுகளை துணியால் மறைத்திருக்கவும் வேண்டும். மக்கள் அவரை நெருங்கி வந்தால் 'தீட்டு, தீட்டு' என்று அவர்களை எச்சரிக்க வேண்டும். இவ்வாறு ஒரு தொழுநோயாளி சீர வலியை மட்டுமல்ல சமூகத்தின் மனநிலையால் மனவேதனையையும் அனுபவிக்க வேண்டும். லேவி 14ல் குறிப்பிட்டுள்ளபடி தொழுநோயாளி குணமடைந்தால் அவர் குருவிடம் காட்டி அதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

### இயேசுவின் செயல்

யூதர்களின் மனநிலையும், சட்டங்களும் இருந்தாலும் இயேசு இவரை எவ்வாறு எதிர்கொண்டார். இயேசுவின் மனநிலை என்ன?

1. தொழுநோயாளி இயேசுவின் அருகில் வந்ததே மோசேயின் கட்டளையை மீறிய செயலாகும். ஆனால் இயேசுவோ அவரை துரத்திவிடவில்லை. மனிதனின் நம்பிக்கையிழந்த நிலையை இறையிரக்கத்தால் நிரப்பினார் இயேசு.
2. இயேசு தன் கையை நீட்டி, அவரைத் தொட்டு குணமாக்கினார். மக்களின் பார்வையில் தொழுநோயாளி தீட்டுப்பட்டவராக இருந்தாலும் இயேசுவிற்கு அவர் உதவி தேவைப்படும் ஒரு நல்ல மனிதராகவே காணப்பட்டார்.
3. குணமாக்கிய இயேசு அவரை மோசே கொடுத்த கட்டளையை நிறைவேற்ற அனுப்பிவைத்தார். மனிதரின் சட்டங்களை நிறைவேற்ற மறுப்பது இயேசுவின் நோக்கமல்ல. இங்கு இரக்கம், சக்தி, ஞானம் மூன்றும் இணைந்துள்ளன.

➪ என் பாவங்களை அறிக்கையிட்டு இயேசுவின் இரக்கத்தை அனுபவிக்க நான் நம்பிக்கையோடு முயற்சி செய்துள்ளேனா?

➪ இயேசுவின் இரக்கம் எப்போதும் எல்லோருக்கும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 ~ வெள்ளி - தை 2009

திப 20: 28-32, 36 திபா 96: 1-3, 6-8, 10 மாற் 16: 15-20

## முத் யோசப் வாஸ் விழா

திருச்சபை சரித்திரத்தில் இறைபணியாற்றியவர்கள் பலர். பல நாடுகளுக்கு சென்று தமது உயிரையும் பணயம் வைத்து இயேசுவின் கதையை அவரை அறியாதவர்களுக்குத் தெரிவித்து மறைசாட்சியாக இறந்தவர்களுள் முத்திப்பேறு பெற்ற யோசப் வாஸ் அடிகளும் ஒருவர். இலங்கை மண்ணில் கத்தோலிக்க விசுவாசம் தளர்ந்திருந்தபோது அவ்விசுவாசத்தைக் கட்டியெழுப்ப இந்தியா விலிருந்து வந்தவர் அவர். இவர் இலங்கையின் அப்போஸ்தலர். சென்று போதியுங்கள் என்பது இயேசுவின் கடைசிக்கால கட்டளை. மாற்கு நற்செய்தியில் காணும் விளக்கத்தைப் பார்ப்போம்.

**சென்று போதியுங்கள்**

இயேசுவிற்குப் பின்று திருச்சபையின் பணியையும் கடமையையும் நற்செய்தி காட்டுகின்றது. இதன் விளக்கம் என்ன?

***1. திருச்சபையின் போதிக்கும் பணி:*** இயேசுவின் கதையை அடுத்தவர்க்கு அறிவிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமை. இதை வாக்காலும் வாழ்வாலும் எடுத்துரைக்க வேண்டும். இயேசுவின் தூதர்களாக மாறுவது எம் கடமை.

***2. திருச்சபையின் குணமாக்கும் பணி:*** இயேசு மக்களின் ஆன்மீகத் தேவைகளோடு அவர்களது உடல் நோய்களையும் குணமாக்கினார். ஆன்மீக அனுபவம் பெறுவதற்கு உடல் நோய்கள் ஓர் தடையாக அமைந்து விடக்கூடாது. இப்பணி திருச்சபைக்கும் உண்டு.

***3. திருச்சபை சக்தி நிறைந்தது:*** நற்செய்தியில் குறிப்பிடப்பட்டதைப்போல கிறிஸ்தவர்களை பாம்பின் நஞ்சோ, கொல்லும் விஷமோ பாதிக்காது என்பதல்ல. மாறாக, கிறிஸ்தவர்கள் தமது சான்றுவாழ்வில் எந்த சவால்களையும் இறைவனில் நம்பிக்கையோடு எதிர்க்க வல்லவர்கள் என்றே பொருள்படும்.

***4. திருச்சபை தனித்து விடப்படாது:*** உலக முடிவுமட்டும் திருச்சபையோடு தான் இருப்பதாக வாக்களித்தார் இயேசு. இன்றும் கிறிஸ்து எமது வாழ்வில் செயல்படுகின்றார் என்பதை நாம் உணர்கின்றோம். அதவே திருச்சபையின் சக்தி, பலம், நம்பிக்கை. சிலுவையில் தொங்கி உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வை வாழ்ந்துகாட்டுவதே கிறிஸ்தவர்களின் கடமை.

➽ கிறிஸ்து அன்று தொடங்கிய பணி இன்று எனதாகின்றது என்பதை உணர்ந்து என் வாழ்வை அமைத்துக்கொள்கின்றேனா?

➽ வாக்காலும் வாழ்வாலும் கிறிஸ்து கதையை அறிவிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 - சனி - தை 2009

எபி 4: 12-16 திபா 19: 7-9, 14 மாற் 2: 13-17

## தூய அந்தோனியார் (மடாதிபதி)

லேவி எனப்படும் மத்தேயுவை இயேசு அழைத்தார். இவர் அல்பேயுவின் மகன், ஓர் வரி தண்டுபவர் (வசூலிப்பவர்). மத்தேயுவின் அழைப்பு தரும் பாடம் என்ன?

### வேண்டப்படாதவர்

வலி தண்டுபவர்கள் உரோமையரின் அரசுக்கு சார்பாக செயல்படு பவர்கள். இவர்களில் இரு தவறுகளை மக்கள் கண்டு இவர்களை வெறுத்தனர். 1. உரோமையருக்கு வரி வசூலித்தனர். 2. தமது விருப்பம்போல வரி வசூலித்து தமது வருமானத்தையும் கூட்டிக்கொண்டார்கள். இந்த காரணங்களுக்காக மக்கள் இவர்களை வெறுத்தனர். ஓர் கிரேக்க அறிஞர் இவர்களை விபசாரர்களுக்கும் முகத்துதி செய்பவர்க்கும் ஒப்பிடுகின்றார்.

மத்தேயு இயேசுவைப் பற்றியும் அவரது புதுமைகள் பற்றியும் கேள்விப் பட்டிருக்கலாம். இவ்வாறு அவருக்குள் ஓர் குற்ற உணர்வும் இருந்திருக்கலாம். இதனால் அவர் தனது தொழிலையே வெறுத்தும் இருக்கலாம். அவர் யூதத் தலைவர்களிடம் சென்றிருக்க முடியாது. அவர்கள் மத்தேயுவை ஏற்காமல் ஒதுக்கிவிடுவார்கள். இந்தப் பின்னணிகள் இயேசுவை ஏற்றுக்கொள்ள அடித்தளமாக அமைந்திருக்கலாம்.

### வேண்டப்பட்டவர்

இயேசுவும் தன் பணிவாழ்வில் நடந்துபோகும்போதும் சந்தர்ப்பங்களைத் தேடினார். மக்கள் மனம்மாற வேண்டும். தொகையாகவோ, தனிமனிதராகவோ கடவுளிடம் வரவேண்டும். இங்கும் இயேசுவிற்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது, பயன்படுத்தினார். இயேசுவின் அழைப்பு மத்தேயுவினுள் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. உடனேயே எழுந்து அவர் இயேசுவைப் பின்சென்றார். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் போன்றோர் மீண்டும் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லலாம். ஆனால் மத்தேயு அவ்வாறு செயல்பட முடியாது. ஆயினும் அவர் ஒரு தொழிலை விட்டாலும் இன்னொரு பாரிய தொழிலை, பணியைப் பெற்றார். அதுவே பேனாவைப் பயன்படுத்தி எழுதிய இயேசுவின் நற்செய்தி.

☞ இயேசு முன்வைக்கும் அழைப்பைத் தேடிச் செல்கின்றேனா?

☞ இயேசுவின் அழைப்பை உணர்ந்து எனது வாழ்வை அமைத்துக் கொள்வேன், அடுத்தவரையும் இயேசுவிடம் அழைத்து வருவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 2ம் ஞாயிறு

**18 - தை 2009**

*1சாமு 3: 3-10, 19 திபா 40: 1-3, 6-9 1கொரி 6: 13-15, 17-20 யோவா 1: 35-42*

### *அழைப்பு*

இறைவனின் அழைப்பு பலருக்கு பல வழிகளில் வந்ததை விவிலியம் சான்று பகர்கின்றது. ஆபிரகாம் தொடங்கி புதிய ஏற்பாட்டில் சீடர்கள்வரை பலரும் அழைக்கப்பட்டனர். இறைவனின் பணியை நிறைவேற்றுவது இவர்கள் கடமை. அதேவேளை இந்த அழைப்பு வெறும் வார்த்தைகளின் மூலமாக வருவதைவிட அனுபவத்தின் மூலமாக வரும்போது அதில் அர்ப்பணமும் சிறப்பாக இருக்கும் என்பதையும் நாம் காண்கிறோம். இந்த அழைப்பை உணர்ந்துகொள்ள பலர் உதவியுள்ளனர் என்பதை இன்றைய ஞாயிறு வாசகங் களில் காணலாம்.

### சாமுவேலின் அழைப்பு

ஏல்கானா, அன்னாவுக்கு ஒரே மகன் சாமுவேல். அன்னா தவமிருந்து பெற்றெடுத்த செல்வம் சாமுவேல். கடவுளுக்கு அவர் வாக்களித்தபடி சிறுவன் சாமுவேலை அன்னா ஏலியிடம் ஒப்படைத்தார். சிறுவன் சாமுவேல் ஏலியின் கீழ் பணிசெய்து வந்தான். அக்காலத்தில் ஆண்டவரின் வாக்கு அரிதாகவும் இருந்தது. இந்த சூழ்நிலையில் ஆண்டவர் சாமுவேலை அழைத்தார். ஆனால் தனக்கு வந்த அழைப்பை உணர்ந்துகொள்ளும் நிலையில் சாமுவேல் இல்லை.

### ஏலியின் வழிகாட்டல்

சாமுவேல் சிறுவனாக இருந்ததால் அழைப்பை உணர்ந்துகொள்ள முடியவில்லை. அழைப்பு வரும்போது எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ஏலி சாமுவேலுக்குக் கூறி வழிநடத்தினார். ஏலியின் வழிகாட்டல் அவருக்கு உதவியது. 'பேசும், உம் அடியான் கேட்கிறேன்' என்று சாமுவேல் பதில்கூற முடிந்தது. செவிமடுத்தலும் பதிலளித்தலும் இறை-மனித உறவுக்கு முக்கியமானது.

சாமுவேல் சிறுவனாக இருந்தாலும் ஏலியின் வழிகாட்டலின் உதவியோடு கடவுளின் அழைப்பை உணர்ந்தான். ஏலி வழிகாட்டினாலும் அவரது அனுபவம் தனிப்பட்டதே. இறையனுபவம் என்பது ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டதாகவே அமைகின்றது. இதை யாரும் மறுக்கமுடியாது. ஏலியும் சாமுவேல் இறைவனின் அழைப்பைப் பெறுவதற்குத் தடையாக இல்லாமல் உதவியாகவே இருந்தது சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'வந்து பாருங்கள்'**

'இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி' எனும் திருமுழுக்கு யோவானின் சான்றைத் தொடர்ந்து அவரது சீடர்கள் இருவர் இயேசு அனுபவம் பெறப் புறப்பட்டனர். யோவான் மெசியாவை அறிந்திருந்தார். தனது சீடர்கள் மெசியா அனுபவம் பெறுவதற்குத் தடையாக இராமல் உதவியாகவே இருந்துள்ளார் அவர். இது திருமுழுக்கு யோவானின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. மெசியாவைக் குறித்து முன்னறிவிக்க வந்தவரே அவர் என்பதில் அவர் தெளிவாகவே இருந்தார். இதனால்தான் 'நான் மெசியா அல்ல' என்று வெளிப் படையாகவே கூறிவந்தார் (காண். யோவா 1: 19).

'வந்து பாருங்கள்' எனும் இயேசுவின் அழைப்பைத் தொடர்ந்து அவரோடு தங்கி அனுபவம் சிறப்பானது. இயேசுவின் இந்த அழைப்பு நிபந்தனையற்றது. யோவானின் சீடர்கள் தன்னைப் பற்றி அறியவேண்டும் என்றும் அவர் மூலமாக இறைவனை அறிய வேண்டும் என்று இயேசு விரும்பியிருக்கலாம். அன்று இயேசுவோடு தங்கிய இவர்கள் இருவரும் அவரோடு உரையாடியிருப்பார்கள், அவரது வாழ்வைப் பார்த்திருப்பார்கள், பல கேள்விகளுக்கு விளக்கமும் பெற்றிருப்பார்கள்.

**மெசியாவைக் கண்டோம்**

சீடர்கள் இருவரும் தமது அனுபவத்தை அடுத்தவரோடு பகிரவும் தொடங்கினர். மெசியாவின் வருகைக்காக மக்கள் காத்திருந்த அந்த காலத்தில் மெசியா தம்மிடையே வந்துள்ளார் எனும் செய்தியை முதலில் சீமோனிடம் தெரிவித்தனர். 'மெசியாவைக் கண்டோம்' என்பது அவர்களது சான்று. இவ்வாறு தாம் பெற்ற அனுபவத்தை சீமோனோடு பகிர்ந்து அவரையும் இயேசு அனுபவத்திற்கு இவர்கள் அழைத்து வந்தனர்.

சாமுவேல், யோவானின் சீடர்களின் இறையனுபவம் அவர்களைச் செயல்பட வைத்தது. சென்று அடுத்தவர்க்கு தமது அனுபவத்தை அறிவித்தனர். தமது வாழ்வையும் மாற்றிக்கொண்டனர். அழைப்பு, இறையனுபவம், அந்த அனுபவம் பற்றிய ஆழமான தியானம் ஒருவரை இயல்பாகவே செயல்பட வைக்கும் என்பதை இன்றைய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன.

**வாழ்விற்கு...**

✠ எனது இயேசு அனுபவம் என்ன? நாளாந்த வாழ்வின் அனுபவங்களில் இறைவனின் வழிகாட்டலை உணர்ந்துள்ளேனா?

✠ எனது இயேசு அனுபவங்களை ஆன்மீக அனுபவங்களாக மாற்றி அடுத்தவரும் இயேசு அனுபவம் பெற உதவிடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 - திங்கள் - தை 2009

எபி 5: 1-10 திபா 110: 1-4 மாற் 2: 18-22

### நோன்பு

நோன்பு பற்றிய சரியான விளக்கத்தை இயேசு நற்செய்தியில் தருகின்றார். பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் யூதர்களின் சட்டம் சம்பந்தமான மனநிலை ஒன்றாக இருந்தாலும் புதிய சட்டம், சிந்தனை, மனநிலை பழையதுக்கு வேறுபட்டதாக உள்ளது என்பது இயேசுவின் போதனைகளிலிருந்து தெளிவு. நற்செய்தி தரும் செய்தியைப் பார்ப்போம்.

### யூதர்களின் நோன்பு

யூதர்களின் வாழ்வையும் நோன்பையும் பிரித்துப் பார்க்க முடியாது. யூத மறைப்படி வருடத்தில் ஒருமுறை மட்டும் ஒருவர் கட்டாயமாக நோன்பிருக்க வேண்டும். அது பரிகாரத் திருவிழாவின்போது நடைபெறும். இந்த தினத்தில் நாடு முழுவதும் நோன்பிருந்து தமது பாவங்களுக்கு மக்கள் பரிகாரம் தேடுவர்.

ஆயினும் பாரம்பரியம் விரும்பும் யூதர்கள் வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய நாட்களிலும் நோன்பிருப்பர். இந்த நோன்பு காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரைக்கும் கடைப்பிடிக்கப்படும். இயேசு நோன்பிருப்பதற்கு எதிரானவரல்ல. நோன்பிருப்பதால் நன்மைகளும் பல உண்டு. ஒருவர் உணவைத் தவிர்ப்பதால் தன் உணவிற்கு தானே அதிபதி என்பதை உறுதிசெய்கிறார். அல்லது உணவினால் அவர் கவரப்பட்டு அதற்கு அடிமையாகிவிடுகின்றார். நோன்பின் மூலம் ஒருவர் தனது ஆசைகளைக் கட்டுப்படுத்தவும் இறைவனின் கொடைகளைப் பாராட்டவும் முடியும்.

### திருமணத்தின்போது விதிவிலக்கு

திருமணம் முடிந்ததும் மணமக்கள் தனியாகச் செல்லாமல் ஒரு வாரம் வீட்டில் தங்குவார்கள். இந்தவாரம் கொண்டாட்டம் நடைபெறும். இந்த நாட்கள் ஒருவரின் வாழ்வில் மறக்க முடியாத நாட்களாகும். மணமக்களின் தோழர் தோழிகள் இந்நாட்களில் அனைத்து சமயக் கடமைகளிலிருந்தும் விலக்கப்படுவர். இந்த நிலையையே இயேசுவும் தனது இவ்வுலக வாழ்வு, சிலுவை மரணத்திற்கு ஒப்பிட்டு சீடர்கள் நோன்பிருக்காததற்கு விளக்கம் கொடுக்கின்றார். இயேசுவின் உயிர்ப்பிற்குப்பின் அவர்களது வாழ்வு தெளிவு.

✧ இயேசுவில் மகிழ்ந்திருக்க நானும் அழைக்கப்படுகின்றேன். ஆயினும் இந்த அர்ப்பணத்தில் துன்பமும் உண்டு என்பதை ஏற்று வாழ்கின்றேனா?

✧ இயேசுவை வாழ்ந்து காட்டுவதே எனது நோன்பாக இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 - செவ்வாய் - தை 2009

எபி 6: 10-20 திபா 111: 1-2, 4-5, 9-10 மாற் 2: 23-28

### நோன்பு

ஓய்வுநாள் பற்றிய தர்க்கம் எழுகின்றது. சீடர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து சாப்பிட பரிசேயர் இதை எதிர்த்தனர். இயேசுவின் பதில் தரும் செய்தி என்ன என்பதைப் பார்ப்போம்.

### ஓய்வுநாள் சட்டங்கள்

யூத சட்டத்தில் ஓய்வுநாள் பல ஆயிரம் விதிமுறைகளையும் ஒழுங்கு களையும் கொண்டிருந்தது. அனைத்து வேலைகளும் தடைசெய்யப் பட்டிருந்தன. வேலைகள் 39 தலைப்புகளாகப் பரிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் அறுவடை செய்தல், பதர் நீக்குதல், கதிரடித்தல், உணவு ஆயத்தம் செய்தல் என்பன உள்ளடங்கும். சீடர்கள் தமது செயல்களால் சட்டத்தை மீறி விட்டார்கள். பரிசேயரும் தயங்காமல் சீடர்களின் செயலை எதிர்த்தனர்.

### இயேசுவின் பதில்

இயேசுவோ சீடர்களைத் தடுக்கவில்லை. மாறாக அவர் இரண்டு வழிகளில் சூழ்நிலையை அணுகினார்.

1. 1சாமு 21: 1-6ல் தரப்பட்டுள்ள சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு தன் சீடர்களின் செயலும் சரியானது என்றார் இயேசு. தூய அப்பங்கள் தூயகத்தில் வைக்கப்பட்டிருக்கும். அவை அமையவேண்டிய முறைகளை விப 25: 23-30 பகுதியில் காணலாம். இந்த தூய அப்பங்கள் வாரத்திற்கு ஒரு தடவை மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படும்போது சட்டப்படி குருக்கள் மட்டுமே அவற்றை உண்ணலாம் (காண். லேவி 24: 9). ஆனால் மனிதத் தேவையைக் கருத்திற்கொண்டு தாவீது அவற்றை எடுத்து உண்டதோடு நிற்காமல் அங்கு இருந்தவர்களுக்கும் கொடுத்தார்.
2. சட்டத்தைவிட மனிதத் தேவை இயேசுவிற்கு முன்னுரிமை பெறுகின்றது. சட்டத்திற்கு முன்பே மனிதன் படைக்கப்பட்டான். இந்நிலையில் மனித வாழ்வு முழுமையடையவே சட்டங்கள் கொடுக்கப்படுகின்றன. மனிதனோ அந்த சட்டங்களுக்கு அதிகமான முன்னுரிமைகள் கொடுத்து அந்த சட்டங் களுக்கே அடிமையாகி விடுகின்றான். இதையே இயேசு எதிர்த்து ஓய்வுநாள் மனிதருக்கு உண்டாக்கப்பட்டன என்றார்.

✔ சட்டம் பற்றிய எனது மனநிலை என்ன? உறவுகளை வளர்க்க சட்டங்களை பயன்படுத்துகின்றேனா என்பதில் நான் தெளிவாயிருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 - புதன் - தை 2009

*எபி 7: 1-3, 15-17 திபா 110: 1-4 மாற் 3: 1-6*

## *மனநிலை*

ஓய்வுநாளில் இயேசு கை சூம்பியவரைக் குணமாக்கினார். இதன் பின்னணி, விளைவுகளைப் பார்ப்போம்.

### யூதரின் மனநிலை

யூதர்கள் ஓய்வுநாள் சட்டங்கள் பற்றி கண்டிப்பாக இருந்தனர். ஓய்வுநாளில் ஒருவரது உயிருக்கு ஆபத்து வந்தால் தவிர மருத்துவ வசதிகளும் செய்துகொடுக்கக்கூடாது. குழந்தைப் பேறு என்றால் கவனிக்கலாம். சுவர் இடிந்து விழுந்து அந்த இடிபாடுகளுக்கிடையே ஒருவர் உயிரோடு இருந்தால் அவரைக் காப்பாற்றலாம். அவர் இறந்துவிட்டால் உடலை எடுக்கக்கூடாது. எலும்பு முறிவுக்கு கட்டுப்போடக்கூடாது. வெட்டப்பட்ட காயத்துக்கு சாதாரண கட்டு மட்டுமே போடலாம். யூதமறையில் கடினப்போக்குடையவர்கள் ஓய்வுநாளில் தமதுயிரைக் காக்கவும் செயல்படமாட்டார்கள். உயிரைவிட ஓய்வுநாள் சட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தார்கள்.

### இயேசுவின் மனநிலை

இயேசுவின் செயல்கள் யூதத் தலைவர்களுக்குப் பல செய்திகளைக் கொடுத்தன. இங்கு இயேசுவே முன்வந்து நல்லது செய்தார்.

1. கை சூம்பியவரை நோக்கி எழுந்து நடுவில் நில்லும் என்றார். அவர் தனித்தோ, மறைமுகமாகவோ இந்த செயலைச் செய்ய விரும்பவில்லை.

2. அங்கிருந்தோரிடமே ஓர் கேள்வி கேட்டு அவர்களை சிந்திக்க வைத்தார். 'ஓய்வுநாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா?' பதில்சொல்ல முடியாத நிலையில் தலைவர்கள் இருந்தனர். ஏனெனில் பரிசேயர்களுக்கு சமயம் என்பது சடங்குகளாகவே இருந்தது. இயேசுவுக்கோ சமயம் பணியாக இருந்தது. அந்த பணி இறை-மனித அன்பிலிருந்து ஊற்றெடுக்க வேண்டும். எனவே இயேசு துணிந்து பணிசெய்தார். ஓய்வுநாளில் நன்மை செய்வதில் எவ்வித தப்பும் இல்லை என்பது அவரது மனநிலை. இரக்கச் செயல்கள் செய்வதற்கு சட்டம் ஓர் தடையாக யூதர்களுக்கு அமைய, அதை இயேசு துணிவோடு மாற்றினார்.

✞ சட்டத்தைவிட அன்பிற்கு நான் முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறேனா?

✞ அடுத்தவர் துன்புறும்போது அவர்களுக்கு உதவ வேண்டும் எனும் மனநிலையை நான் வளர்த்து சான்று பகர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 - வியாழன் - தை 2009

எபி 7: 25-8: 6 திபா 40: 6-9, 16 மாற் 3: 7-12

### *தடைகள்*

இயேசு இறைபணி செய்ய இவ்வுலகிற்கு வந்தாலும் அவருக்கென்று ஓர் திட்டம் இருந்தது. அதன்படியே அவர் தனது பயணங்களை மேற் கொண்டார். அவரது இலக்கை நோக்கிய பயணங்களின்போது தடையாக வந்த சிலரைப் பார்ப்போம்.

### யூதத் தலைமை

தொழுகைக்கூடத்தில் கை சூம்பியவரைக் குணமாக்கிய சம்பவம் தலைவர்கள் மத்தியில் பெரும் கோபத்தை ஏற்படுத்த இயேசுவை எவ்வாறு ஒழிக்கலாம் என்று அவர்கள் சூழ்ச்சி செய்தனர். அந்த நேரத்தில் அவர்களோடு வாதத்தில் இறங்கவோ, அவர்களுக்கு சவாலாக இருக்கவோ இயேசு விரும்பவில்லை. ஏனெனில் அவரது நேரம் இன்னும் வரவில்லை. இயேசுவோ அங்கிருந்து புறப்பட்டு கடலோரமாக வந்தார்.

### 'இறைமகன் நீரே'

மக்கள் திரள்திரளாக இயேசுவிடம் வந்தனர். நூறுக்கும் அதிகமான மைல் தொலைவிலிருந்தும் வந்தனர். இயேசு நோயாளிகளைத் தொடுவதற்கு முன்பாக அவர்களே முண்டியடித்து அவரைத் தொட்டனர். தீய ஆவிகள் அவரை 'இறைமகன் நீரே' என்றுகூறின. இயேசு அவற்றைப் பேசவிடாமல் தடுத்தார். இறைமகன் எனும் சொல் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்கள் அறிந்திருந்த சொல். அதற்கு பல அர்த்தங்கள் இருந்தன. அ. வானதூதர்கள் இறைமகன் என்று அழைக்கப்பட்டனர் (காண். தொநூ 6: 2, யோபு 1: 6). ஆ. இஸ்ரயேல் அரசு கடவுளின் மகன் என்றும் அழைக்கப்பட்டது (காண். ஓசே 11: 1, விப 4: 22). இ. இஸ்ரயேல் நாட்டின் அரசரும் கடவுளின் மகன் என அழைக்கப்பட்டார். இறுதியில் இப்பெயர் வரவிருக்கும் மெசியாவிற்கே தனித்துவமாகப் பயன்படுத்தப்பட்டது. இயேசு இறைமகன் என்பது உண்மை. ஆனால் மக்கள் அவரை தவறாக எண்ணி இவ்வுலகை ஆளுகின்ற அரசராக மாற்ற முயலக்கூடாது என்பதற்காக இயேசு அந்த சந்தர்ப்பத்தில் அலகைகளை அடக்கினார். அலகைகளின் சான்று இயேசுவின் பணிக்குத் தடையாக இருந்து விடக்கூடாது என்பது அவரது எண்ணம்.

★ இயேசு தொடங்கிய பணிவாழ்விற்கு நான் தடையாக உள்ளேனா?

★ இயேசு பணி தொடர என் பங்களிப்பை நிறைவாக செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 ~ வெள்ளி - தை 2009

எபி 8: 6–13 திபா 85: 7, 9–13 மாற் 3: 13–19

### அழைப்பு

இயேசு தன் பணியைத் தொடங்கினாலும் இப்போது ஓர் முக்கிய கட்டத்திற்கு வந்தவராக தன்பணி தொடர பன்னிருவரைத் தெரிந்தெடுத்தார். இவர்களின் தெரிவு, பணி அப்போது பன்னிருவருக்கும் தெளிவாகத் தெரிந்திரா விட்டாலும் காலப்போக்கில் இத்தெரிவு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம். புத்தகங்களோ, பத்திரிகைகளோ புழக்கத்தில் இல்லாத நிலையில் அன்று தனது செய்தியை வேகமாக, அதிக எண்ணிக்கையான மக்களுக்கு எடுத்துரைப்பதென்பது கடினமாகவே இருந்தது. எனவே இறைவனின் அன்புச் செய்தியை எங்கும் பரப்ப சீடர்கள் தேவைப்பட்டனர்.

**கிறிஸ்தவம் ஒரு குழுவோடு...**

இயேசுவைத் தொடர்ந்து திருத்தூதர்களும் சீடர்களும் செயல்படத் தொடங்கினார்கள். இவர்களுள் ஒன்றிப்பு, புரிந்துணர்வுகள் இருந்தன. இவர்களைப் பரிசேயர்களோடு ஒப்பிடும்போது, பரிசேயர்கள் பெயரிலேயே 'பிரிந்து வாழ்பவர்கள்' என்று பொருள்பட்டனர். யூத மறையைக் காக்க வேண்டுமெனும் நோக்கோடு இவர்கள் மக்களிடமிருந்து பிரிந்து நின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் அவ்வாறல்ல. இவர்கள் தமக்குள் ஆழமான ஒன்றிப்பில் வாழ்ந்தவர்கள் (காண். திப 2: 42). அடுத்தவர்களோடு, அடுத்தவர்களுக்காக வாழ்ந்தவர்கள் கிறிஸ்தவர்கள். இதுவே இவர்களது சிறப்பான சான்று வாழ்வு.

**கிறிஸ்தவம் பலதரப்பட்டவரோடு...**

திருத்தூதர்கள் என்று இயேசு பன்னிருவரைத் தெரிவுசெய்தாலும் இவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டனர். சிந்தனை, தொழில், அனுபவம், பொருளாதாரம் என்று பல துறைகளில் இவர்கள் வேறுபட்டவர்களாகவே இருந்தனர். ஆயினும் கிறிஸ்தவத்தில் இவர்களது இந்த வேறுபாடுகள் முக்கியமல்ல. மாறாக, இவர்கள் கிறிஸ்துவில் ஊன்றியுள்ளனர் என்பதே முக்கியமானது. ஒருவர் கிறிஸ்துவில் ஊன்றியிருந்தால் அவரது வாழ்வு மாறுபட்டதாக இருக்கும். பன்னிருவரும் கல்வியில் சிறந்திருக்கவில்லை. ஆனால் இயேசு அனுபவத்தில் ஊன்றியிருந்தனர். அதுவே இவர்கள் கொண்டிருந்த நற்சான்று.

✧ கிறிஸ்தவ அழைப்பு என்னில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது?

✧ அழைப்பை உணர்ந்து ஆன்மீக வாழ்வில் நிலைத்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 - சனி - தை 2009

எபி 9: 2-3, 11-14 திபா 47: 1-2, 5-8 மாற் 3: 20-21

### தடைகள்

இயேசுவைப் பலர் சரியாகப் புரிந்துகொள்ளாவில்லை. நற்செய்தியில் அவரது உறவினர்களே அவர் மதிமயங்கி இருக்கிறார் என்று எண்ணி அவரைப் பிடித்து வீட்டிற்குக் கொண்டுசெல்ல வந்தனர். இதுவும் அவருக்கு ஓர் தடையாகவே இருந்தது. ஆயினும் இவர்கள் இவ்வாறு செயல்படக் காரணங்கள் என்ன என்பதைத் தியானிப்போம். இயேசுவின் உறவினர்கள் அவரைப் பிடித்துச் செல்ல வந்ததன் மூன்று காரணங்களைப் பார்ப்போம்.

**1. அவரது தொழில்**

இயேசு தச்சுத் தொழிலை வளர்ப்புத் தந்தை யோசேப்புவிடமிருந்து கற்றிருப்பார். இத்தொழில் மூலமாக நல்ல வருமானம் கிடைக்கவும் வாய்ப்பிருந்தது. இத்தொழில் நல்ல வருமானத்தைக் கொடுக்க அவர் வாழ்வில் நல்ல வளமான எதிர்காலத்தைப் பார்த்திருக்கலாம். இயேசு நல்லறிவுள்ள ஒருவராக இருந்தால் வளம் தரக்கூடிய தொழிலை விட்டுவிட்டு தனித்துத் திரியமாட்டார் என்பது உறவினர்களின் சிந்தனையாக இருந்திருக்கலாம்.

**2. யூதத் தலைமையோடு முரண்பாடு**

பணிவாழ்வைத் தொடங்கியதிலிருந்து இயேசு பல சவால்களை எதிர்கொண்டார். விசேடமாக யூதத் தலைவர்கள் அவரது போதனைகளிலும், செயல்களிலும், மனநிலையிலும் குறைகாணத் தொடங்கினார்கள். இயேசுவோடு வாதத்தில் வெல்ல முடியாதபோது அவரைத் தொலைத்துக்கட்ட திட்டமும் தீட்டினார்கள். அன்று மக்கள் யூதத் தலைவர்களுக்குப் பயந்தே வாழ்ந்தனர். இயேசு விவேகமுள்ள ஒருவராக இருந்தால் யூதத் தலைவர்களோடு இவ்வாறு முரண்பட்டிருக்க மாட்டார் என்றும் அவரது உறவினர்கள் கருதியிருக்கலாம்.

**3. இயேசுவின் தெரிவு**

தனது பணியைத் தொடர்ந்து செய்ய இயேசு தெரிவுசெய்த பன்னிருவர் பலவகைகளில் வேறுபட்டிருந்தனர். பொறுப்புள்ள ஒரு தலைவர் இப்படிப்பட்ட சீடர்களைத் தெரிவு செய்திருக்கமாட்டார் என்பதும் உறவினரின் சிந்தனையாக இருந்திருக்கலாம். ஆனால் இயேசு தன் முடிவுகளில் தெளிவாகவே இருந்தார்.

★ என் வாழ்வில் இயேசுவின் செயல்களை சந்தேகித்துள்ளேனா?

★ என் எண்ணங்கள் கடவுளின் எண்ணங்கள் என்பதை உணர்ந்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 3ம் ஞாயிறு

## 25 - தை 2009

யோனா 3: 1-5, 10 திபா 25: 4-7, 8-9 1கொரி 7: 29-31 மாற் 1: 4-20

### *நிறைவாழ்வு*

இன்றைய ஞாயிறு வாசகங்கள் மனமாற்றத்திற்கான அழைப்பு, மக்களின் மனமாற்றம், அது தரும் புதுவாழ்வு பற்றி அறிவிக்கின்றன. இரு வாசகங்களை நற்செய்தியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிடைக்கும் இறையுண்மைகளைப் பார்ப்போம். இவற்றின் பின்னணியில் எமது அழைப்பை உணர்ந்துகொள்வோம்.

### செய்தி கொண்டுவந்தோர்

பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களில் இறைபணியாளர்களை அறிகிறோம். இவர்கள் பல நிலைகளில், வேறுபட்ட சூழ்நிலைகளில் பணிசெய்துள்ளனர். இன்றைய வாசகங்களில் யோனா, திருமுழுக்கு யோவான், இயேசு, பவுல் ஆகியோரின் பணிகளைப் பார்க்கிறோம். இவர்களது பின்னணிகள் எவை?

**1. *யோனா:*** இவர் நினிவே நகருக்கு செய்தி கொண்டுவந்தாலும் அதன் அழிவை விரும்பியவர். ஆனால் கடவுளால் முறையாக வழிநடத்தப்பட்டார். கொண்டுவந்த செய்தி கடினமானதாக இருந்தாலும் அதை நிறைவேற்றினார்.

**2. *திருமுழுக்கு யோவான்:*** இயேசுவிற்கு முன்னோடியாக வந்தவர் இவர். தன்பணி உணர்ந்து செயல்பட்டார். மக்களை இயேசுவிடம் கொண்டுவருவதில் கருத்தாயிருந்தார். இறைபணிக்காக (உண்மைக்காக) தனதுயிரையும் கொடுக்கத் தயங்கவில்லை.

**3. *இயேசு:*** தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வந்தவர் இயேசு. மக்கள் மனம்மாறி இறைத்தந்தையின் இரக்கத்தை அனுபவித்து நிலைவாழ்வைப் பெறவேண்டும் என்பதில் குறியாயிருந்தார். அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய ஆயத்தமாக இருந்தார் அவர்.

**4. *தூய பவுல்:*** தனது இயேசு அனுபவம் அனைவரின் அனுபவமாக மாறவேண்டும் என்று தனது பயணங்கள், போதனைகள், திருமடல்கள் மூலமாக கிறிஸ்தவர்களை வழிநடத்தினார் பவுல்.

### கொண்டுவந்த செய்தி

**1. *யோனா:*** இவரது செய்தி கடினமான செய்தி. மக்கள் மனம்மாறாவிடில் தண்டனை நிச்சயம். மக்கள் இதை ஏற்கலாம் அல்லது நிராகரித்து யோனாவிற்கே ஆபத்து விளைவிக்கலாம். எனவே தொடக்கத்தில் யோனா தயங்கினாலும் பின் தன் பணி உணர்ந்து செயல்பட்டார். வெளிப்படையாகப் போதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. யோவான், இயேசு:** இவர்கள் கொண்டுவந்தது மனமாற்றத்திற்கான செய்தி. இதில் நிபந்தனை இருந்தது. இந்த செய்தி நல்ல செய்தியாகவும் வந்தது.

**3. பவுல்:** ஆழமான கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து காட்ட விடுக்கப்படும் செய்தி பவுலின் செய்தி. அழைக்கப்பட்டபோது அடிமையாகவோ, உரிமைக் குடிமகனாகவோ இருந்தாலும் கிறிஸ்துவை ஆழமாக அறிந்து அழைக்கப்பட்ட நிலையில் கடவுள் முன்னிலையில் நிலைத்திருக்க வேண்டும் எனும் செய்தியைக் கொடுக்கிறார்.

## செய்தியைப் பெற்றோர்

**1. நினிவே மக்கள்:** இவர்கள் யூதர்கள் அல்ல. ஆனால் தீமையில் வாழ்ந்தவர்கள். ஆன்மீக இருளில் மூழ்கியிருந்தனர். இவர்களுக்கு கடுமையான செய்தி தேவைப்பட்டது. ஆயினும் செய்தியைக் கேட்டதும் இவர்கள் மனம்மாறி கடவுளின் வழிக்கு வந்தனர். கடவுளின் இரக்கத்தையும் பெற்றனர்.

**2. யூதர்கள்:** இவர்களுக்கே முதல் செய்தி என்பது இயேசுவின் கருத்து. யூதர்கள் மூலமாக உலகை மீட்கும் கடவுளின் திட்டத்தில் மிக முக்கியமான கட்டம் இது. நற்செய்தியில் நாம் காணும் யூதர்கள் பலர் திருமுழுக்கு யோவான், இயேசுவின் போதனைகளால் மனம்மாறினர். ஆயினும் இயேசுவிற்குப் பணிவாழ்வின்போது எதிர்ப்புகள் யூதர்களிடமிருந்தே வந்தன.

**3. கிறிஸ்தவர்கள்:** இவர்கள் பவுலின் போதனைகளைக் கேட்டு, திருமுழுக்குப் பெற்று கிறிஸ்து அனுபவம் பெற்றவர்கள். இவர்கள் ஆழமான விசுவாச வாழ்வு வாழ்ந்துகாட்ட அழைக்கப்படுகின்றனர்.

## கிடைக்கும் பலாபலன்கள்

நினிவே மக்கள் மனம்மாறியதால் இறைவனின் இரக்கத்தைப் பெற்று தண்டனையிலிருந்து தப்பினார்கள். புதுவாழ்வு வாழவும் தொடங்கினார்கள். யூதர்களுக்கு மனமாற்றத்தைத் தொடர்ந்து இறையாட்சியின் நிறைவும், புதுவாழ்வும், நிலைவாழ்வும் கிடைக்கின்றன. தொடக்ககால கிறிஸ்தவர்கள் தமது சான்று வாழ்வின் காரணமாக பல துன்பங்களை அனுபவித்தாலும் நிலைவாழ்விற்காக நம்பிக்கையில் வாழ்ந்தனர். மறைசாட்சிகளானார்கள்.

☛ வாசகங்களில் பல மனநிலைகொண்ட மக்களை நான் எதிர்கொண்டாலும் இன்று மனமாற்றம், புதுவாழ்வு பற்றிய எனது மனநிலை என்ன?

☛ நினிவே மற்றும் யூதர்கள் போல நானில்லாது கிறிஸ்துவை அனுபவித்து வாழ்ந்து காட்டும் எனது அழைப்பை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2திமொ 1: 1-8 திபா 95: 1-3, 7-8, 10 லூக் 10: 1-9

## தூய திமொத்தேயு, தீத்து நினைவு

இயேசு பணிக்கென்று சீடர்களை அனுப்பினார். இது இவர்களுக்கு பயிற்சியாகவும் இருந்தது. இதன் முக்கிய இரு தன்மைகளை நாம் பார்ப்போம்.

### ஆட்கள் தேவை

இறைபணி என்பது நிறைவுறாத பணி. பொருள் தேடும் இந்த உலகம் உடனடி இன்பத்தில் திழைக்கவே விரும்புகின்றது. கடவுள் பற்றிய எண்ணம், உணர்வு மக்கள் மனங்களில் இருந்தாலும் உடனடித் தேவை, ஆசைகள், நிறைவுகள் மக்களை விரைவாகக் கவர்ந்துவிடுகின்றன. எனவே கடவுளைவிட உலகம் தரும் நிலையற்ற மகிழ்ச்சியே மக்களுக்கு முன்னுரிமையாகப் படுகின்றன. இந்த எண்ணங்களை உடைத்தெறிந்து செயல்படவும் இறைபணியாற்றவும் ஆட்கள் தேவை. எமது சூழ்நிலையில் பார்த்தால் இது துறவறத்தவரின் பற்றாக்குறை எனலாம். இயேசு தனது சீடர்களைத் தெரியும்போது 'தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும்...' பன்னிருவரைத் நியமித்தார் என்கிறார் மாற்கு நற்செய்தியாளர் (காண். மாற் 3: 14). இவ்வாறு இயேசுவோடு இருந்து அனுபவம் பெறுபவர்கள் அந்த அனுபவத்தை வாழ்ந்து காட்டும்போது அதுவே சிறந்த சான்றாகி விடுகின்றது.

### பாதுகாப்புத் தேவை

உலகம் தனது இன்பத்திற்குத் தடையாக வரும் எவரையும் அழிக்கப் பார்க்கும். இயேசுவின் காலத்திலேயே யூதத் தலைவர்கள் இயேசுவிற்கு எதிராக செயல்பட்டனர். ஏனெனில் அவர்களது சுயநலப் போக்குகளை இயேசு வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார். இயேசுவிற்கு ஆபத்துகள் பலரிட மிருந்து வந்தன. அவரோ விவேகமாக இருந்து செயல்பட்டார்.

'ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல...' என்று இயேசு சீடர்களுக்குக் குறிப்பிடுகின்றார். இதன் அர்த்தம் ஆடு மேய்க்கும் ஒருவருக்கு தெளிவாகத் தெரியும். ஆயினும் ஆபத்துகளில் விவேகமாக இருந்து ஒருவர் இறைபணிசெய்வதில் கருத்தாயிருக்க வேண்டும். கடவுளின் பாதுகாப்பு, சக்தி, வழிகாட்டல் நிறைவாக இருக்கும்.

➠ நற்செய்தி முழக்கப் பணி என்பது எனது பணி என்பதை உணர்ந்து செயல்படுகின்றேனா? இதற்கு இயேசு அனுபவம் எனக்குண்டா?

➠ நற்செய்தியை வாழ்ந்து காட்டுவேன், வாழ்வு கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 – செவ்வாய் – தை 2009

எபி 10: 1–10 திபா 40: 1. 3, 6–7, 9–10 மாற் 3: 31–35

### உறவு

இயேசுவைத் தேடி அவரது தாயும் சகோதர சகோதரிகளும் வந்தனர். இயேசுவோ கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே தன் தாயும் சகோதரர்களும் ஆவர் என்றார். எனவே உறவுகள் என்று இயேசு யாரைக் கருதுகின்றார் என்பதை ஆராய்வோம்.

**பொது அனுபவத்திலிருந்து...**

யூத மறையில் பல காரணங்களுக்காக மக்களுக்குள் பல பிரிவுகள் இருந்தன. பாவிகள், நோயாளிகள், விதவைகள் என்று பல பிரிவுகள். ஒரே கடவுளின் மக்கள் எனும் உணர்வு இவர்களுள் இருந்தாலும் அந்தக் கடவுளின் பெயராலும் ஒன்றாக மாட்டார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் ஊர், பிறப்பு, பால், தொழில் போன்றவற்றால் வேறுபட்டாலும் விசுவாசத்தில் ஒன்றாக இருந்தனர். நாம் அனைவரும் இயேசு ஏற்ற சிலுவை மரணத்தால் மன்னிக்கப்பட்டவர்கள் எனும் உணர்வு இந்த ஒன்றிப்பை ஏற்படுத்தியது.

**பொது நோக்கத்திலிருந்து...**

வாழ்வில் ஒவ்வொருவருக்கும் விதம் விதமான நோக்கங்கள் இருந்தன. இதில் இவர்கள் வேறுபட்டிருந்தார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை அறிவதையும் அவரது நற்செய்தியை அறிவிப்பதையும் ஒரே நோக்காகக் கொண்டிருந்தனர்.

**பொது கீழ்ப்படிவிலிருந்து...**

இயேசு தெரிவுசெய்த பன்னிருவரும் வேறுபட்டிருந்தனர். தீவிரவாதியான சீமோனும் வரி வசூலித்த மத்தேயுவும் வாழ்வில் பரம விரோதிகள். ஆனால் இயேசுவின் அழைப்பைப் பெற்றபின்பு இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதையே ஒரே நோக்காகக் கொண்டிருந்ததால் ஒன்றித்திருந்தனர்.

இயேசு குறிப்பிடும் உறவு இரத்த உறவுகளையும் கடந்து கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. இதில் மரியா அழைப்புக்கேற்ப வாழ்ந்து காட்டியதால் அவரே முதல் இடத்தை வகிக்கிறார்.

✯ எனது கிறிஸ்தவ வாழ்வு அடுத்தவரது புகழைப் பெறுவதையா அல்லது கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுவதையா இலக்காகக் கொண்டுள்ளது?

✯ கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவது எனது இலக்காகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 - புதன் - தை 2009

எபி 10: 11-18 திபா 110: 1-4 மாற் 4: 1-20

### வாக்கு

விதைப்பவர் உவமையில் எமது பங்கென்ன என்பதை சிந்தித்து செயல்பட அழைக்கின்றார் இயேசு. உவமை தரும் பாடம் என்ன? தெரிந்த ஒரு விடயத்திலிருந்து தெரியாத விடயத்திற்குச் செல்வதே உவமை. உலக விடயங்களிலிருந்து இயேசு விண்ணக உண்மைகளைத் தருகிறார்.

### வழியோரத்தில் விதை

பாலஸ்தீனாவில் வயல்வெளி நீண்டு ஒடுங்கியதாக இருந்தது. இவை புற்கள் கொண்ட நடைபாதையால் பிரிக்கப்பட்டிருந்தன. மக்கள் அவற்றில் நடப்பதால் அத்தரை கடினமானதாகிவிடும். இத்தரையில் விதை விழுந்தால் அது பறவைகளுக்கு இரையாகிவிடும். இறைவாக்கைக் கேட்டும் கடின மனதுடையவர்களுக்கு இது ஒப்பிடப்படுகின்றது. தீயவர் அவர்களை இலகுவாகக் கவர்ந்து விடுவார்கள்.

### பாறைநிலத்தில் விதை

இது கற்பாறைகளைக் குறிக்கவில்லை. பாலஸ்தீனாவில் சுண்ணாம்புக் கல் பாறைகள் இருந்தன. இவற்றின்மீது ஓரளவு மண்ணும் இருக்க இந்த நிலத்தில் விழும் விதைகள் பசளையற்ற, காய்ந்த மண்ணில் நிலைக்க முடியாமல் கருகி விடுகின்றன. இறைவாக்கைக் கேட்கும் சிலர் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதில்லை. உலகக் கவலைகள் வரும்போது கிறிஸ்துவின் வழிகாட்டலை மறந்துவிடுவர். நம்பிக்கை இழந்துவிடுவர்.

### முட்புதரின் நடுவில் விதை

விவசாயிகள் பலர் தமது வயல்களில் முட்புதர்களை முழுமையாக அகற்றுவதில்லை. புதர்களின் மேல் பகுதியை வெட்டிவிட்டு நெருப்பு வைத்துவிடுவார்கள். அவை அப்போது கருகினாலும் காலப்போக்கில் பலத்தோடு வளர்ந்து பயிரை நசுக்கிவிடும். வாக்கைக் கேட்கும் பலர் ஆர்வத்தோடு கேட்டாலும் ஆழ்மனதில் வேரற்றவர்கள். இவர்கள் தீர்மானங்கள் எடுப்பார்கள் ஆனால் அர்ப்பணிக்க மாட்டார்கள்.

### நல்ல நிலத்தில் விதை

1. நாம் இறைவாக்கை உற்றுக் கேட்க வேண்டும்.
2. இறைவாக்கை பெற்றுக்கொள்ள வேண்டும். அதை எமதாக்க வேண்டும்.
3. இறைவாக்கிற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும்.

★ இறைவாக்கு என் வாழ்வில் பலன்கொடுக்க அனுமதிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 – வியாழன் - தை 2009

எபி 10: 19–25 திபா 24: 1–4, 5–6 மாற் 4: 21–25

### ஒளி

இன்றைய நற்செய்தியில் இயேசுவின் நான்கு முக்கிய வசனங்கள் உள்ளன (காண். 21, 22, 24, 25). இவை சூழ்நிலைக்கு வேறுபட்டதாக இருந்தாலும் ஆழமான கருத்துகளைக் கொண்டுள்ளன. முதல் இரு வாக்கியங்களைப் பற்றித் தியானிப்போம். விளக்கு அடுத்தவர்க்கு உதவியாக தண்டின்மீது வைக்கப்படும். மக்கள் பார்க்கும் வண்ணம் அது அமைந்திருக்க வேண்டும். இவற்றிலிருந்து இரண்டு உண்மைகளை நாம் அறியலாம்.

**1. உண்மை அறிந்துகொள்வதற்கே...**

உண்மையை ஒருபோதும் மறைக்க முடியாது. உண்மை பிந்தி வந்தாலும் அது வெளிச்சத்திற்கு வந்தே தீரும். உண்மையைக் கூறுவதால் ஆபத்துக்கள் வரலாம். தொடக்க திருச்சபையில் தாம் கிறிஸ்தவர்கள் எனும் உண்மையைக் கூறி மறைசாட்சிகளாக இறந்தவர்களும் உண்டு. ஆயினும் உண்மைக் கிறிஸ்தவர் உண்மைக்காக வாழ்வார், உண்மைக்கு சான்று பகர்வார். இயேசுவும் உண்மைக்கு சான்று பகர்ந்தார்.

**2. கிறிஸ்தவம் காண்பதற்கே...**

தொடக்கத் திருச்சபையில் ஒருவர் கிறிஸ்தவர் என்று வெளிப்படுத்தினால் அவர் எதிர்கொள்வது மரணம் ஒன்றே. உரோமையரின் ஆட்சி அன்று பரந்து விரிந்து இருந்தது. அரசின் மீது மக்கள் காட்டும் விசுவாசத்தை உறுதிப்படுத்த அரச வழிபாடு ஆரம்பமாகியது. சிலநாட்களில் அரசியல் விசுவாசத்தை உறுதிப்படுத்த மக்கள் அரசருக்கு காணிக்கைகள் செலுத்த வேண்டும். செலுத்தியபின் சான்றிதழ் வழங்கப்படும். அதன்பின் ஒருவர் எந்த தெய்வத்தையும் வழிபடலாம். கிறிஸ்தவர்கள் இதை எதிர்த்தனர், இந்த வழிபாட்டுக்கு இசையவில்லை. இதனால் இவர்கள் ஆயிரக்கணக்கில் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். உண்மைக்கு சான்று பகர்வது கிறிஸ்தவர் களின் கடமை. சாவையும் எதிர்த்து இவர்கள் செயல்பட்டது இன்றும் எமக்கு பெரும் உதாரணமாகவும் சவாலாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு உண்மைக்கு சான்று பகர்பவர் தண்டின்மீது வைக்கப்பட்ட விளக்கைப் போல மறைவாயிருக்க முடியாது. சவாலையும் எதிர்கொண்டு உண்மைக்கு சான்று பகரவேண்டும்.

✠ உண்மைக்கு சான்று பகரும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு செயல்பட்டுள்ளேன்?

✠ உண்மை எனது வாழ்வாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எபி 10: 32-39 திபா 37: 3-6, 23-24, 39-40 மாற் 4: 26-34

## உவமை

மாற்கு நற்செய்தி 4ம் அதிகாரத்தில் இயேசு உவமைகள் வாயிலாகப் போதித்ததை வாசிக்கிறோம். உவமைகள் ஏன் இந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைப் பார்ப்போம். பொதுவாக யூத சமூகத்தில் போதிப்பதற்கு ராபிக்கள் தொழுகைக்கூடங்களையே பயன்படுத்தினர். ஆனால் இயேசு இந்த மரபை மாற்றி போதிப்பதற்கு கடற்கரை ஓரங்கள், மலை மேடுகள் போன்ற பொது இடங்களைப் பயன்படுத்தினார், சாதாரண மனிதர்களுக்குப் போதித்தார். மக்கள் போதனைகளைக் கேட்கலாம், விரும்பினால் அமைதியாக விலகியும் செல்லலாம்.

### உவமைகள் வாயிலாக...

தன் போதனையின்போது இயேசு பயன்படுத்தியது உவமைகள். உவமை என்பது ஓர் ஒப்புமையே. உண்மைக்கு ஒத்ததாக அமைந்துள்ள ஓர் கதை அல்லது சம்பவம். விண்ணக உண்மையை வெளிப்படுத்த ஓர் மண்ணக கதை இது. இயேசு ஏன் உவமைகளைப் பயன்படுத்தினார்?

1. மக்களைக் கேட்கவைக்க: பரந்த வெளிகளில் போதிக்கும்போது மக்கள் திடீரென்று எழுந்து செல்லலாம். போதனை கடினமானதாகவும் இருக்கலாம். ஆனால் ஓர் கதையைக் கூறும்போது மக்கள் கவனமாகக் கேட்பார்கள். கேட்பதற்கு மக்களுக்கு ஓர் ஆர்வமும் வரும்.
2. பழக்கப்பட்ட கதை: இயேசுவின் உவமைகள் மக்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்டதாக அமைந்திருந்தன. உதாரணம்: விளக்கு, விதை, கடுகுமணி, வலைகள், ஆடு, ஆயன், அத்திமரம் போன்றன. சாமுவேல் தாவீதை சந்தித்த போது பயன்படுத்தியதும் உவமையே (காண். 2சாமு 12: 17).
3. உவமைகள் மூலமாக கடினமான உண்மைகளை இலகுவாகப் புரியவைத்தார் இயேசு. உவமை புரியும்போது செய்தியும் தெளிவாகின்றது.
4. உவமைகள் மூலமாக விளக்கம் கிடைக்கும்போது அது மக்களை சுயமாகவே சிந்தித்து உண்மையை உணரவும், உண்மைக்கேற்ப செயல்படவும் தூண்டு கின்றது. இன்று இயேசுவின் உவமைகளைப் புரிந்துகொள்ள சிலசந்தர்ப் பங்களில் அன்றைய பின்னணியையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

➤ இயேசுவின் உவமைகள் என் வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்கள் என்ன?
➤ உவமைகள் மூலம் உண்மையை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 - சனி - தை 2009

எபி 11: 1-2, 8-19 லூக் (பதிலுரை) 1: 69-75 மாற் 4: 35-41

### நம்பிக்கை

இயேசு காற்றையும் கடலையும் அடக்கினார். இந்த சம்பவம் தரும் உண்மைகள் என்ன? அன்று சீடர்களுக்கு நல்ல பாடம். இன்று எமக்கு இந்த சம்பவம் தரும் பாடம் என்ன?

**பாலஸ்தீனப் பின்னணி**

கலிலேயாக் கடல் திடீர் புயலுக்கு அறிமுகமானது. அதில் பயணம் செய்யும் எவரும் இதுபோன்ற கடல் கொந்தளிப்புகளை எதிர்பார்க்க வேண்டும். சிறப்பு விருந்தினருக்கென்று படகின் பின்பகுதியில் விரிப்போடு தலையணையும் வைக்கப்பட்டிருக்கும். இயேசு அங்கு தூங்கிக்கொண்டிருந்தார்.

கடல் அலகையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது பாலஸ்தீன மக்களின் எண்ணம். இயேசுவும் காற்றையும் கடலையும் அடக்கும்போது 'இரையாதே, அமைதியாயிரு' என்றார். மாற் 1: 25ல் அவர் தீய ஆவி பிடித்தவரை அடக்கியபோதும் இதுபோன்ற சொற்களைப் பயன்படுத்தினார்.

**வாழ்வின் புயல்கள்**

இயேசு கடலை அடக்கியதை வெறும் புதுமையாக நாம் எடுத்தால் அது அன்று நடைபெற்ற ஓர் சம்பவமாகவே கருதலாம். ஆனால் அதை இன்று எம் வாழ்விற்கு அடையாளமாக நாம் பார்த்தால் இந்த சம்பவத்திலிருந்து நாம் ஆழமான உண்மைகளை வாழ்விற்குப் பெற்றுக்கொள்ளலாம். இயேசு தம்மோடு இருக்கிறார் என்பதை சீடர்கள் அறிந்ததும் அங்கு அமைதி நிலவியது.

**1. *இயேசு துன்பங்களில் அமைதி தருகிறார்:*** எம் வாழ்வில் துன்பங்களை நாம் அனுபவிக்கும்போது இறையன்பை அவர் எமது நினைவிற்குக் கொண்டு வந்து எமக்குத் தேவையான சக்தியைத் தருகின்றார்.

**2. *இயேசு கவலைகளில் அமைதி தருகிறார்:*** அமைதியின் முதல் எதிரி 'கவலை'. எம்மைப்பற்றிய கவலை, நிச்சயமில்லாத எதிர்காலம் பற்றிய கவலை, நாம் அன்பு செய்வோர் பற்றிய கவலை. ஆயினும் இந்தக் கவலையிலும் இறைத்தந்தையின் அன்பையும், அமைதியையும், வழிகாட்டலையும் இயேசு நினைவிற்குக் கொண்டுவருகின்றார்.

➪ என்வாழ்வில் நான் எதிர்கொண்ட கொந்தளிப்புகள் என்ன?

➪ இவற்றில் இயேசுவின் பிரசன்னத்தை, வழிகாட்டலை உணர்ந்துள்ளேனா?

➪ இயேசு அனைத்துப் புயலையும் அடக்கவல்லவர். நம்புவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 4ம் ஞாயிறு

**01 - மாசி 2009**

*இச 18: 15–20 திபா 95: 1–2, 6–9 1கொரி 7: 32–35 மாற் 1: 21–28*

### *இயேசு*

இயேசு இறைமகன். தொடக்கத்திலிருந்து வாக்களிக்கப்பட்டவர். அவரது வருகை மக்களுள் சிலருக்குக் குழப்பத்தையும், சிலருக்கு சவாலையும், பலருக்கு பல கட்டுகளிலிருந்து விடுதலையையும் கொடுத்தது என்பதே உண்மை. இயேசுவை மெசியா என்று நம்பியவர்களும் உண்டு, எதிரியாக எதிர்த்தவர்களும் உண்டு, இன்னொரு இறைவாக்கினராகப் பார்த்தவர்களும் உண்டு. மக்கள் நற்செய்திகளில் இயேசுவை சிறிது சிறிதாக அறிந்து அவரை தம் வாழ்வின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டனர். இன்று எமது வாழ்விற்கு இயேசு அனுபவம் எந்த செய்தியைத் தருகின்றது என்பதை இன்றைய ஞாயிறு வாசகங்களை அடிப்படையாக வைத்துத் தியானிப்போம்.

### இறைவாக்கினர் வருகை

மக்களுக்கு வாழ்வில் பல அழுத்தங்கள், துன்பங்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. ஆண்டவர் இயேசுவின் வருகை தொடக்கத்திலிருந்தே தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி அவரைப் பற்றி இறைவாக்கினர்கள் முன்னறிவித்திருந்தனர். தொடக்க திருச்சபையில் தூய ஸ்தேவானும் தனதுரையில் இயேசுவின் வருகை பற்றிய இறைவாக்கைக் குறிப்பிட்டார் (காண். திப 7: 37). அதேபோல திருத்தூதர்களும் தமது உரைகளில் குறிப்பிட்டனர் (காண். திப 3: 22).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்கள் மத்தியிலிருந்து போலி இறைவாக்கினர்களும் உருவானார்கள். அன்றுபோல இன்றும் எம்மத்தியில் கடவுள் தம்மோடு உரையாடுகிறார் என்று மக்களின் கவனத்தை ஈர்ப்பவர்கள் பலர். இவர்களை எவ்வாறு இனம்கண்டுகொள்வது?

1. பழைய ஏற்பாட்டில் போலி இறைவாக்கினரை பரீட்சிப்பது போல இவர்களது வாக்குகள், போதனைகள் நிறைவேறுகின்றனவா என்பதை ஆராய்ந்து அறியலாம். முரண்பாடுகள் இருந்தால் போலித்தனத்தைக் கண்டுபிடிக்கலாம்.
2. விவிலியத்தோடு இவர்களது போதனைகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம். கடவுள் முரண்பட்டவரல்ல. விவிலிய சிந்தனையோடு முரண்பாடுகள் உண்டா?
3. இவர்களது வாழ்விற்கும் போதனைக்கும் உள்ள தொடர்புகளையும் பார்த்து இவர்களது நம்பகத்தன்மையையோ போலித்தன்மையையோ அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்தியில் மனிதர்கள்

நற்செய்தியில் இயேசு தீய ஆவி பிடித்தவரைக் குணமாக்கினார். இதில் நாம் காணும் மனிதர்களின் உள்ளுணர்வுகளை சிந்திப்போம். இயேசு, தீய ஆவி பிடித்தவர் மக்கள். இவர்களது உள்ளுணர்வுகள் என்ன?

1. ***இயேசு:*** இயேசு தொழுகைக்கூடத்தில் போதித்தார். இது நற்செய்தி முழக்கம் அல்ல. மாறாக, இது ஆழமான போதனை. மறையுண்மைகளை அவர் விளக்கியிருக்கலாம். அவருள் சக்தி இருந்தது. இறைத்தந்தை, தனது நிலை, வருகை, பணி பற்றிய தெளிவான சிந்தனை இயேசுவிற்குள் இருந்தது. நாற்பது நாட்கள் பாலைநிலத்தில் அவர் பெற்ற இறையனுபவம் அவருள் ஆழமாக இருந்தது. பணியைத் தொடங்கிய இயேசு சிந்தனைத் தெளிவோடும் உறுதியான நம்பிக்கையோடும் செயல்பட்டார். எனவே இயேசுவால் அதிகாரத் தோடு போதிக்க முடிந்தது. அதிகாரத்தோடு பேயை ஓட்டவும் முடிந்தது. அலகையை ஓட்டுவது என்பது இலகுவான காரியமல்ல. பரிசேயர் இயேசுவின் இந்த அதிகாரத்தை சந்தேகத்தோடே பார்த்தனர். ஆனால் இயேசு மக்களின் துயர் தீர்க்க வேண்டும் எனும் உணர்வோடு செயல்பட்டார்.

2. ***தீய ஆவிகள்:*** இயேசு யார் என்று மனிதருக்குத் தெரியாவிட்டாலும் ஆவிகள் தெளிவாக அறிந்திருந்தன. இயேசு இறைமகன், அதிகாரம் கொண்டவர், அலகையின் பிடியிலிருந்து உலகை விடுவிக்க வந்தவர் எனும் உண்மையை ஆவிகள் அறிந்திருந்தன. எனவே பயத்தோடும் நடுக்கத்தோடும் அவரை தீய ஆவிகள் வேண்டின. 'எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத் தெரியும்...' போன்ற வசனங்களின் பின்னால் பெரும் பயம் நிலவியது. தமது சக்தி, கொடுமைகள் முடிவுக்கு வரத்தொடங்கி விட்டன என்பதை தீய ஆவிகள் அறிந்திருந்தன.

3. ***மக்கள்:*** இயேசுவின் போதனையைக் கேட்ட மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவரது புதுமையைப் பார்த்த மக்கள் திகைப்புற்றார்கள். இவை அவர்களது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. இந்த அனுபவங்கள் இயேசுவில் நம்பிக்கை வைக்கவும் அவரைப் பற்றி அடுத்தவரோடு பகிர்ந்துகொள்ளவும் தூண்டின. அதுவே இயேசுவின் வெற்றி.

✝ இயேசு எனக்கு யார்? அவரை நான் என் வாழ்வில் உணர்ந்துள்ளேனா?
✝ இயேசுவின் அதிகாரம் மிக்க வாக்குகள் எனது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த அவரில் முழுமையான நம்பிக்கை வைத்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலா 3: 1-4 திபா 23: 7-10 லூக் 2: 22-40

## இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தது

யூதர்கள் சடங்குகளுக்கும் சட்டங்களுக்கும் பெயர்பெற்றவர்கள். சட்டப்படி குழந்தை இயேசுவிற்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்ற யோசேப்புவும் மரியாவும் குழந்தையை கோவிலுக்குக் கொண்டு வந்தனர். இதன் பின்னணிகளைப் பார்ப்போம்.

**1. விருத்தசேதனம்**

பிறந்து எட்டாம் நாள் ஒவ்வொரு யூத ஆண் குழந்தையும் ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் (காண். லேவி 12: 3, லூக் 1: 59, 60). பிற இனத்தவரிடமிருந்து பிரிவையும், கடவுளோடு கொண்டுள்ள ஆழமான உறவையும் விருத்தசேதனம் அடையாளப் படுத்தியது.

**2. முதல் குழந்தையின் மீட்பு**

குடும்பத்தில் முதல் குழந்தை பிறந்ததும் அது ஒரு மாதத்திற்குள் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டது (காண். விப 13: 2, 11-16, எண் 18: 15, 16). இச்சடங்கின்படி தலைச்சன் குழந்தை அர்ப்பணிக்கப்பட்டு பின் கடவுளிடமிருந்து வாங்கப்படும் அல்லது மீட்கப்படும். இதற்கு அடையாளமாக காணிக்கையும் செலுத்தப்படும். இதன் மூலம் குழந்தை படைப்பின் கடவுளாகிய அவருக்கே சொந்தமானது என்பது வலியுறுத்தப்படுகின்றது.

**3. சுத்திகரிக்கும் சடங்கு**

ஆண் குழந்தை பிறந்தால் 40 நாட்கள் வரைக்கும், பெண் குழந்தை பிறந்தால் 80 நாட்களுக்கும் அதன் தாய் தூய்மையற்றவராகக் கருதப்படுவார். இந்நாட்களுள் அவர் கோவிலினுள் நுழையக்கூடாது. இந்நாட்கள் முடியும்போது அவர் செம்மறியையும் புறாவையும் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும். அவற்றை ஏற்ற குரு தாய் தூயவர் என்று அறிவிப்பார். செம்மறி கொடுக்க முடியாவிட்டால் அவர் இன்னொரு புறாவைக் கொடுக்கலாம். இதையே இயேசுவின் பெற்றோர் செய்தனர்.

இயேசுவின் பெற்றோர் சமயக் கடமைகளை முறையே செய்தாலும் கடவுளின் கட்டளைகளே அவர்களுக்கு முதன்மையாக இருந்தது. அதை நிறைவேற்றுவதில் அவர்கள் கருத்தாயிருந்தார்கள்.

✓ எனது சமயக் கடமைகள் பற்றிய எனது மனநிலை என்ன?

✓ கடவுளின் அழைப்பு, கட்டளைகளை ஏற்று வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 - செவ்வாய் - மாசி 2009

எபி 12: 1-4 திபா 22: 25-27, 29-31 மாற் 5: 21-43

### ***பணிவு***

இன்றைய நற்செய்தியில் கதைக்குள் இன்னொரு கதையைப் பார்க்கிறோம். யாயீர் எனும் தொழுகைக்கூடத் தலைவர் தன் மகளுக்காக வேண்டினார். அவர் இல்லத்திற்கு செல்லும் வழியில் பெரும்பாடுள்ள பெண் ஒருவர் இயேசுவின் குணமாக்கலை அனுபவிக்கிறார். யாயீரின் நிலை பற்றி இன்று தியானிப்போம்.

**யாயீரின் துயர நிலை**

வீட்டில் ஓர் குழந்தை இறக்கிறது என்றால் அது பெரும் துன்பமே. நற்செய்தியில் யாயீரின் மகள் பன்னிரண்டு வயது நிரம்பியவள் என்று கூறப்படுகின்றது. ஒரு பெண்குழந்தை பன்னிரண்டு வயதும் ஒரு நாளும் அடையும்போது பெண்ணாகக் கருதப்படுகிறாள். பருவமடையும் இக்குழந்தை மரணத்தின் எல்லையில் இருக்கிறது என்றால் அது பெரும் துன்பமே.

யாயீர் தொழுகைக்கூடத் தலைவர். இவருக்கு பெரும் பொறுப்புகளும் அதிகாரமும் இருந்தன. இவர் எவ்வாறு செயல்பட்டார்?

***1. தப்பான எண்ணங்களை மறந்தார்:*** இயேசு பற்றிய தப்பான அபிப்பிராயம் யூதத் தலைவர்களிடையே இருந்தது. ஏனெனில் இயேசுவின் போதனைகள் இவர்களுக்கு பெரும் சவாலாக இருந்தன. ஆனால் யாயீர் இந்த தவறான அபிப்பிராயங்களையும் ஒதுக்கிவிட்டு இயேசுவிடம் நம்பிக்கையோடு வந்தார்.

***2. தனது கௌரவத்தை மறந்தார்:*** யாயீர் தொழுகைக்கூடத் தலைவராக மக்களின் நன்மதிப்பையும், புகழையும் பெற்றிருந்தார். இயேசுவோ யூதத் தலைவர்களால் சமயமாற்றுக் கருத்துகளைக் கொண்டவர் என்று நிராகரிக்கப் பட்டவர். ஆனால் தனது மகளைக் காப்பாற்ற வேண்டுமென்று இவர் தனது கௌரவத்தையும் பாராது இயேசுவின் காலில் விழுந்து உதவி கேட்டார்.

***3. தற்பெருமையை மறந்தார்:*** செபக்கூடத் தலைவர் சாதாரண இயேசுவிற்குக் கடமைப்பட்டிருப்பது கடினமானது. அவரது நண்பர்களும் அவரைத் தடுத்திருக்கலாம். இவர் தானே வராமல் இன்னொருவரை அனுப்பியிருக்கலாம். ஆனால் இயேசுவின் உதவியைப் பெற யாயீர் அனைத்தையும் மறந்தார். கௌரவம், பெருமை, பதவி அனைத்தும் பெரிதாகத் தெரியவில்லை. கடைசியில் அவரது நம்பிக்கை அவரது மகளைக் காத்தது. மகிழ்ச்சி பரிசானது.

✠ இயேசுவின் ஆசீரைப் பெற என்னை இழக்க நான் தயாராயுள்ளேனா?

✠ ஆண்டவரில் நம்பிக்கை உயிரையும் காக்கும் என்பதை நம்பி வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 – புதன் - மாசி 2009

எசா 43: 1–3, 5, 10–13 திபா 95: 1–3, 7–10 மத் 2: 1–2, 7–12

## இலங்கை மாதா பெருவிழா

இலங்கை மாதா பெருவிழாவாகிய இன்று மரியாவின் இயேசு அனுபவத்தைப் பற்றி சிந்திப்போம்.

### ஞானிகளின் வருகை

ஞானிகள் யார், அவர்கள் எத்தனை பேர், அவர்கள் கொண்டுவந்த காணிக்கைகளின் அர்த்தம் போன்ற விடயங்கள் பற்றி பல புராணக் கதைகள் உண்டு. ஆயினும் இவர்கள் குழந்தையைப் பார்த்து வணங்க வேண்டுமென வந்து வழிதவறி ஏரோதிடம் சென்று பின் குழந்தையைப் பார்த்தனர். கனவில் எச்சரிக்கப்பட்டு வேறுவழியே தம் நாடு திரும்பினர்.

### மரியாவின் அனுபவம்

ஞானிகள் குழந்தைய்யை தாய் மரியாவின் மடியில் கண்டு வணங்கினர். மரியாவிற்கு இயேசு பிறப்பின்போது பல அனுபவங்கள். இடையர்கள் வந்து வணங்கி தமது அனுபவங்களைப் பகிர்ந்தனர். இங்கு ஞானிகள் வந்து சென்றனர். குழந்தைக்குப் பல புகழும் வருகின்றது. அதே குழந்தைக்கு பல ஆபத்துகளும் வந்ததை மரியா குழம்பிய மனநிலையோடு பார்த்திருப்பார். குழந்தையை ஏரோது கொல்லத் தேடுகிறான் எனும் செய்தியை கனவில் அறிந்து பெற்றோர் குழந்தையோடு எகிப்து நோக்கிச் சென்றனர். இவ்வாறு தொடக்கமுதல் மரியா பல நல்ல, துயர அனுபவங்களைப் பெற்றார். ஆயினும் அவர் எவ்வாறு இவற்றை எதிர்கொண்டார்? அவருக்கு இருந்தது ஒரே வழி.

### மரியாவின் அமைதி

குழந்தை பற்றி தன்னைச் சூழ நடைபெற்ற சம்பவங்கள் பல. அனைத்து அனுபவங்களுக்கும் விடையோ விளக்கமோ பெற முடியாது. ஆயினும் மரியா தொடக்கமுதல் தியானிக்கும் பக்குவம் பெற்றிருந்தார். மனதில் இருத்தி சிந்தித்து அவற்றில் இறைவனின் வழிகாட்டலை அறிய முயன்றார் மரியா. இறைவனே அனைத்தையும் இயக்குகிறார் எனும் நம்பிக்கை அனைத்து சந்தேகங்களையும் வென்றெடுக்கும். அழைத்த இறைவன் காப்பார் என்பது அவரது நம்பிக்கை.

- இயேசு அனுபவம் பெற நான் நம்பிக்கையோடு செயல்படுகின்றேனா?
- வாழ்வின் அனுபவங்களில் இறைவனின் வழிகாட்டலை உணர்கின்றேனா?
- இறைவனை நம்பிக்கையோடு தேடுவேன். நம்பிக்கை வீண்போகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எபி 12: 18-19, 21-24 திபா 48: 1-3, 8-10 மாற் 6: 7-13

## பணி

இயேசு பணிக்கென்று பன்னிரு திருத்தூதர்களை அனுப்பினார். அவரே ஊர்கள் தோறும் சென்று போதித்து வந்தார். திருத்தூதர்கள் போகும்போது என்ன கொண்டுசெல்லலாம் என்றும் பணியின்போது எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் இயேசு விளக்கி அனுப்பிவைத்தார். சென்றவர்கள் செய்த பணிபற்றி இன்று தியானிப்போம்.

### திருத்தூதர்களின் பணி

திருத்தூதர்கள் மக்கள் மனம்மாற வேண்டுமென்று பறைசாற்றி நன்மைகளும் பல செய்தார்கள்.

***1. செய்தியை அறிவித்தார்கள்:*** இது நற்செய்தி முழக்கம். திருத்தூதர்கள் பணிக்கென்று சென்றபோது அவர்கள் செய்தியை உருவாக்கவில்லை. மாறாக செய்தியைக் கொண்டுவந்தார்கள். தமது எண்ணங்களை அல்ல, கடவுளின் நற்செய்தியையே கொண்டுவந்தார்கள்.

***2. அறிவித்த செய்தி:*** இவர்கள் கொண்டுவந்தது மனமாற்றத்திற்கான செய்தி. இது பலருக்கு நல்ல செய்தியாக இருக்காது. ஏனெனில் மனமாறும் ஒருவர் தனது மனநிலையை மாற்றி அதற்கேற்ப தனது வாழ்வையும் மாற்ற வேண்டும். மனமாற்றம் கடினமானது. ஏனெனில் எனது வழிகள் தவறு என்பதை ஏற்று மாறவேண்டும். மனமாற்றம் அமைதியைக் குலைக்கும். ஏனெனில் ஒருவர் தனது வாழ்வின் போக்கையே மாற்ற வேண்டிவரும். இதனால் பலர் மனமாற்றத்திற்கு இசைவதில்லை.

***3. இயேசுவின் இரக்கம்:*** திருத்தூதர்கள் இயேசுவின் செய்தியை மட்டுமல்ல, இரக்கத்தையும் மக்களுக்குக் கொண்டுவந்தனர். அதை அவர்கள் தமது இரக்கச் செயல்களில் காட்டினார்கள். ஏழைகளுக்கும் தீய ஆவியால் பீடிக்கப் பட்டவருக்கும் விடுதலை கொடுத்தார்கள். மொத்தத்தில் இவர்கள் ஆன்ம, சரீர விடுதலையை முழக்கமிட்டு, செயலிலும் காட்டினார்கள்.

தொடக்கத்திலிருந்து திருச்சபையின் பணியும் இதுவே. மக்களின் ஆன்ம, சரீர கட்டுகளிலிருந்து அவர்களை விடுவிப்பதே பணி.

☞ இயேசுவின் பணி இன்று எனக்கும் தரப்படுகின்றது என்பதை உணர்கிறேனா?
☞ ஆன்ம, சரீர விடுதலை அடைந்து, விடுதலை கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எபி 13: 1-8 திபா 27: 1, 3, 5, 8-9 மாற் 6: 14-29

## தூய மீகி பவுலும் தோழர்களும் நினைவு

இயேசுவின் புகழ் பரவ ஏரோது கலங்கினான். மக்களும் இயேசுவைப் பற்றிய தமது கருத்துகளை வெளியிட்டனர். இந்த கருத்துகள் சரித்திரப் பின்னணி கொண்டதால் அவற்றின் விளக்கங்களைப் பார்ப்போம்.

### எலியா வந்துள்ளார்

இயேசுவின் காலத்தில் மெசியாவின் வருகையை மக்கள் எதிர்பார்த்தனர். எலியா மெசியாவிற்கு முன்னோடியாக அவரது வருகையை ஆயத்தம் செய்வார் என்பது மக்களின் நம்பிக்கை. இன்றும் யூதர்கள் பாஸ்கா விருந்து கொண்டாடும் போது எலியாவிற்கென்று ஓர் வெறுமையான கதிரையை வைப்பார்கள். மேசையில் ஒரு கோப்பை இரசமும் இருக்கும். கதவையும் அகலத் திறந்து விடுவார்கள். ஆனால் இங்கு எலியா அல்ல, மெசியாவே வந்துவிட்டார்.

### திருமுழுக்கு யோவான் வந்துள்ளார்

ஏரோதின் கலக்கமிது. எவ்வாறு ஏரோது தனது சுயநலத்திற்காக திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டச் செய்தான் என்று நற்செய்தி குறிப்பிடுகின்றது. ஏரோதியாளின் சூழ்ச்சியால் இது நடைபெற்றாலும் ஏரோது அனுமதி கொடுத்ததாலேயே யோவான் கொல்லப்பட்டார். எனவே ஏரோதின் மனசாட்சியும் குற்ற உணர்வும் அவனைக் குழப்பிக்கொண்டே இருந்தது. இவனால் சுயமாக சிந்திக்கவோ முடிவுகள் எடுக்கவோ முடியவில்லை. அந்தளவிற்குப் பாதிக்கப்பட்டிருந்தான். வெளிப்படையாகவே 'அவர் தலையை நான் வெட்டச் செய்தேன்...' என்று சொல்லுமளவிற்கு அவன் உள்ளுணர்வு குற்ற உணர்வாக செயல்பட்டது. அது அவனை வருத்திக்கொண்டே இருந்தது. திருமுழுக்கு யோவான் துணிந்து ஏரோதின் குற்றச் செயல்களைக் கண்டித்து வந்துள்ளார். இப்போது அதே யோவான் உயிருடன் எழுப்பப்பட்டுவிட்டார் என்று பயப்படும் அளவிற்கு ஏரோது குழம்பியிருந்தான். நண்பர்களோ ஏரோதியாளோ அவனுக்கு உதவ வரவில்லை. குற்ற உணர்வு அவனைத் துரத்தியவண்ணமே இருந்தது. ஆனால் யாரிடம் செல்வது?

- எனது குற்றங்களை உணர்ந்து ஏற்று இறையிரக்கத்தைத் தேடுகின்றேனா?
- மனம்மாறும்போது குற்றங்களிலிருந்தும் குற்ற உணர்வுகளிலிருந்தும் விடுதலை கிடைக்கும் என்பதை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 – சனி - மாசி 2009

எபி 13: 15–17, 20–21 திபா 23: 1–6 மாற் 6: 30–34

### ஆயன்

திருத்தூதர்கள் தமது வெற்றிக் கதைகளோடு இயேசுவிடம் வந்தனர். தமது பணி அனுபவங்களை ஆர்வத்தோடு பகிர்ந்தனர். ஆனால் அவர்களுக்கு அப்போது தேவையானதை இயேசு உணர்ந்து தனிமையான இடம் தேடிப் போகச் சொன்னார். ஏனெனில் அவர்களுக்கு ஓய்வு தேவை. அந்த ஓய்வு அப்போது அங்கு கிடைக்காது.

**மக்களின் தேவை**

இயேசுவும் சீடர்களும் படகேறி அக்கரைக்குச் சென்றாலும் மக்களோ கால்நடையாக அவர்களுக்கு முன் வந்துசேர்ந்தார்கள். இவர்கள் படகில் செல்ல நான்கு மைல்களும், நடையாகச் செல்ல பத்து மைல்களும் எடுக்கும். பத்து மைல்களாக இருந்தாலும் மக்கள் ஆர்வத்தோடு சென்றதால் இயேசுவிற்கு முன்பாகவே அங்கு வந்தார்கள். இயேசுவோ மக்களைக் கண்டு கோபப்பட வில்லை. மாறாக அவர்களுக்காக இரக்கப்பட்டார். ஆயன் இல்லா ஆடுகள் போல இருந்தனர் இவர்கள். ஆயன் இல்லா ஆடுகள் நிலை என்ன?

***1. வழி:*** ஆயனில்லா ஆடு தன் வழியைக் கண்டுபிடிக்க முடியாது. அங்கும் இங்குமாகத் திரிந்து தனது வழியை தொலைத்து உணவின்றியோ, ஆபத்து களில் சிக்கியோ தன்னை அழித்துக்கொள்ளும். வாழ்வில் நாமும் எமது சுயநலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும்போது கடவுளைவிட்டுப் பிரிந்து விடுகின்றோம். வழிதெரியாமல் தவிக்கிறோம்.

***2. உணவு,நீர்:*** ஆயனின் வழிகாட்டல் இல்லாமல் ஆடு உரிய புல் தரையையும் நீர் நிலைகளையும் நாட முடியாது. உணவும் நீரும் இல்லாமல் வாழ்வும் நிலைக்காது. களைத்து மரணிக்கும் நிலைக்கும் வந்துவிடும். நாமும் கடவுளை வாழ்வில் மறக்கும்போது ஆன்ம உணவு இல்லாமல் தவித்துவிடுவோம்.

***3. ஆபத்துகள்:*** ஒரு ஆடு வழியில்லாமலும் வழிகாட்டியில்லாமலும் திரியும் போது ஆபத்துகளும் கூடவந்துவிடும். வழிகாட்டலின்றி அலைந்து திரியும் ஆட்டுக்கு வரக்கூடிய ஆபத்துகள் பற்றி யூதர்களுக்கு நன்கு தெரியும். நாமும் இறைவனைவிட்டுப் பிரியும்போது பகைவர் எம்மையும் தாக்கலாம்.

★ இறைவனே நல்லாயன் என்று ஏற்று அவரில் அடைக்கலம் தேடுகின்றேனா?

★ இறைவனின் வழிகாட்டலை அடுத்தவர்க்கும் அறிமுகம் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 5ம் ஞாயிறு
## 08 - மாசி 2009

யோபு 7: 1-4, 6-7 திபா 147: 1-6 1கொரி 9: 16-19, 22-23 மாற் 1: 29-39

### நம்பிக்கை

வாழ்வின் அவலங்கள் இன்றைய வாசகங்களில் காட்டப்படுகின்றன. ஆனால் இவற்றையும் தாண்டி இறைவனின் இரக்கம் வழிகாட்டல் உள்ளது எனும் நம்பிக்கையும் எமக்குக் கொடுக்கப்படுகின்றது. இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் அனுபவிக்க எமக்கு அவரில் அசையாத நம்பிக்கையும் தேவை என்பதையும் வாசகங்கள் சிந்திக்கத் தூண்டுகின்றன.

### யோபுவின் துன்பங்கள்

யோபு ஓர் நீதிமான். கடவுள் பயம் கொண்டவர். கடவுளில் ஆழமான நம்பிக்கையும் கொண்டவர். ஆனால் அவர் அனுபவித்த அவலங்கள் பல. ஒருவர் செய்யும் பாவத்தின் காரணமாகவே துன்பம் வருகின்றது, அது கடவுளின் தண்டனையாகவே வருகின்றது என்பது யூதர்களின் நம்பிக்கை. ஆனால் யோபு தனது துன்பம் தன் பாவங்களின் விளைவாக வருகின்றது என்பதை வெளிப்படையாக மறுத்தார். யோபின் அனுபவங்களுள் சில இன்றைய முதல் வாசகத்தில் தரப்படுகின்றன.

### யோபுவின் நம்பிக்கை

போராட்டம், இன்னல்மிகு இரவுகள், நம்பிக்கையின்மை போன்ற சொற்கள் யோபின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. ஆயினும் யோபில் நாம் காணும் ஓர் உண்மை இன்று எமக்கு நல்ல பாடம். இவருக்கு கடவுள் துன்பங்களை அனுமதித்தார் (யோபு 1: 12). காய்த்த மரத்திற்கே கல்லெறி விழும் என்பதைப்போல ஆண்டவரில் நம்பிக்கை கொண்ட அவரை சாத்தான் சோதிக்கின்றது. யோபின் நண்பர்களும் அவருக்கு உதவியாக வரவில்லை. யோபின் துன்பங்கள் நியாயமானதே என்றும் அவர் செய்த பாவங்களால்தான் யோபு இந்தத் துன்பங்களை அனுபவிக்கிறார் என்றும் யோபுவைக் குழப்பினார்கள்.

யோபுவோ நம்பிக்கை இழக்கவில்லை. ஆண்டவரோடு போராடினார். பாவம் செய்யாத எனக்கு எவ்வாறு துன்பங்கள் வரலாம் என்று கேட்டார். இறுதியில் அவரது நம்பிக்கையே வென்றது. யோபின் நம்பிக்கைக்கு பரிசாக ஆண்டவர் இரண்டு மடங்காக செல்வங்களைக் கொடுத்தார். ஆண்டவரில் நம்பிக்கை அவரை மீட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை இழந்த யூத சமூகம்

இயேசுவின் வருகைக்கு முன்பாக 300 வருடங்களாக இறைவாக்குப் பணிசெய்ய யாரும் அனுப்பப்படவில்லை. இறைவாக்கினர்கள் தோன்றாத நிலையில் பரிசேயர், சட்டவல்லுனர்கள், குருக்களின் வழிகாட்டலை யூத மக்கள் நம்பி வாழ்ந்தனர். இது தலைவர்களுக்கு சாதகமாக அமைய தமது விருப்பத்திற்கு ஏற்றாற்போல சட்டங்களை மாற்றவும், புதிய சட்டங்களையும் நடைமுறைகளையும் புகுத்தவும் தொடங்கினர். கடைசியில் அனைத்தும் சாதாரண மக்களுக்கு பெரும் பாரமாக முடிந்தன. மக்கள் சமயத்தின் பெயரால் அடிமையானார்கள். இந்த பாரங்களைத் தொட்டுப்பார்க்கவும் யூதத் தலைவர்கள் முயலவில்லை (காண். மத் 23: 4). அரசியல் சமய அழுத்தங்களால் பெருஞ்சுமை சுமந்த மக்களை (காண். மத் 11: 28-29) மீட்க யாரும் வரவில்லை. மக்கள் கடவுளில் நம்பிக்கை இழக்கவில்லை, ஆனால் குழம்பிப் போயிருந்தார்கள். இந்நிலையில் இயேசுவின் வருகை துன்பப்பட்ட மக்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

## இயேசுவின் மீட்புப் பணி

இயேசு திருமுழுக்குப் பெற்றதும் பணிவாழ்வைத் தொடங்கினார். நற்செய்தி முழக்கம், நற்செய்தி விளக்கம், குணமாக்கல் என்று அவரது பணி வாக்கு, செயல் என்று தொடர்ந்தது.

1. ***இயேசுவின் பணி:*** இயேசு சீமோனுடைய மாமியாரைக் குணமாக்கினார். பின்பு மக்கள் திரளாக நோயாளிகளை அவரிடம் கொண்டுவர இயேசு அவர்களைக் குணமாக்கினார். நம்பிக்கையோடு வந்த யாரும் வெறுமையோடு திரும்பவில்லை. அதுவே முக்கியம்.

2. ***இயேசுவின் போதனை:*** மக்களுக்கு உடல் நோயிலிருந்து விடுதலை அப்போது தேவையாக இருந்தாலும் இயேசுவிற்கோ மக்களின் ஆன்மீக விடுதலையே முதன்மையாகத் தெரிந்தது. அவர் அவர்களோடு இருக்க வேண்டும் என்பது மக்களின் உள்ளுணர்வாக இருந்தாலும் இயேசு பொது விருப்பத்திற்கு இடமளிக்கவில்லை. தனது பணி கலிலேயா தொடங்கி அனைத்து பகுதி களுக்கும் செல்ல வேண்டுமென்பது இயேசுவின் இலக்கு. 'அதற்காகவே வந்தேன்' என்றும் வெளிப்படையாகக் கூறினார்.

இவ்வாறு மக்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இயேசுவின் வருகையில் நிறைவுகண்டது. அன்றும் இன்றும் இயேசு விடுதலையின் ஆண்டவரே.

✝ எனது துன்பங்களின் மத்தியில் என் விசுவாசம் என்ன?

✝ இயேசுவே எனது விடுதலை வீரர் என்பதை உணர்ந்து ஆன்மீக விடுதலை நோக்கி நான் பயணித்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09 ~ திங்கள் - மாசி 2009

தொநூ 1: 1–19 திபா 104: 1–2, 5–6, 10–21, 24, 35 மாற் 6: 53–56

## பெறுதல்

'உன்னிடத்தில் என்ன இல்லை, என்னிடத்தில் ஒன்றும் இல்லை' என்பது ஓர் பாடல் வரி. ஆயன் இல்லா ஆடுகள் போல மக்கள் இருப்பதைக் கண்டு இயேசு மனமிரங்கிய நேரமும் உண்டு (காண். மாற் 6: 34). இன்றைய நற்செய்தியிலும் மக்கள் திரளாக அவரிடம் வந்து நிறைவாகப் பெற்றுக்கொண்டனர். இங்கு யாரும் அவருக்குக் கொடுக்க வரவில்லை. அவரிடம் பெறவே வந்தனர். இயேசுவின் தங்கல், உணவு, பாதுகாப்பு, ஓய்வு பற்றிய கவலைகள் இவர்களுக்கில்லை. மக்களின் இந்த மனநிலை பற்றி சிந்திப்போம். மக்கள் இயேசுவைத் தமது சுய நோக்கத்திற்காகப் பயன்படுத்தினார்கள்.

**பயன்படுத்தும் நாம்...**

1. ***இல்லங்களைப் பயன்படுத்துவோர்:*** எமது இல்லங்கள் எமக்குத் தேவை யான உணவு, உறைவிடம், வசதிகளைத் தரவேண்டும் என்று எண்ணி அதைப் பயன்படுத்தும் பலர் உள்ளனர். இல்லம் அன்பின், பகிர்வின் இல்லமாக மாற வேண்டும் என்று பங்களிப்பு செய்பவர்கள் சிலரே.
2. ***நண்பர்களைப் பயன்படுத்துவோர்:*** தமது தேவைக்கு மட்டுமே நண்பர்கள் என்று சுயநலப் போக்கோடு உறவுகளை வளர்ப்பவரும் உண்டு. இவர்கள் தமக்கு உதவிகள் தேவைப்பட்டால் மட்டுமே தொடர்பு கொள்வார்கள். இதற்கு நட்பு என்று சொல்வதே தவறு.
3. ***திருச்சபையை பயன்படுத்துவோர்:*** திருச்சபையின் அங்கத்தவர் நாம் என்பதால் திருச்சபை தொடர்ச்சியாக தமக்குத் தந்தவண்ணமே இருக்க வேண்டும் என்று சிந்திப்பவர்களும் உண்டு. கேட்கும்போது திருச்சபை தராவிட்டால் இவர்கள் வேறு சபைகளுக்கும் சென்றுவிடுவார்கள்.
4. ***கடவுளை பயன்படுத்துவோர்:*** பலர் செபிக்கச் செல்வார்கள். கடவுளிடம் தொடர்ச்சியாகக் கேட்பதே இவர்களது செபமாக மாறிவிடும். கடவுளின் விருப்பத்தை அறிய வேண்டும் என்று தொடங்கினாலும் கடைசியில் கடவுள் எதை, எப்போது, எப்படி செய்ய வேண்டும் என்று நாமே கட்டளையிடுவதிலேயே நாம் குறியாயிருப்போம். இதுவே எமது செபம். இதுவும் சுயநலமே.

☞ இன்று நான் யாரைப் பயன்படுத்துகின்றேன்? யார் என்னைப் பயன்படுத்து கின்றார்கள்? அடுத்தவர் என்னைப் பயன்படுத்த நான் ஏன் அனுமதிக்கின்றேன்?
☞ அடுத்தவர் உள்ளுணர்வுகளைப் புரிந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொநூ 1: 20-2: 4 . திபா 8: 3-8 மாற் 7: 1-13

## தூய்மை

இன்றைய நற்செய்தி பல யூத சட்டங்கள், மரபுகளின் பின்னணிகளைக் கொண்டுள்ளது. நற்செய்தியை மூன்று பகுதிகளாகப் பிரித்து நாம் தியானிக்கலாம். மாற்கு 7: 1-4, 5-8, 9-13. ஒவ்வொன்றும் நீண்ட விளக்கங்களைக் கொண்டுள்ளது. ஆனால் இன்று எமது சிந்தனைக்கு முதல் பகுதியை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

### சட்டங்களும் மரபுகளும்

இயேசுவின் சீடர்கள் மூதாதையரின் மரபுகள்படி நடவாதது பரிசேயரை குழப்பியது. இயேசுவிடமே விளக்கம் கேட்டனர். அடிப்படையில் யூதர்களுக்கு சட்டம் இரண்டு விடயங்களை அடக்கியுள்ளது. 1. பத்துக் கட்டளைகள் 2. தோரா என்று அழைக்கப்படும் முதல் ஐந்து நூல்கள். இவற்றில் வரும் சட்டங்களும் நல்லொழுக்க முறைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஆனால் இயேசுவிற்கு 4ம் 5ம் நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றிய சட்ட வல்லுனர்கள் ஒவ்வொரு சட்டங்களையும் பெரிதாக்கி, பல பகுதிகளாகப் பரித்து அவற்றிற்கு வரைவிலக்கணம் கொடுத்தார்கள். இதனால் வாழ்வு சட்டங்களின் கட்டுப்பாட்டில் வந்தது. மூதாதையர் என்பதும் ஹில்லல், ஷமாய் போன்ற யூத சட்ட நிபுணர்களைக் குறித்தது. கிறிஸ்துவிற்குப் பின் 3ம் நூற்றாண்டில் இவை எழுத்துவடிவம் பெற்று 'மிஸ்னா' எனும் பெயர் கொடுக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் இரண்டு விடயங்கள்:

### அசுத்தம் - தூய்மை

இரண்டு வகையான தூய்மையை நாம் யூதர் வாழ்வில் காணலாம். சாதாரண தூய்மை, சட்ட ரீதியான தூய்மை. லேவியர் நூல் 11-15, எண் 19 பகுதிகள் தூய்மை பற்றிக் குறிப்பிடுகின்றன. சில மிருகங்கள், குழந்தை பெற்றபின் பெண், தொழுநோயாளி, இறந்த உடலைத் தொட்டவர், பிற இனத்தவர் அசுத்தமானவர்கள். இவர்கள் தொட்ட பொருட்களும் அசுத்தமானதே. எனவே யூதர்கள் தாம் தூய்மை என்று உறுதிசெய்ய தம்மையும் பொருட்களையும் கழுவுதல் மிக அவசியம். இயேசுவோ பரிசேயரின் வெளிவேட வாழ்வை சாடினார். வெளியில் தூய்மையைத் தேடிய இவர்களது உள்ளங்கள் தூய்மையாக இல்லை என்பது இயேசுவின் வாதம்.

✔ எனது உள்ளத்தை எப்போதும் தூய்மையாக வைத்திருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொநூ 2: 4-9, 15-17 திபா 104: 1-2, 27-30 மாற் 7: 14-23

## உளத்தூய்மை

தூய்மை பற்றி முறையிட்ட பரிசேயர் மறைநூல் அறிஞர்களை சாடிய இயேசு மேலும் சவால் மிகுந்த தனது கருத்தை அவர்களுக்குத் தெரிவித்தார். எது மனிதரைத் தீட்டுப்படுத்தும்? வெளியேயிருந்து வருபவையா அல்லது உள்ளேயிருந்து வருபவையா? இயேசுவே விளக்கம் தருகிறார்.

### தீட்டுப் பொருட்கள்

மனிதருக்குள் செல்பவை எதுவும் மனிதரைத் தீட்டுப்படுத்தாது என்று இயேசு கூறியது தலைவர்களுக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கும். சீடர்களே குழம்பிப்போய் அவரிடம் தனியாக விளக்கம் கேட்டனர். லேவியர் நூல் 11ம் அதிகாரத்தில் உண்பதற்கு உதவாத மிருகங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மக்கபேயர் காலத்தில் யூதர்களின் விசுவாசத்தை அழிக்க வேண்டுமென அரசர்கள் அசுத்தம் என்று கருதப்பட்ட உணவுகளை உண்ண யூதர்களைக் கட்டாயப்படுத்தினர். மறுத்தவர்களை கொன்றனர் (காண். 1மக் 1: 62, 63, 2மக் 7).

இயேசுவின் கருத்தின்படி எந்தப் பொருளும் சமய முறைப்படி தூய்மை யானதாகவோ அசுத்தமானதாகவோ இருக்க முடியாது. மனிதர்களே அசுத்தமாக இருக்க முடியும். எனவே எந்தப் பொருட்களை சாப்பிடுவதாலும் மனிதர் அசுத்தமாக முடியாது. மனிதரின் எண்ணங்களே அவர்களை அசுத்தமாக்கும்.

### தீட்டு மனிதர்கள்

ஒருவரின் செயல்கள் அவரை தூயவரென்றோ, தீயவரென்றோ காட்டிக் கொடுக்கும். அந்த செயல்கள் அவரது உள்ளத்திலிருந்தே வெளிவரும். இவ்வாறு ஒருவரது உள்ளத்திலிருந்து செயல்படத் தூண்டும் தீய எண்ணங் களுக்கு இயேசு முன்னுரிமை கொடுக்கிறார். இந்த செயல்களுக்கு எண்ணங்கள் காரணமாகின்றன. பரத்தைமை என்பது பரந்த சொல். விபசாரம் என்பது குறிப்பிட்ட சொல். இவ்வாறு இயேசு குறிப்பிடும் தீய செயல்களை ஒவ்வொன் றாக ஆராய்ந்து பார்க்கலாம். இயேசு தனது புதிய போதனையால் பழைய ஏற்பாட்டு மனநிலைக்கே முடிவுகட்டுகின்றார்.

✧ இன்று நான் யாரைத் தீட்டாகக் கருதுகின்றேன்? எனது உள்ளத்தில் எழும் தீயவை என்ன? அவற்றிலிருந்து விடுதலை பெற முயல்கின்றேனா?
✧ எனது உள்ளம், சிந்தனை, வாக்கு, செயல்களை தூயதாக வைத்திருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 - வியாழன் - மாசி 2009

தொநூ 2: 18-25 திபா 128: 1-5 மாற் 7: 24-30

### உறவு

இயேசு கானானியப் பெண்ணின் தீய ஆவியைப் போக்கினார். இந்த நற்செய்திப் பகுதி தரும் உண்மைகள் என்ன? மீட்பு அனைவருக்கும் உண்டு என்பது இயேசுவின் சிந்தனை. அதை மக்கள் எவ்வாறு புரியவைப்பது? நற்செய்தி தரும் சிந்தனைகளைப் பார்ப்போம்.

**பிற இனத்தவர்கள்**

இயேசு தீர் பகுதிக்குள் சென்றார். அது ஒரு பிற இனத்தவரின் பகுதி. ஏற்கெனவே இயேசு சுத்தமான, அசுத்தமான உணவு பற்றிய விவாதத்தில் ஈடுபட்டபின்பு தீர் பகுதிக்குள் சென்றார். பொருட்களில் நல்லது, தீயது எனும் பாகுபாட்டிலிருந்து இப்போது நல்ல, தீய மனிதர்கள் பற்றிய தப்பெண்ணத்தை நீக்க முயல்கின்றார். பிற இனத்தவர் தீட்டுப்பட்டவர்கள் என்பது யூதர்களின் எண்ணம். ஆனால் அவர்கள் தீட்டுப்பட்டவர்கள் அல்ல, மாறாக, அவர்களுக்கும் இறையாட்சியில் இடமுண்டு எனும் செய்தியை இயேசு தருகின்றார்.

**நாய்க் குட்டிகளுக்குப் போடுவது...**

அன்று நாய் என்பது அவமானத்தின் சின்னம். கிரேக்கத்தில் நாய் எனும் சொல் வெட்கமற்ற, அகந்தையான பெண்ணைக் குறித்தது. (மேலும் காண். மத் 7: 6, பிலி 3: 2, திவெ 22: 15). யூதர்களும் பிற இனத்தவரை நாய்கள் என்று அழைத்தனர். அது ஓர் அவமானத்தின் சின்னம்.

1. இயேசு வழமையான சொல்லைப் பயன்படுத்தாமல் 'நாய்க்குட்டிகளுக்கு...' என்று குறிப்பிட்டார். கிரேக்கர்களுக்கு குட்டி என்பது பாசமிகு சொல். எனவே இயேசு இங்கு 'நாய்' எனும் சொல்லிலுள்ள முள்ளை எடுத்துவிடுகின்றார்.

2. இயேசுவின் வார்த்தையில் இருந்த பண்பும் முக்கியம். அவரது பக்குவமான, பண்பான பதிலும் அவரது நல்லெண்ணத்தைக் வெளிப்படுத்தியது.

3. குழந்தைகள் முதலில் உண்ண வேண்டும். குழந்தைகள் என்றால் யூதர்களை குறித்தது. எனவே யூதர்களுக்கு மட்டுமல்ல, பிற இனத்தவர்க்கும் வாழ்வு உண்டு எனும் நற்செய்தி உறுதியாகின்றது. அந்த நற்செய்தி கானானியப் பெண்ணின் மகள் குணமானதிலிருந்து தெளிவாகின்றது.

⇨ இயேசுவின் அழைப்பு நல்லவர்க்கு மட்டுமல்ல, பாவிகளுக்குமானது என்பதை உணர்ந்து பாவிகளை அவரிடம் அழைத்துவர முயல்கின்றேனா?

⇨ நானும் பாவியே. எனவே அழைப்பு எனக்கும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 – வெள்ளி - மாசி 2009

தொநூ 3: 1–8 திபா 32: 1–2, 5–7 மாற் 7: 31–37

### *இரக்கம்*

இயேசு காது கேளாத ஒருவரைக் குணமாக்கினார். இயேசுவின் செயல்களையும் மக்களின் மகிழ்ச்சியையும் நற்செய்தியில் காண்கிறோம். அவை பற்றித் தியானிப்போம்.

**இயேசுவின் செயல்**

இயேசு ஒருவரை எதிர்கொண்டார். இவர் காதுகேளாதவர், திக்கிப் பேசுபவர். இயேசு அவரைத் தனியே அழைத்து செயல்பட்டார். ஏனெனில் பார்வை அற்றவரைவிட காதுகேளாதவர் மக்கள் மத்தியில் செயல்படத் தயங்குவார்கள். கூட்டத்தின் மத்தியில் ஒருவர் அவரைப் பார்த்து கத்திப் பேசினால் அனைவரும் அவரையே பார்ப்பார்கள். இது காதுகேளாதவருக்கு வெட்கத்தைக் கொடுக்க அந்தக் குழப்பத்தில் திக்கவும் தொடங்கிவிடுவார். இவரது உணர்வுகளைப் புரிந்த இயேசு அவரைத் தனியே அழைத்து விரல்களை காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவரது நாவைத் தொட்டார். உமிழ்நீர் குணமாக்கும் சக்தி கொண்டது என்பது மக்களது நம்பிக்கை. கடவுளிடமிருந்தே குணமாக்கல் வருகின்றது என்பதன் அடையாளமாக இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்தார். இவ்வாறு இயேசு தனது பரிவை காதுகேளாதவரில் காட்டி அவரைக் குணமாக்கினார்.

இயேசுவிடம் பலர் வந்தார்கள். பல தேவைகளோடும் வந்தார்கள். தன்னைத் தேடிவந்த பலரில் இன்னொருவர் இம்மனிதர் என்று இயேசு கருதவில்லை. மாறாக, இவர் தனித்துவமானவர் என்று கருதி தனது அன்பைக் காட்டினார். இவரது உள்ளுணர்வுகளுக்கு மதிப்பளித்து, தனியே அழைத்து வந்து குணமாக்கினார்.

**மக்களின் மகிழ்ச்சி**

'எத்துணை நன்றாக யாவற்றையும் செய்கிறார்' என்றனர் மக்கள். கடவுள் படைத்த யாவும் நன்றாய் இருந்தன (காண். தொநூ 1: 31). ஆனால் மனிதனின் பாவத்தினால் அவை மனிதனுக்கே தீமையாகின. இயேசுவோ தனது வருகையின் மூலமாக மீண்டும் அனைத்தையும் நல்லவையாக்கினார். மக்களே இதற்குச் சான்று.

➡ இயேசு எனது வாழ்வில் செய்யும் நன்மைகளை உணர்ந்துள்ளேனா?

➡ இயேசுவின் அன்பை உணர்ந்து அவருக்கு என்றும் நன்றியுள்ளவனாவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொநூ 3: 9–24  திபா 90: 2–6, 12–13  மாற் 8: 1–10

## *பரிவு*

இயேசு நாலாயிரம் பேருக்கு உணவளித்தார். மக்களில் அவருக்கிருந்த அன்பு, பரிவு பெரிது என்பதை இந்த சம்பவம் காட்டுகின்றது.

**உணவு அளித்த இயேசு**

இயேசு இப்போது தெக்கப்பொலி பகுதியில் இருந்தார். இது பிற இனத்தார் அதிகம் வாழும் பகுதி. இங்குதான் அவர் காதுகேளாதவரைக் குணமாக்கினார். இங்கு மக்களின் எண்ணிக்கையைப் பார்த்து அவர்கள் மீது பரிவு கொண்டார். அவர் சீடர்களையே செயல்பட வைத்து அங்கிருந்த ஏழு அப்பங்களையும் சிறு மீன்களையும் பெற்று அவற்றை ஆசீர்வதித்து மக்களுக்குப் பரிமாறச் சொன்னார். மீதியான துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய சேர்த்தார்கள் என்கிறது நற்செய்தி.

கூடை தரும் பாடம் என்ன என்பதை ஓர் அறிஞர் இவ்வாறு விளக்கினார்.

1. மாற்கு 6ம் அதிகாரத்தில் இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தபோது அங்கும் மீதியை 12 கூடை நிறைய சேர்த்தனர். 6ம் அதிகாரத்தில் குறிப்பிடப்படும் கூடைக்கு 'கோபிநொஸ்' என்பது பெயர். இது யூதர்கள் தமது உணவைக் கொண்டுசெல்ல பயன்படுத்தப்படும் கூடை. மேல்பகுதி குறுகியதாகவும் கீழ் பகுதி பெரிதாகவும் அமைந்திருக்கும். மொத்தத்தில் இது யூதர்களுக்கே உரிய தனித்துவ கூடை.

2. மாற்கு 8ம் அதிகாரத்தில் 7 கூடை நிறைய மீதித் துண்டுகளைச் சேர்த்தனர். இங்கு குறிப்பிடப்படும் கூடைக்கு 'ஸ்பூரிஸ்' என்பது பெயர். இது பெரிய அளவிலானது. இதுபோன்ற கூடை ஒன்றில்தான் பவுல் தமஸ்குவிலிருந்து தப்ப மதிலால் இறக்கப்பட்டார் (காண். திப 9: 25). இது பிற இனத்தவர்கள் பயன்படுத்தும் கூடை.

எனவே மாற்கு 6ம் அதிகாரத்தில் கடவுள் யூத மக்களுக்கு உணவளித்ததையும் 8ம் அதிகாரத்தில் கடவுள் பிறஇன மக்களுக்கு உணவளித்ததையும் காண்கிறோம். மொத்தத்தில் இறைவனின் கருணை, பராமரிப்பு யூதருக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் உண்டு என்பது தெளிவு. கடவுள் இருகரம் விரித்து அனைவரையும் அழைக்கின்றார். அந்த அழைப்பை உணர்ந்து, ஏற்று வாழ்வு பெறுவது எமது கடமை.

✧ ஆண்டவரின் ஆசீரும் அன்பும் அனைவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து அனைவரையும் அன்பு செய்து, ஏற்று வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 6ம் ஞாயிறு
## 15 - மாசி 2009

லேவி 13: 1-2, 44-46 திபா 32: 1-2, 5, 11 1கொரி 10: 31-11: 1 மாற் 1: 40-45

### *தொழுநோய்*

தொழுநோய் என்பது யூத சமூகத்தில் பெரும் வியாதி. இது ஒருவரை மிக மோசமான நிலைக்கு கொண்டுபோய் சேர்த்துவிடும். ஆயினும் தொழு நோயாளிகள் பற்றிய இயேசுவின் மனநிலை என்ன என்பதை நற்செய்தி தருகின்றது. வாசகங்கள் தரும் சிந்தனைகளைப் பார்ப்போம்.

**தொழுநோய்**

புதிய ஏற்பாட்டில் தொழுநோயைவிட மோசமான எந்த நோயும் குறிப்பிடப் படவில்லை. இயேசு தன் திருத்தூதரை பணிக்கென அனுப்பியபோதும் 'தொழுநோயாளிகளைக் குணமாக்குங்கள்...' என்றும் கட்டளையிட்டார் (காண். மத் 10: 8). ஒரு தொழுநோயாளியின் நிலை மிகக் கொடியது. மூன்று வகையான தொழுநோய்கள் இருந்தன.

1. எலும்புருக்கி நோய் போன்றது. இது எலும்புகளுக்கிடையே வலியை ஏற்படுத்தும். முதுகில் பலநிறம்கொண்ட ஓட்டுகள் காணப்படும். பின் சிறு கணுக்கள் முதலில் இளஞ்சிவப்பான நிறத்தில், பின் காவி நிறத்தில் உருவாகும். தோல் கடினமாக மாறும். கன்னம், மூக்கு, உதடு, நெற்றியில் சிறு கணுக்கள் உருவாகும். இது முற்றி முகமே விகாரமாகிவிடும். உடம்பெல்லாம் சீழ் புண்ணாகி சீழ் வடியத்தொடங்கும். இமைகள் விலகி, கண்கள் விகாரமாகி, குரலும் பாதிக்கப்படும். உடம்பெங்கும் சீழ் வடியத்தொடங்க வேதனையும் அதிகரிக்கும். இதன் காலம் ஒன்பது வருடங்கள். இறுதியில் நோயாளி மனநோயாளியாகவோ, மயக்க நிலைக்கு சென்றோ பின் இறப்பார்.

2. வலியின் உணர்ச்சி இல்லாமல் வளரும் தொழுநோய் இது. தொடக்கத்தில் முதல் வகையானதாக இருந்தாலும் இங்கு நரம்பு நாளங்கள் பாதிக்கப்படும். பாதிக்கப்பட்ட இடங்கள் உணர்ச்சியில்லாமல் மாறிவிடும். தொடக்கத்தில் நோயாளிக்கு இது தெரியாமலேயே இருக்கலாம். இது வளர வளர உடம்பில் புண்கள் உருவாகி சீழ் கொட்டும். விரல்கள் மடங்கி, நகங்களின் உருவம் மாறுபடும். இதன் விளைவாக கால்களையும், கைகளையும், விரல்களையும் இழக்கவேண்டி வரலாம். இதன் காலம் 20 முதல் 30 வருடங்கள். இது நீண்ட கொடிய மரணத்தைக் கொண்டுவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முதல் இரண்டு வகைகளையும் கொண்டதாக மூன்றாவது வகை அமையும். இயேசுவின் காலத்தில் இவர்களைப் போன்ற பல தொழுநோயாளிகள் பலர் பாலஸ்தீனாவில் இருந்தனர். அதேபோல அன்று பல தோல் சம்பந்தமான நோய்களையும் தொழுநோய் என்றே கூறிவந்தனர்.

## தொழுநோயாளியின் நிலை

ஒரு தொழுநோயாளி தீட்டுப்பட்டவர் எனக் கருதப்பட்டார். அவர் சமூகத்திலிருந்தும் விலக்கப்பட்டார். குகைகளில் வாழவேண்டும். இவர் கிழிந்த உடை அணிந்து, தலை வாராமல், மேல் உதட்டை மறைத்துக்கொண்டு செல்ல வேண்டும். மக்கள் யாராவது வந்தால் 'தீட்டு, தீட்டு' என்று கூக்குரலிட வேண்டும் (காண். லேவி 13). இவர் உடல் நோயோடு மக்களின் மனநிலையால் மனவேதனையையும் அனுபவிப்பார்.

தொழுநோய் என்பது குணமாக்க முடியாத வியாதி. அவ்வாறு ஒருவர் குணமானாலும் அவர் குருவிடம் காட்டி உறுதிசெய்துகொள்ள வேண்டும். இது ஒரு கடினமான சடங்கு.

## இயேசுவின் மனநிலை

இயேசுவின் பார்வையில் தொழுநோயாளியோ, பிற இனத்தவரோ, பாவியோ அனைவரும் விடுதலை பெறவேண்டியவர்கள். சமூக, சட்டம், அரசியல், சமய கட்டுகளிலிருந்து மீட்புப் பெற வேண்டியவர்கள். எனவே தன்னிடம் நம்பிக்கையோடு வந்த தொழுநோயாளியை குணமாக்குவதில் இயேசுவிற்கு எந்தத் தயக்கமும் இருக்கவில்லை.

1. தொழுநோயாளி அவரிடம் வரக்கூடாது. அனால் நம்பிக்கையோடு வந்தார். இவர் இயேசுவின் வல்ல செயல்கள் பற்றி அறிந்திருப்பார். எனவேதான் 'நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்' என நம்பிக்கையோடு கூறினார். அவரது நம்பிக்கை, பணிவு இயேசுவை செயல்பட வைத்தது.

2. இயேசு அவரைத் தொடக்கூடாது. ஆனால் நல்மனதோடு தொட்டார். தொழுநோயாளி தீட்டுப்பட்டவர் என்பது சட்டத்திலேயே உள்ளது. ஆனால் இயேசுவிற்கு 'தொடுதல்' ஒரு தடையாக வரவில்லை.

3. இரண்டு தடைகளும் அகற்றப்பட்டாலும் சமூகம் இவரை ஏற்க வேண்டும். எனவே குருவிடம் காட்டி சமயக் கடமைகளை முடிக்கும்படி இயேசு நோய் நீங்கியவருக்குக் கட்டளையிட்டார்.

➽ கடவுள் முன்னிலையில் யாரும் தீட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதை உணர்ந்து அடுத்தவரை எந்நிலையிலும் ஏற்றுக்கொள்கிறேனா?

➽ என் சகோதரர் இயேசுவை அறிந்து வாழ நான் உதவிடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொநூ 4: 1-15, 25   திபா 50: 1, 8, 16-17, 20-21   மாற் 8: 11-13

## அடையாளம்

பரிசேயர் இயேசுவிடம் வந்து அவரை நம்புவதற்கு அடையாளம் கேட்டனர். இயேசுவோ அவர்களுக்கு அடையாளம் தர மறுத்தார் என்பதை இன்றைய நற்செய்தியில் பார்க்கிறோம். இப்பகுதி தரும் சிந்தனை என்ன?

### போலி மெசியாக்கள்

இயேசுவிற்கு முன்பு பாலஸ்தீனாவில் மக்கள் மத்தியில் பல போலி மெசியாக்கள் தோன்றினார்கள். பல நூறு வருடங்களாக எதிர்பார்க்கப்பட்ட மெசியா வராத நிலையில் இவர்கள் மக்களின் எதிர்பார்ப்பையும் கபடற்ற உள்ளத்தையும் பயன்படுத்தினார்கள். மெசியாவை அதிகம் எதிர்பார்க்கும்போது 'நான்தான் மெசியா' என்றால் யாரும் நம்பவே செய்வார்கள். அதைவிட இவர்கள் பல அடையாளங்களையும் மக்களுக்கு வாக்களித்தார்கள். இந்த அடையாளங்கள் பெரியவை. ஆற்றை இரண்டாகப் பிழப்பது, நகர் மதிலை விழவைப்பது போன்ற பாரிய அடையாளங்களை இவர்கள் வாக்களித்தார்கள்.

### இயேசுவிடம் அடையாளம்

போலி மெசியாக்களின் வாக்குறுதிகளின் பின்னணியில் பரிசேயர் அதே எதிர்பார்ப்போடு இயேசுவிடம் அடையாளம் கேட்டனர். கடவுள் உடைத்துக் கொண்டு அல்லது உலகை அதிரவைத்தே தன்னை வெளிப்படுத்த வேண்டும் என்பது இவர்களது எதிர்பார்ப்பு. இயேசுவோ மறுத்து விட்டார். ஏன்? இயற்கை முழுவதுமே கடவுளின் அடையாளம். இயேசுவின் வருகை, போதனைகள், புதுமைகள், அலகையை அடக்கியது, இயற்கையின் மீது அவருக்கிருந்த அதிகாரம் என்று பல அடையாளங்களை இயேசு சொல்லாமலேயே காட்டியிருக்கின்றார். தொழுநோயாளிகள், பாவிகள், பிற இனத்தவர் இயேசுவில் கடவுளின் செயல்களை பார்த்து அவரை நம்பினார்கள். இவர்கள் பார்த்தது நம்பிக்கைக் கண்களால். பரிசேயரோ சந்தேகக் கண் கொண்டே இயேசுவைப் பார்த்தனர். எனவே இயேசு எந்த அடையாளத்தைக் காட்டினாலும் பரிசேயர்கள் நம்பமாட்டார்கள். ஆன்மீக அனுபவம் தேடும் ஒருவர் கோவிலில் மட்டுமல்ல எங்கும் கடவுளின் செயல்களைப் பார்ப்பார். அப்போது அவரது பார்வையில் அனைத்தும் புனிதமாகத் தெரியும்.

✯ என்வாழ்வின் சம்பவங்களில் கடவுளின் கரத்தை உணர்ந்துள்ளேனா?

✯ எனது பார்வை, மனநிலையை மாற்றுவேன். ஆண்டவரை அனுபவிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 ~ செவ்வாய் - மாசி 2009

தொநூ 6: 5–8, 7: 1–5, 10 திபா 29: 1–4, 8–10 மாற் 8: 14–21

### புளிப்புமாவு

பரிசேயர், ஏரோதியரின் புளிப்புமாவு பற்றிக் கவனமாயிருக்க இயேசு எச்சரித்தார். சீடர்களோ மறந்துவிட்ட அப்பங்களைப் பற்றி எண்ணினர். இப்பகுதி தரும் உண்மைகளை ஆராய்வோம்.

### பரிசேயர், ஏரோதியர் மனநிலை

இயேசுவிடம் அடையாளம் கேட்டு அவரை சோதித்தனர் பரிசேயர் (மாற் 8: 11). இவர்களது எண்ணங்கள், எதிர்பார்ப்புகளை நேற்றைய சிந்தனையில் பார்த்தோம். பாரிய மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய அடையாளங்களே பரிசேயரின் மனதில் இருந்தன. மெசியா என்றால் அரசுகளை கைப்பற்றுவார், மக்களை அரசாள்வார், பல வல்ல செயல்களைச் செய்வார், அரசியல் அதிகாரம் அவருக்கு இருக்கும் என்பது இவர்களது எதிர்பார்ப்பு.

ஏரோதுவைப் பொறுத்தமட்டில் அவன் சக்தி, ஆட்சி, அதிகாரம், ஆணவத்தில் மட்டுமே மகிழ்ச்சியைக் கண்டான். அதற்காக அவன் எதையும் செய்யத் துணிந்தான். பரிசேயர், ஏரோதுவிற்கு உலக அரசுரிமையில்தான் இறையாட்சி இருக்கும் என்பது நம்பிக்கை. அது உலக அதிகாரம், வெற்றிகளைக் கொண்டிருக்கும்.

### புளிப்புமாவு

இந்த மனநிலைகளைக் கொண்டவர்களை புளிப்புமாவுக்கு ஒப்பிட்டார் இயேசு. யூதர்களின் கருத்துப்படி புளிப்புமாவு தீமையாக கருதப்பட்டது. புளிப்புமாவு என்பது பதப்படுத்தப்படாத அல்லது வேகவைக்காத மாவு. இது முன்பு பதப்படுத்தப்பட்ட மாவிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி. யூதர்களின் கணிப்பின்படி புளித்துப்போனவை அழுகிப்போனவைக்குச் சமனானது. எனவே புளிப்புமாவு தீமைக்கு ஒப்பிடப்பட்டது. இயேசுவும் இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது பரிசேயர், ஏரோதியரின் தீய தூண்டுதல்களிலிருந்து எச்சரிக்கை யாக இருக்கும்படி குறிப்பிடுகின்றார். ஆனால் சீடர்களோ கொண்டுவராத அப்பங்கள் பற்றிய சிந்தனையிலேயே இருந்தனர். இவர்கள் உலக நிறைவுகள் பற்றியோ, பரிசேயர் எதிர்பார்க்கும் பாரிய அடையாளங்கள் பற்றியோ கவலை கொள்ளாமல் நிலையானவை பற்றியே சிந்திக்க வேண்டும்.

✧ இயேசுவிடமிருந்து நான் எதை எதிர்பார்க்கிறேன்?

✧ ஆன்மீக ஆழத்தை நாடுவேன், அதுவே நிலை அமைதியைக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 - புதன் - மாசி 2009

தொநூ 8: 6-13, 20, 22 திபா 116: 12-15, 18-19 மாற் 8: 22-26

***பார்வை***

இயேசு பார்வையற்ற ஒருவருக்கு பார்வையளிக்கிறார். இந்த மனிதருக்கு அவர் கொடுத்த பார்வையிலிருந்து எமது பார்வையை சிந்தித்துப் பார்க்கத் தூண்டுகின்றது நற்செய்தி.

### பார்வையற்ற ஒருவர்

பார்வையற்ற நிலை என்பது அன்று பெரும் சாபக்கேடாகக் கருதப் பட்டது. இது கண்ணழற்சி காரணமாகவும் மோசமான சூரிய ஒளி காரணமாகவும் ஏற்படுகின்றது. அதேபோல மக்களின் துன்புரவு, சுகாதாரம் பற்றிய அறியாமையும் இதற்குக் காரணமாகிறது. கண்கள் பாதிக்கப்பட்டு ஈக்கள் மொய்க்கும் பார்வையற்றவரை அங்கு அடிக்கடி பார்க்கலாம். இந்த ஈக்களால் நோய்கள் தொற்றவும் வாய்ப்புண்டு.

### இயேசுவின் பரிவு

இங்கும் இயேசுவின் பரிவைப் பார்க்கிறோம். அவர் பார்வையற்றவரை தனியாக, ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று வேண்டியதைச் செய்தார். இவர் பிறவியில் பார்வையற்றவராக இருக்கலாம். திடீரென்று மக்களுக்கு மத்தியில் பார்வை பெற்றால் திரளான மக்களையும், பொருட்களையும், வகை வகையான நிறங்களையும் பார்த்து குழம்பித் தடுமாறியிருப்பார். எனவே இயேசு இவருக்கு படிப்படியான பார்வையைக் கொடுத்தார். அனுபவம் பெற்ற ஓர் வைத்தியர் நோயாளியின் உள்ளுணர்வுகளையும் அறிந்து செயல்படுவார். இயேசுவும் பார்வையற்றவரின் உணர்வுகளை அறிந்து செயல்பட்டார். அவரை அணுகியவர்களின் சிந்தனையையும், உள்ளத்தையும் அறிந்து செயல்படுபவர்.

பொதுவாக இயேசுவின் புதுமைகள் உடனடியானவை. ஆனால் இங்கு இயேசு பார்வையற்றவரை படிப்படியாகக் குணமாக்கினார். இதை அடையாளப்படுத்தும் ஓர் உண்மை உள்ளது. கடவுளின் மறையுண்மையையும் புகழையும் யாரும் ஒரேயடியாக அறிந்துவிட முடியாது. மனம்மாறும் ஒருவர் படிப்படியாக விசுவாசத்தில் வளர்ந்து கடவுளை அறிய வாய்ப்புண்டு. இறையனுபவம் என்பது ஓர் வளர்ச்சி. எமது வேகத்திற்கும், எதிர்பார்ப்பிற்கும் எதுவும் நடைபெறாது.

✧ எனது மனநிலை, வாழ்வு பற்றி நானும் பார்வையற்றவனாக இருக்கிறேனா?
✧ இயேசுவில் பார்வை பெறுவேன், பார்வை கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 - வியாழன் - மாசி 2009

தொநூ 9: 1-13 திபா 102: 15-18, 20, 22 மாற் 8: 27-33

### *மெசியா*

இயேசு யார் எனும் தேடல் தொடர்கின்றது. யூதத் தலைவர்கள், யூத மக்கள், பிற இனத்தவர், சீடர்கள் என்று பலரும் தமது தனிப்பட்ட அனுபவங்கள் மூலமாக இயேசு யாராக இருப்பார் எனும் எண்ணத்தை வளர்த்திருந்தனர். நற்செய்தியில் இயேசு நேரடியாக தன் சீடர்களிடமே கேட்கின்றார். நற்செய்தி தரும் சிந்தனைகளைப் பார்ப்போம்.

**சான்றும் அமைதியும்**

இயேசுவின் கேள்விக்கு பேதுரு முன்வந்து பதில் சொன்னார். 'நீர் மெசியா.' அது அவருக்குக் கடினமானதாகத் தெரியவில்லை. ஆனால் இயேசு இந்த சான்றை எவருக்கும் கூறவேண்டாம் என்றார். ஏன்? ஏனெனில் மெசியா என்றால் யார் என்பதை இயேசு அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். மெசியா பற்றிய யூதர்களின் எண்ணம் என்ன?

**மெசியா**

மக்கள் மெசியாவை எப்போதும் தாவீதுடன் ஒப்பிட்டுப் பார்த்தனர். சக்தி, போர், வெற்றி, பகைவரின் வீழ்ச்சி என்று சரித்திரத்தில் தாவீதின் வெற்றிகளை மக்கள் மறக்கவில்லை (காண். எசா 9: 7, 11: 1, எரே 22: 4, 23: 5, 30: 9). மெசியாவும் தாவீதின் மரபில் வருவார் என்றால் அவரும் வெற்றி வீரராகவே திகழ்வார். ஆனால் காலம் செல்லச்செல்ல மக்களின் மனங்களில் இந்த எதிர்பார்ப்புகள் குன்றத் தொடங்கியது. அசீரியர், பாபிலோனியர், பாரசீகர், கிரேக்கர், உரோமையர் என்று பல நாடுகள் இஸ்ரயேலை ஆட்சி செய்தன.

மெசியா பற்றிய மக்களின் சிந்தனை இவ்வாறு இருக்க தன்னை சீடர்கள் முழுமையாக அறிவது மிக முக்கியம். எனவேதான் தனது பாடுகள், மரணம் உயிர்ப்பை தொடர்ந்து அவர் குறிப்பிட்டார். அதை உணராத, ஏற்காத பேதுரு அந்த எண்ணத்தையே எதிர்த்தார். இயேசுவிற்கு அது பாலைநிலத்தைப் போல சோதனைக்களமாகவே தோன்றியது. உற்ற நண்பர் மூலமாகவும் சோதனைகள் ஒருவருக்கு வரலாம். இயேசுவோ தெளிவாக இருந்து அந்த சூழ்நிலையை வென்றார்.

- இயேசு எனக்கு யார் என்பதைத் தனித்து சிந்தித்துப் பார்த்துள்ளேனா?
- எனது பதிலில் எனது வாழ்வின் தரமும் அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 - வெள்ளி - மாசி 2009

தொநூ 11: 1-9 திபா 33: 10-15 மாற் 8: 34-9: 1

### *சீடத்துவம்*

சீடத்துவம் பற்றி இயேசு நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். தனது பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றி கூறியதும் அங்கு நடைபெற்ற குழப்பத்திற்குப் பின்பு இயேசு சீடத்துவம் பற்றிக் குறிப்பிட்டார். சீடர்கள் இதைத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். சீடத்துவம் தரும் சிந்தனையைப் பார்ப்போம்.

**உண்மை சீடத்துவம்**

இயேசு தனது அழைப்பில் சில விடயங்களைத் தெளிவாக்கினார்.

1. சீடத்துவம் பற்றி அவர் குறிப்பிட்டபோது அவர் மிக நேர்மையாகவும் நம்பகத்தகுந்த முறையிலும் செயல்பட்டார். தன்னைப் பின்செல்ல விரும்பினால் துன்பங்களை சுமக்க ஆயத்தமாக வேண்டும். மெசியா பற்றிய சீடர்களின் கருத்துக்கு இது முரணானது. எனவே இயேசுவின் இந்த அழைப்பு அவர் களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கலாம். இயேசு அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கவில்லை, மகிமையைக் கொடுத்தார்.

2. சிலுவை சுமக்க அழைத்த இயேசு அதை அவர் வாழ்ந்தும் காட்டினார். உண்மைத் தலைவரின் சிறப்பான பண்பு இது. உலகத் தலைவர்கள் பலர் சித்திரத்தில் வாழ்ந்து காட்டியும் உள்ளனர். இயேசு தன் சீடர்களின் வாழ்வைப் பணயம் வைக்கவில்லை. அவரே தனது சவால்களை அவர்களுக்கு முன்குறித்து வைத்தார். நேரம் வந்தபோது வாழ்ந்தும் காட்டினார். எனவே இயேசுவிற்கு தனது சீடர்களை அழைக்கவும் உரிமை இருந்தது.

3. அவர் 'தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு...' சீடர் தனக்கு 'இல்லை' என்றும் கிறிஸ்துவிற்கு 'ஆம்' என்றும் கூறவேண்டும். அதை வாழ்வில் காட்டவும் வேண்டும். 'இல்லை' என்பது ஒருவரின் அமைதி, வசதிகள், பாதுகாப்பு அனைத்துக்கும் 'இல்லை' என்பதாகும். 'ஆம்' என்பது கிறிஸ்துவின் வாக்கிற்கும் கட்டளைகளுக்கும் 'ஆம்' என்பதாகும். பவுலைப்போல 'என்னில் வாழ்வது கிறிஸ்துவே' என்று ஒவ்வொரு சீடரும் கூறுமளவிற்கு உறவு ஆழமாக வேண்டும்.

- இயேசுவின் உண்மைச் சீடன் நான் என்று என்னால் கூறமுடியுமா?
- எனது இயேசு அனுபவம், நம்பிக்கை என்ன?
- இயேவின் சீடனாக நான் எப்போதும் வாழ்ந்து காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 – சனி - மாசி 2009

எபி 11: 1–7 திபா 145: 2–5, 10–11 மாற் 9: 2–13

### உருமாற்றம்

இயேசுவின் தோற்றம் மாறுதல் நிகழ்வை அவரது போதனைகள், புதுமைகள், சவால்கள், பாடுகள் மரணம் பற்றிய அறிவிப்பு, சீடர்களின் புரியாமை போன்ற பின்னணியோடு பார்க்க வேண்டும். தனது இறுதிநாள்களைப் பற்றிய நல்ல முடிவுகள் எடுக்க வேண்டிய நிலையில் இயேசு இருந்தார். சீடர்களும் குழம்பிய நிலையில் இருந்தார்கள். இந்நிலையில் இயேசுவிற்கும் சீடர்களுக்கும் சில உறுதிப்பாடுகள் தேவையாக இருந்தன. இயேசுவின் தோற்றம் மாறுதல் தரும் உறுதிப்பாடுகள் என்ன?

### இயேசுவிற்கு அவசியமானது

எருசலேமிற்குப் போகவும், சிலுவையை ஏற்கவும் இயேசு முடிவு எடுக்க வேண்டும். அந்த முடிவும் சந்தேகமின்றி சரியானதா என்பதையும் அவர் உறுதிப்படுத்த வேண்டும். மேலிருந்து அவருக்கு பதில் வந்தது.

1. ***மோசே எலியா:*** இவர்கள் பழைய ஏற்பாட்டு மனிதர்கள். மோசே சட்டத்தைக் கொடுத்தவர், எலியா தலைசிறந்த இறைவாக்கினர். இவர்கள் இருவரும் அன்று கண்ட கனவை இயேசு நிறைவேற்ற எருசலேம் நோக்கிப் பயணம் செய்யவிருக்கின்றார். இவர்கள் பதில், 'தொடர்ந்து செல்' என்பதாகவே இருந்திருக்கும். அது அவருக்கு மேலும் சக்தியைக் கொடுத்திருக்கும்.

2. ***கடவுள்:*** இயேசு அனைத்திலும் இறைத்தந்தையையே நாடினார். செபம் அவரது வாழ்வில் மிக முக்கியமானதொன்று. என் அன்பார்ந்த மைந்தர் இவரே என்று கடவுளும் தனது ஒப்புதலைக் கொடுத்தார்.

### சீடர்களுக்கு அவசியமானது

சீடத்துவம் பற்றிய இயேசுவின் போதனை சீடர்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் உடைத்தெறிந்திருக்கும். இயேசுவே பாடுகள் பட்டு சிலுவைச் சாவை ஏற்கப்போகிறார் என்பதும் அவர்களுக்குப் புதிராகவே இருந்திருக்கும். எனவே இயேசுவின் தோற்ற மாற்றம் இவர்களுக்கு ஆழமான நம்பிக்கையைக் கொடுத்திருக்கும். இறைமனிதர் ஒருவருக்கே இதுபோன்ற அனுபவம் கிடைக்க வாய்ப்புண்டு. இந்த சம்பவம் அவர்களை நம்பிக்கை கொள்ளச் செய்தது.

★ சீடத்துவம் பற்றிய எனது கருத்து, மனநிலை என்ன?

★ இயேசு முன்வைக்கும் சீடத்துவத்தையும் அது தரும் சவால்களையும் ஏற்று வாழ்ந்து காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 7ம் ஞாயிறு
## 22 - மாசி 2009

எசா 43: 18−19, 21−22, 24−25 திபா 41: 1−4, 12−13 2கொரி 1: 18−22 மாற் 2: 1−12

## தூய பேதுருவின் தலைமைப்பீடம்

ஆண்டவரின் இரக்கம் எப்போதும் தன் மக்கள்மீது உள்ளது என்பதை இன்றைய ஞாயிறு வாசகங்கள் தருகின்றன. அவரது மக்களாகிய யூதர்கள் அவரைவிட்டு காலத்துக்குக் காலம் விலகிச் சென்றாலும் கடவுள் அவர்களை மறக்கவில்லை. மக்களின் பாவங்களை மன்னித்து அவர்களுக்குப் புதுவாழ்வு கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார். இந்த உண்மைகள் எவ்வாறு வாசகங்களில் தரப்படுகின்றன என்பதையும் எமது வாழ்வில் இயேசுவின் இரக்கத்தையும் சிந்தித்துப் பார்ப்போம்.

### மன்னிக்கும் ஆண்டவர்

கடவுளின் மக்கள் தமது பாவங்களால் அவரைவிட்டுப் பிரிந்து வந்துள்ளனர். கடவுளும் இறைவாக்கினரை அனுப்பி தனது எண்ணங்களையும் இரக்கத்தையும் காட்டியுள்ளார். மக்கள் மனம்மாறாது தொடர்ச்சியாக பாவ வாழ்வில் இருக்கும்போது கடவுள் அவர்களை அந்நியர் கைகளில் ஒப்படைத்து தண்டித்தும் உள்ளார். பாபிலோனியாவில் மக்கள் அடிமைகளாக வாழ்ந்த காலத்தில் கடவுளின் வாக்கு எசாயா இறைவாக்கினர் மூலமாக வருகின்றது.

மக்கள் காணிக்கைப் பொருட்களுக்குப் பதிலாக தம் பாவங்களையே கடவுளுக்குக் கொடுத்தனர் என்று தனது அதிருப்தியைத் தெரிவித்தாலும் மக்களின் பாவங்களை மன்னித்து மறந்துவிடுவதாக கடவுள் வாக்களித்தார். இது அவரது அளவற்ற இரக்கத்தையே காட்டுகின்றது. ஆனால் இதைக் கேட்டும் மக்கள் மனம்மாறினார்களா?

### மன்னிக்கும் இயேசு

மக்கள் கூட்டம் அதிகமாயிருந்தது. அவரிடம் ஒரு முடக்குவாத முற்றவரைக் கொண்டுவர வேண்டுமென சிலர் உறுதியோடு செயல்பட்டனர். மக்கள் கூட்டத்தால் இந்த நம்பிக்கையையும் உறுதியையும் தடுக்க முடியவில்லை. இவர்கள் அந்த வீட்டுக் கூரையில் ஓர் திறப்பு உண்டாக்கி முடக்குவாதமுற்றவரை இயேசு நின்ற இடத்தில் இறக்கினார்கள். இவர்களது நம்பிக்கை இயேசுவை செயல்பட வைத்தது. இயேசு இங்கு இவரைக் குணமாக்குவது முக்கியமல்ல. மாறாக இயேசுவுக்குப் பெரும் சவாலும் காத்திருந்தது. இயேசு இந்த பாவியை மன்னித்தது சரியான செயலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவங்களை மன்னிப்பது**

பாவங்களை மன்னிப்பது கடவுளின் செயல். இது யூதர்களின் நம்பிக்கை. யாராவது பாவங்களை மன்னிப்பதாகக் கூறினால் அது கடவுளையே அவமதிப்பது போலாகிவிடும். அது சட்டப்படி தேவநிந்தனை. இதற்கு கல்லால் எறிந்து கொல்வதே தண்டனையாகும் (காண். லேவி 24: 16). ஆனால் மக்களின் பொருட்டு மறைநூல் அறிஞர்கள் அமைதி காத்தனர். இயேசுவும் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார்.

பாவமும் நோயும் பின்னிப் பிணைந்துள்ளன என்பதும் யூதர்களின் அசையாத நம்பிக்கை. ஒரு நோயாளி ஏற்கெனவே பாவம் செய்தவர் அல்லது பாவம் செய்பவர் என இவர்கள் எண்ணினார்கள். எனவே இயேசுவும் இவர்களிடம் 'பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதா அல்லது எழுந்து நட என்பதா இலகுவானது' எனக் கேள்வி எழுப்பினார். 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று ஒருவர் கூறினால் அதன் விளைவை அடுத்தவர் பார்க்க முடியாது. ஆனால் 'எழுந்து நட' என்று கூறினால் அதன் விளைவை அவரது செயலிலிருந்து அறிந்துகொள்ளலாம். அவர் நடந்தால் அது நிரூபிக்கப்படும். இவ்வாறு நோய் குணமானால் பாவங்களும் மன்னிக்கப்பட்டன என்பதே பொருள். ஒருவர் மன்னிக்கப்படாவிட்டால் அவர் நோயிலிருந்து விடுபடவும் முடியாது என்பது யூதர்களின் நம்பிக்கை. இவர் இயேசுவால் குணமானார். அவ்வாறெனில் அவர் மன்னிக்கப்பட்டும் விட்டார். எனவே மன்னிக்கும் இயேசுவின் அதிகாரமும் உண்மையாகிவிடுகின்றது. இயேசுவின் மன்னிப்பு எதைக் குறித்து நிற்கின்றது.

**இயேசுவின் மன்னிப்பு**

இயேசு கொடுத்த மன்னிப்பு பல சிந்தனைகளைத் தூண்டிவிடுகின்றது எனலாம். அவற்றை சுருக்கமாகப் பார்ப்போம். இயேசு கடவுளின் மன்னிப்பைக் கொண்டுவந்தார் அல்லது அவர் கடவுளின் பிரதிநிதியாக செயல்பட்டார் என்று கூறலாம். ஆனால் இயேசுவைப் பொறுத்தமட்டில் அவரே மன்னித்தார் என்பது சரியாகப் பொருந்தும். இயேசுவில் கடவுளின் மனநிலை தெளிவாக வெளிப்பட்டதை நாம் நற்செய்திகளில் காணலாம். மனித சிந்தனையோ கடவுள் சக்திமிக்க, தண்டிக்கின்ற கடவுள் என்பதாகும். ஆனால் இயேசுவோ மன்னிக்கக் காத்திருக்கின்ற கடவுளை உலகிற்கு வெளிப்படுத்தினார்.

☛ இயேசுவின் குணமாக்கலும் மன்னிப்பும் எனக்குள் என்ன மாற்றத்தைக் கொண்டுவருகின்றன?

☛ மன்னிக்கக் காத்திருக்கும் இயேசுவிடம் தூய உள்ளத்தோடு வந்து அவரது மன்னிப்பை உணர்ந்து ஒப்புரவின் மனிதராவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 ~ திங்கள் - மாசி 2009

சீஞா 1: 1-10 திபா 93: 1-2, 5 மாற் 9: 14-29

### *சவால்கள்*

இன்றைய நற்செய்தி பல செய்திகளைத் தருகின்றது. அவற்றில் இரண்டு முக்கிய விடயங்களைத் தியானிப்போம்.

**தனிமையில் ஒருவர்**

மலையிலேயே தங்கிவிடலாம் என்று பேதுரு கருதினாலும் இயேசு தோற்றம் மாறியபின்பு நடைமுறை வாழ்விற்கு வருகின்றார். இயேசுவின் மாட்சியைக் கண்டபோது தனித்த இந்த வாழ்வு நல்லது என்று பேதுரு கருதியிருக்கலாம். ஏனெனில் கீழே அவர்கள் இறங்கியபோது வாழ்வின் சவால்கள் காத்திருந்தன. 'தனிமை' நல்லது. அது கடவுளோடு ஒன்றிக்க பெரிதும் உதவும். ஆனால் ஒருவர் அடுத்தவரிடமிருந்து தன்னைப் பிரித்து அவர்களது வாழ்வோடு ஒன்றிக்காமல், சக சகோதரரின் துன்பங்களில் பங்கெடுக்காமல் தனித்துவ வாழ்வை விரும்பினால் அது தவறாகும். ஆனால் 'தனிமை' எம்மை மேலும் சிறந்த மனிதர்களாக்கி நடைமுறை வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள சக்தியைத் தரும்.

**சவால்கள்**

அவர்கள் மலையடிவாரத்திற்கு வந்தபோது அங்கு ஓர் சவால் காத்திருந்தது. தீய ஆவி பிடித்த ஒரு சிறுவன், வாக்குவாதம், மக்களின் மனநிலை என்று பல சூழ்நிலைகள். சீடர்களின் இயலாமையைப் பார்த்த மறைநூல் அறிஞர்கள் அவர்களையும் அவர்களது தலைவர் இயேசுவையும் ஏளனம் செய்திருக்கலாம். எனவே இந்த பாரிய சிக்கலைத் தீர்க்க இயேசு சிறிய செயலிலிருந்து தொடங்கினார். சிறுவனை அவர் அழைத்து குணமாக்கினார். சிலுவையை ஏற்க முடிவுசெய்த இயேசு நாளாந்த சவால்களையும் ஏற்கத் தயங்கவில்லை. பாரிய செயல்களைச் செய்யும் நாம் சிறிய செயல்களில் தவறிவிடுவதுண்டு. இயேசு அதற்கு இடம்கொடுக்கவில்லை. உலகை மீட்க வந்த இயேசு தன் பணியை ஒருவரிலிருந்து, ஒரு ஊரிலிருந்து, ஒரு சம்பவத்திலிருந்து தொடங்கினார். வெற்றியும் கண்டார். தனிநபருக்கு நன்மை செய்வதைவிட அன்பைப் பற்றி போதிப்பது இலகு.

- ✠ தனிமை தேடி இறைவனின் வழிகாட்டலைப் பெற முயன்றுள்ளேனா?
- ✠ அன்பைத் தேடும் நான் அன்புள்ளவனாக வாழ்ந்துள்ளேனா?
- ✠ இயேசுவின் அன்பு என்னில் வழிந்தோடட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 ~ செவ்வாய் - மாசி 2009

சீஞா 2: 1-11 திபா 37: 3-4, 18-19, 27-28, 39-40 மாற் 9: 30-37

***சிலுவை***

இயேசு தனது பாடுகள் மரணம் உயிர்ப்பு பற்றி இரண்டாம் முறையாகக் குறிப்பிட சீடர்களின் சிந்தனையோ தம்மைப் பற்றியதாகவே இருந்தது. இச்சூழ்நிலையில் இயேசுவின் போராட்டத்தைத் தியானிப்போம்.

### பாடுகள் பற்றிய முன்னறிவிப்பு

இயேசு தனது பாடுகள் பற்றி முன்னறிவித்ததை 8ம், 9ம், 10ம் அதிகாரங்களில் மாற்கு நற்செய்தியாளர் தருகின்றார் (8: 31, 9: 31, 10: 33). இந்த முன்னறிவிப்புகளுக்கு முன்பாக இரு முக்கிய நம்பிக்கை தரும் சம்பவங்களும் நடைபெற்றன. எட்டாம் அதிகாரத்தில் இயேசு நாலாயிரம் பேருக்கு உணவளித்த புதுமை. ஒன்பதாம் அதிகாரத்தில் இயேசு தோற்றம் மாறிய சம்பவம். ஆயினும் சீடர்கள் இயேசுவின் போதனையை எந்தளவிற்கு நம்பினார்கள்?

### தொடரும் தடைகள்

இயேசு மூன்று தடவைகள் தனது கடைசி நாள் சம்பவங்களைப் பற்றி முன்னறிவித்தாலும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் சீடர்களின் மனநிலையையும், இயேசுவின் போராட்டத்தையும் வெளிப்படுத்தின. முதல் தடவை அறிவித்தபோது பேதுரு இயேசுவை அழைத்துக் கடிந்து கொண்டார். இரண்டாம் தடவை அறிவித்தபோது சீடர்களுக்குள் யார் மிகப் பெரியவர் எனும் போராட்டம். இன்னும் இவர்கள் இயேசுவின் உலக ஆட்சியைப் பற்றியும் அதில் அவர்களது பதவிகள் பற்றியுமே சிந்தித்தனர். மூன்றாம் தடவை அறிவித்தபோது யோவானும் யாக்கோபும் தமக்கு அரியணையில் உரிய இடம் கிடைக்க வேண்டுமென இயேசுவிடம் கேட்டனர்.

இவ்வாறு சிலுவை பற்றிய முடிவே பெரும் போராட்டமாக இருக்க சீடர்களின் அறியாமை மேலும் இயேசுவின் மனதைப் பாதித்திருக்கும். பெரும் போராட்டமாக அவரது இறுதிக்கால வாழ்வு அமைந்தது எனலாம். தனித்தே முன்னேற வேண்டிய நிலை அவருக்கு. இறைத்தந்தையே அவரது பலமானது.

✝ இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனக்குள் கொண்டுவரும் மாற்றம் பற்றிச் சிந்தித்துள்ளேனா?

✝ இன்று அடுத்தவரில் இயேசுவைக் காண முயல்கின்றேனா?

✝ அடுத்தவர் தமது சிலுவை சுமக்க நான் உதவிடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலம்

**முன்னுரை**

இன்று, திருநீற்றுப் புதன் தொடக்கம் நாம் தவக்காலத்தில் நுழைகின்றோம். கிறிஸ்தவர் எமக்கு இது புனிதமான காலம். இக்காலத்தில் நாம் செபம், தபம், ஒறுத்தல் முயற்சிகள் மூலமாக இயேசுவின் பாடுகளோடு எமது வாழ்வைத் தியானிக்கிறோம். இது எமக்கு அருளின் காலம். யாரும் அழிந்துபோக வேண்டும் என்று கடவுள் விரும்புவதில்லை. இயேசு அவர் மரணிக்கும் போதும் மனம் மாறிய கள்வரை மன்னித்தார். நாம் மரணிக்கும்போதும் மனம் மாறும் எம்மை மன்னிக்கிறார். இவ்வாறு தீர்ப்பு, தண்டனை, மரணம் எல்லாம் இறைவன் விரும்பி மனித குலத்திற்குத் தந்தவையல்ல. மாறாக அவை நாமாக விரும்பி தேடிக்கொண்டவையே.

**எனது தவக்காலம்**

தவக்காலத்தில் பங்குகளில் பல ஆயத்தங்கள், வழிபாடுகள், ஒப்புரவு அருட்சாதனங்கள், சிலுவைப்பாதைத் தியானம், புனிதவார வழிபாடுகள், பாஸ்கா நிகழ்ச்சிகள் என்று பல நிகழ்வுகளை எதிர்பார்க்கலாம். விசுவாசிகளோடு இன்னொரு விசுவாசியாக நான் நின்று சிலுவையில் தொங்கும் இயேசுவிற்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விடலாம். வருடாவருடம் நடைபெறும் நிகழ்ச்சி இது. ஆனால் இவை எனது தனிப்பட்ட வாழ்வில் எந்த மாற்றங்களை ஏற்படுத்துகின்றன? அதற்கு எனது தவக்காலமாக இக்காலம் மாறவேண்டும்.

எனவே இத்தவக்காலத்தை நான் எவ்வாறு பயன்படுத்தப்போகிறேன் என்பது எனது தனித்துவ கேள்வியாக வேண்டும். சிற்பி கல்லில் ஓர் சிற்பம் செதுக்க செய்ய வேண்டியது ஒன்றே. அந்தக் கல்லில் தேவையில்லாத துகழ்களை அகற்ற வேண்டும். அப்போது அந்த சிற்பம் தெளிவாகத் தோன்றும். அதேபோல எனக்குள் இருக்கும் கடவுளை, இறையன்பை நான் காணவும், கண்டு அதைக் கொண்டாடவும் அதை முடியிருப்பவற்றை சிறிது சிறிதாக நானே அகற்ற வேண்டும். எனது சுயநலம், பழிவாங்கும் மனநிலை, மன வேதனைகள், கோபம், பகை, தீய வாழ்வு, தீய பழக்கங்கள், ஏக்கங்கள் போன்ற பல தடைகளை நான் அகற்ற வேண்டும். அப்போதுதான் நான் இறையன்பை எனது உள்ளத்தில் அனுபவிக்க முடியும். அதுவே முழுமையான அமைதியையும் மகிழ்ச்சியையும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகங்களும் தியானங்களும்**

இத்தவக்காலத்தில் வரும் வாசகங்கள் தனித்துவமானவை. அவற்றை அடிப்படையாகக் கொண்டு எமது வாழ்வைத் தியானிப்பது எமது கடமை. எனவே இந்தத் தவக்காலத்தில் சற்றே மாறுபட்டதாக வாசகங்களில் வரும் மனிதர்களினதும் இயேசுவினதும் உள்ளுணர்வுகளுக்கு மேலதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்ளோடு பயணிக்க உங்களை அழைக்கின்றேன். இது ஒரு சிறப்பான, தனித்துவமான அனுபவமாகட்டும். இவர்களின் உள்ளுணர்வுகள் எந்தளவிற்கு எனது உணர்வுகளைப் பாதிக்கின்றன என்று சிந்திக்கவும் இவை தூண்டும்.

இயேசுவோடு கல்வாரி நோக்கி நானும் பயணம் செய்யும்போது அப்பயணம் என்னுள் பாரிய மாற்றங்களை உருவாக்கும். அந்த மாற்றம் தரும் சவால்களை ஏற்று வாழ என்னைத் தூண்டுவதாகவும் அது அமையும்.

**அர்ப்பணங்கள் தேவை**

தவக்காலத்தில் நான் பல தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுப்பதுண்டு. பல தீய பழக்கங்களில் ஒரு தீய பழக்கத்தையாவது விட்டு விடுவேன் என்று தீர்மானித்து நான் செயல்படுவதுண்டு. ஆனால் அது தவக்காலத்தோடு முடிந்து விடும். அவை எனது செயல்கள் மட்டுமே. சில வேளைகளில் நான் தீர்மானம் எடுத்தேன் என்பதையே மறந்துவிடுவேன்.

ஆனால் நான் தீர்மானங்களைவிட அர்ப்பணங்களையே மேற்கொள்ள வேண்டும். அது எனது செயலில் அல்ல, மாறாக, என்னுள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும். என்னுள் ஏற்படுகின்ற மாற்றங்கள் இயல்பாகவே எனது வாழ்வில் வெளிப்படும். அதுவே உண்மையான, நிலையான மாற்றமாகும். இந்த அர்ப்பணத்தை நான் மேற்கொண்டு புதுவாழ்வு வாழ்வேன். இதுவே இத்தவக்காலம் எனக்குத் தரும் சவால்.

இத்தவக்காலம் யாவருக்கும் பயனுள்ளதாக அமைய ஆசிப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 - திருநீற்றுப் புதன் - மாசி 2009

யோவே 2: 12-18 திபா 51: 1-4, 10-12 2கொரி 5: 20-6: 2 மத் 6: 1-6, 16-18

### இறையிரக்கம்

### சரித்திரமும் அடையாளமும்

இன்று வழிபாட்டின்போது குரு விசுவாசிகளது நெற்றியில் சாம்பலைப் பூசி 'மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்,' அல்லது 'மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்' என்று கூறுவார். இன்றைய வழிபாட்டுடன் தவக்காலம் தொடங்குகின்றது. திருத்தந்தை பெரிய கிரகோரியார் (கிபி 590-604) திருநீற்றுப் புதனை தவக்காலத்தின் முதல் நாளாக ஆரம்பித்து வைத்தார். இது 45 நாட்களைக் கொண்டது. பழைய ஏற்பாட்டில் சாம்பல் ஓர் அடையாளம். மானபங்கப்படுத்தப்பட்ட பெண் தனது ஆழ்ந்த துன்பத்தின் அடையாளமாக தலையில் சாம்பலைக் கொட்டிக்கொள்வார் (காண். 2சாமு 13: 19). மக்கள் தமது துயரை வெளிப்படுத்த சாம்பலில் புரண்டனர் (காண். எரே 6: 26). மனமாற்றத்தின் அடையாளமாகவும் சாம்பலை உடலில் தெளிப்பர் (காண். யோபு 42: 6). இன்று இதன் அடையாளம் என்ன? இருவித அடையாளங்களை சாம்பல் குறித்து நிற்கின்றது.

1. ***மனமாற்றம்:*** இது மனமாற்றத்தின் அடையாளம். எமது பாவங்களுக்காக வருந்தும் நாம் தவக்காலத்தில் அதற்குப் பரிகாரம் தேடுவோம் எனும் செய்தியையும் கொடுக்கின்றது. 'மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்.'

2. ***இறப்பு:*** இது எமது மரணத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. மனிதர் நாம் ஒருநாள் இறப்போம் என்பதை நெற்றியில் இடப்படும் சாம்பல் உணர்த்துகின்றது. 'மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்.'

இந்தக் காலத்தில் மனமாற்றத்தின் அடையாளமாகவும், செய்த பாவங்களுக்குப் பரிகாரமாகவும் செப, தப முயற்சிகளில் ஈடுபட விசுவாசிகள் அழைக்கப்படுகின்றனர். இக்காலத்தில் மாமிசத்தைத் தவிர்த்து, உண்ணா நோன்பிருந்து, இரக்கச் செயல்களிலும் ஈடுபட வேண்டும்.

### இறைவனின் விருப்பம்

மக்கள் மனம்மாறி தன்னிடம் வரவேண்டுமென்பதே கடவுளின் விருப்பம். இதற்காகவே மீட்புத் திட்டத்தை தொடக்கத்தில் தொடங்கி வைத்து இறைவாக்கினர்களை அவர் மக்களிடம் அனுப்பினார். மக்கள் முழு இதயத்தோடு அவரிடம் வரவேண்டும். உண்மை மனமாற்றம் ஒருவரில் இருக்கும்போது அவரது ஈகையும், செபமும், ஒறுத்தலும் இயல்பாகவே அவரிடமிருந்து வரும். அது அடுத்தவரின் நன்மதிப்பையோ, பாராட்டையோ தேடாது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களோ இதயத்தைக் கிழிப்பதற்குப் பதிலாக தமது ஆடைகளைக் கிழித்தனர். அன்று ஒருவர் தனது கோபம் அல்லது மனமாற்ற உணர்ச்சியை வெளிப்படுத்த தமது மேலாடையைக் கிழிப்பார் (காண். மத் 26: 65). யோவேல் நூலில் மக்களின் வெளிவேடத்தைக் கிழிக்கிறார் ஆண்டவர். இறைவன் விரும்புவது உண்மையான மனமாற்றமே.

## யூதரின் நடைமுறையில்...

அனைத்து காணிக்கைகளையும்விட இரக்கச் செயல்கள் மேலானது என்பது யூதப் பழமொழி. நல்ல செயல்களில் முதலிடத்தைப் பெறுவது இரக்கச் செயல்களே. நல்ல மனிதராக மாற விரும்புபவர் இரக்கச் செயல்களில் ஈடுபட வேண்டும். இயேசுவைப் போல ராபிக்களின் போதனையும் ஆடம்பரமற்ற இரக்கச் செயல்களையே வலியுறுத்துகின்றன. 'மறைவாக இரக்கச் செயல்களில் ஈடுபடுபவர் மோசேயைவிட சிறந்தவர்.' சிறந்த இரக்கச் செயல் எதுவென்றால், நன்மையைப் பெறுபவர் அது யாரிடமிருந்து வருகின்றது என்பதை அறிய மாட்டார், நன்மை செய்பவரும் அது யாருக்குப் போகிறது என்பதையும் அறியமாட்டார்.

## இயேசுவின் கண்டனம்

மத்தேயு நற்செய்தியில் இயேசு மக்களின் வெளிவேட செயல்களைக் கண்டித்தார். யூதர்கள் மத்தியில் முக்கிய பண்புகளாக இரக்கச் செயல்கள், செபம், நோன்பு ஆகிய மூன்றும் அமைந்தன. இவற்றை இயேசு மறுக்க வில்லை. மாறாக, வாழ்வில் மிக நல்ல செயல்கள் தவறான நோக்கத்தோடு செய்யப்படுவதை எண்ணியே இயேசு வருந்தினார். இவை செய்பவரின் மகிமைக்காக செயல்படுத்தப்படும்போது அது தவறானது. அடுத்தவர் தம்மைப் பார்க்க வேண்டும், தமது பெருந்தன்மையைப் பார்த்து தம்மைப் புகழ வேண்டும் என்று பல சுயநல நோக்கத்தோடு ஒருவர் செயல்படுவதை இயேசு கண்டித்தார்.

'அவர்கள் தங்களுக்குரிய கைமாறு பெற்றுவிட்டார்கள்...' என்று மூன்று தடவைகள் இயேசு குறிப்பிட்டார் (காண். 6: 2, 5, 16). ஒருவர் அடுத்தவர் பார்வைக்கு நல்லது செய்யும்போது அவர் கைமாறு பெற்றுவிட்டார் என்பது மட்டுமல்ல அதுமட்டுமே அவருக்குக் கிடைக்கும் கைமாறாகும்.

✝ தவக்காலம் பற்றிய எனது மனநிலை என்ன? முடிவுகள் எடுப்பதல்ல, சிறந்த வாழ்விற்கான அர்ப்பணமே முக்கியமானது. எனது அர்ப்பணமென்ன?
✝ தவக்காலம் எனது வாழ்வை மாற்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி, உண்மை பாவசங்கீர்த்தனம் செய்து புதுவாழ்வு காண்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 - வியாழன் - மாசி 2009

இச 30: 15-20  திபா 1: 1-4, 6  லூக் 9: 22-25

### *சிலுவை*

இயேசு தனது சாவைப் பற்றி முன்னறிவித்து உண்மை சீடத்துவத்தைப் பற்றியும் நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். இதன் பின்னணியில் பேதுருவின் அறிக்கை அமைந்துள்ளது. நற்செய்தி தரும் வழிகாட்டலைப் பார்ப்போம்.

### சீடர்களுக்கு செய்தி

தனது பாடுகள் மரணம் உயிர்ப்பு பற்றி இயேசு தன் சீடர்களுக்கே சொன்னார். பேதுரு இயேசு பற்றிய தனது விசுவாச அறிக்கை செய்தபின்பு இயேசு தனது கடைசி நாட்களை முன்னறிவித்தார். இந்த செய்தி அவரது சீடர்களுக்கானது. அவர்கள் சிறிது சிறிதாக தனது வருகை, பணி, மரணம் பற்றிய தெளிவைப் பெறவேண்டும் என்பது இயேசுவின் எதிர்பார்ப்பு. அதற்காக தன் சீடர்களை ஆயத்தம் செய்துவந்தார். போதனை, பணி, பயிற்சி, அனுபவங்கள் என்று இயேசுவை அறிய பல சந்தர்ப்பங்கள் சீடர்களுக்குக் கிடைத்தன. ஆனாலும் அவர்கள் முழுமையாக அவரை அறிந்திருந்தார்களா?

### அனைவருக்கும் செய்தி

உண்மை சீடத்துவம் பற்றி இயேசு அனைவருக்கும் போதித்தார். இது பல சவால்களைக் கொண்டது.

**1. *தன்னலம் துறத்தல்:*** நன்மை செய்பவர் அதற்கு உடனேயே பலன் கிடைக்கவேண்டும் என்றே விரும்புவார். இவ்வாறு தனது வாழ்வு நல்லதாக, சமாதானம் நிறைந்ததாக, சவால்கள் அற்றதாக அமைய வேண்டும் என்பதும் உண்மையான எதிர்பார்ப்பாக அமையும். ஆனால் கிறிஸ்தவம் என்பது சவால்கள் நிறைந்தது. என்னை நினைத்தால் நான் அவரைக் காண முடியாது.

**2. *தம் சிலுவையை...:*** இயேசு உலகின் மீட்புக்காக சிலுவை சுமந்தார். அது அவர் சுமந்த சிலுவை. இன்று இயேசுவுக்காக நான் எடுக்கும் ஒவ்வொரு முடிவிலும் இழப்புகள், ஏமாற்றங்கள், சவால்கள், வேதனைகள் இருக்கும். இவை எனக்குக் கொடுக்கப்படும் சிலுவைகள்.

**3. *நாள்தோறும்...:*** தனித்தோ, குடும்பமாகவே நான் வாழ்ந்தாலும் கிறிஸ்தவ வாழ்வு என்பது தினமும் வாழ்வது. எதிர்காலம் எமது இலக்காக இருந்தாலும் நிகழ்காலத்தில் வாழ்கிறோம் எனும் உணர்வு எமக்கு வேண்டும்.

✝ எனது நாளாந்த சிலுவையை ஏற்று அவரைப் பின்செல்ல நான் ஆயத்தமா?

✝ சிலுவை தரும் பாரத்தைவிட அவர் தரும் அமைதியே மேலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 - வெள்ளி - மாசி 2009

*எசா 58: 1-9 திபா 51: 1-4, 16-17 மத் 9: 14-15*

### ***மகிழ்ச்சி***

இயேசுவின் சீடர்கள் அவரோடு இருந்தபோது நோன்பிருக்கவில்லை. இது யோவானின் சீடர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்த அதற்கு இயேசுவிடமே விளக்கம் கேட்டனர். இயேசுவோ யூதர்களின் திருமண சூழ்நிலையைப் பின்னணியாக வைத்து தனது பதிலைக் கொடுத்தார். இயேசுவின் பதில் தரும் சிந்தனை என்ன?

### யூதத் திருமணம்

யூதத் திருமணம் என்றால் அது கொண்டாட்டத்தின் காலமாகும். மணமகனும் மணமகளும் திருமணத்தின்பின்பு தேனிலவை வீட்டிலேயே கொண்டாடினார்கள். இக்காலத்தில் இவர்கள் அரசர் என்றும் அரசி என்றும் அழைக்கப்பட்டார்கள். இக்காலம் மணமக்களின் வீட்டினருக்கும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் பெரும் கொண்டாட்டத்தின் காலமாகும். இயேசுவும் இந்த சூழ்நிலைக்கு தன்னை ஒப்பிட்டு தன் சீடர்கள் அவரோடு இருக்கும் காலத்தில் மகிழ்வது முறையே என்றார். இது இயேசுவின் சீடர்களுக்கு நோன்பின் காலமல்ல. இந்த செய்தி தரும் உண்மை என்ன?

1. ***மகிழ்ச்சி:*** இயேசுவோடு இருப்பது நிறைமகிழ்ச்சியே. அது ஓர் ஆழமான இன்ப அனுபவம். இயேசுவோடு நடக்கும் ஒருவர் ஒளியில் நடக்கிறார்.
2. ***நிலையற்ற மகிழ்ச்சி:*** எந்த மகிழ்ச்சியும் நிலையானவையல்ல என்பதையும் இந்த சம்பவம் காட்டுகின்றது. ஏனெனில் யோவானின் சீடர்களுக்கு துன்பத்தின் காலம் வந்துவிட்டது. அவர் சிறையில் இருந்தார். அதேபோல இயேசுவின் சீடர்களுக்கும் துன்பத்தின் காலம் ஒருநாள் வரும்.
3. ***இது ஓர் சவால்:*** 'நீங்கள் என்னோடு மகிழ்வதைப்போல எனது துன்பங்களிலும் பங்கேற்க ஆயத்தமா?' இது தன் சீடர்களுக்கு இயேசுவின் கேள்வியாக இருக்கும். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகத் தாங்க ஆயத்தமா?
4. ***இயேசுவின் துணிவு:*** சீடர்கள் மகிழ்ச்சியில் இருந்தாலும், அவருக்குப் புகழ் பல வந்தாலும் தனது சிலுவை பற்றிய சிந்தனைத் தெளிவோடு இயேசு இருந்தார். கடவுளின் அழைப்பு தரும் துன்பங்களை அறிந்திருந்தும் அதை துணிவோடு ஏற்று பயணம் செய்தவர் இயேசு.

✤ கிறிஸ்தவ வாழ்வு இன்பம்-துன்பம் இரண்டையும் உள்ளடக்குகின்றது என்பதை உணர்ந்து எனது சிலுவையை விரும்பி ஏற்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 ~ சனி - மாசி 2009

*எசா 58: 9–14 திபா 86: 1–6 லூக் 5: 27–32*

### *மகிழ்ச்சி*

இயேசு வரி தண்டுபவர் ஒருவரை அழைத்தார். அன்று யூதர்கள் வரி தண்டுபவர்களை வெறுத்து வந்தனர். ஏனெனில் இவர்கள் மக்களிடம் தமது விருப்பத்திற்கேற்ப வரி வசூலித்து உரோமையருக்கும் கொடுத்து, தமது பைகளையும் நிரப்பினார்கள். ஆனால் இயேசுவின் இந்த அழைப்பினால் லேவி எனப்படும் வரி தண்டுபவரின் உள்ளுணர்வுகள் என்ன?

**மகிழ்ச்சி**

பாவியென்று மக்களால் நிந்திக்கப்பட்ட தனக்கும் ஆண்டவரின் அன்பு, அழைப்பு உண்டா எனும் கேள்வியோடு இவருக்குள் நிறை மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். இந்த சூழ்நிலையில் ஏனைய யூதர்களினதும், தலைவர்களினதும் கருத்துகள் இவரது கவலையாக இருந்திராது. தனது அனுபவம் அடுத்தவரது அனுபவமாக வேண்டும் எனும் நோக்கத்தோடு பெரிய விருந்து ஏற்பாடு செய்திருப்பார். அதற்கு வரி தண்டுபவர்கள், பரிசேயர், மறைநூல் அறிஞர்கள் அனைவரையும் இவர் அழைத்திருந்தார்.

சக்கேயுவும் ஓர் வரி தண்டுபவரே. இயேசுவின் அன்பைப் பெற்ற இவர் அவரை தனது வீட்டிற்குள் அழைத்தார். அங்கும் பலரது முணுமுணுப்பு இருந்தது. ஆனால் சக்கேயுவின் மகிழ்ச்சியின் வெளிப்பாடே முக்கியம்.

லேவி தனது மகிழ்ச்சியை விருந்து கொடுப்பதன் மூலமாக வெளிப்படுத்தினார். ஒரு பாவியின் மனமாற்றத்தில் இருவித மகிழ்ச்சி உண்டு.

1. இறைவனின் அன்பை உணர்ந்து மனம்மாறியவர் மகிழ்ந்து அந்த மகிழ்ச்சியை தனது செயல்களில் வெளிப்படுத்தினார். இங்கு விருந்து அந்த செயல்.
2. பாவியின் மனமாற்றத்தால் இறைவனின் சமூகத்தில் ஏற்படும் மகிழ்ச்சி. அங்கும் விருந்து நடைபெறுகின்றது. லூக் 15ம் அதிகாரத்தில் வரும் உவமைகள் இதற்கு சான்று.

மொத்தத்தில் மனமாற்றம் அவசியம். அதற்கு ஆண்டவர் முன்னெடுப்பு செய்கின்றார். பதில் கூறி புதுவாழ்வுக்கு வரவேண்டியது எமது கடமை. அதை லேவி தவறின்றி நிறைவேற்றினார். இந்த லேவியே நற்செய்தியாளர் மத்தேயு. இவர் தனது நற்செய்தியின் மூலமாக இயேசுவை யூத உலகிற்கு சிறப்பாக அறிமுகப்படுத்தினார்.

☞ இயேசுவின் அழைப்பு பாவியாகிய எனக்கும் வருகின்றது என்பதை அறிந்து அந்த அழைப்பு தரும் மகிழ்ச்சியை நிறைவாக்குவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது விவிலிய நூல்களின் பெயர்களும் சுருக்கக் குறியீடுகளும்

### பழைய ஏற்பாடு

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. தொடக்க நூல் | ஆதியாகமம் | தொநூ |
| 2. விடுதலைப் பயணம் | யாத்திராகமம் | விப |
| 3. லேவியர் | லேவியராகமம் | லேவி |
| 4. எண்ணிக்கை | எண்ணாகமம் | எண் |
| 5. இணைச்சட்டம் | உபாகமம் | இச |
| 6. யோசுவா | யோசுவா | யோசு |
| 7. நீதித்தலைவர்கள் | நீதிபதிகள் | நீத |
| 8. ரூத்து | ரூத் | ரூத் |
| 9. 1 சாமுவேல் | 1 சாமுவேல் | 1சாமு |
| 10. 2 சாமுவேல் | 2 சாமுவேல் | 2சாமு |
| 11. 1 அரசர்கள் | 1 அரசர்கள் | 1அர |
| 12. 2 அரசர்கள் | 2 அரசர்கள் | 2அர |
| 13. 1 குறிப்பேடு | 1 நாளாகமம் | 1குறி |
| 14. 2 குறிப்பேடு | 2 நாளாகமம் | 2குறி |
| 15. எஸ்ரா | எஸ்ரா | எஸ் |
| 16. நெகேமியா | நெகேமியா | நெகே |
| 17. எஸ்தர் | எஸ்தர் | எஸ் |
| 18. யோபு | யோபு | யோபு |
| 19. திருப்பாடல்கள் | சங்கீதங்கள் | திபா |
| 20. நீதிமொழிகள் | பழமொழி ஆகமம் | நீமொ |
| 21. சபை உரையாளர் | சங்கத் திருவுரை | சஉ |
| 22. இனிமைமிகு பாடல் | உன்னத சங்கீதம் | இபா |
| 23. எசாயா | இசையாஸ் | எசா |
| 24. எரேமியா | எரேமியாஸ் | எரே |
| 25. புலம்பல் | புலம்பல் | புல |
| 26. எசேக்கியேல் | எசேக்கியேல் | எசே |
| 27. தானியேல் | தானியேல் | தானி |
| 28. ஓசேயா | ஓசே | ஓசே |
| 29. யோவேல் | யோவேல் | யோவே |
| 30. ஆமோஸ் | ஆமோஸ் | ஆமோ |
| 31. ஒபதியா | அப்தியாஸ் | ஒப |
| 32. யோனா | யோனாஸ் | யோனா |
| 33. மீக்கா | மிக்கேயாஸ் | மீக் |
| 34. நாகூம் | நாகும் | நாகூ |
| 35. அபக்கூக்கு | அபாக்கூக் | அப |
| 36. செப்பனியா | செப்போனியாஸ் | செப் |
| 37. ஆகாய் | – – – | ஆகா |
| 38. செக்கரியா | சக்கரியாஸ் | செக் |
| 39. மலாக்கி | மலாக்கியா | மலா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைத் திருமுறை நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. தோபித்து | தொபியாசு ஆகமம் | தோபி |
| 2. யூதித்து | யூதித் | யூதி |
| 3. எஸ்தர் | --- | எஸ் (கி) |
| 4. சாலமோனின் ஞானம் | ஞானாகமம் | சாஞா |
| 5. சீராக்கின் ஞானம் | சீராக் ஆகமம் | சீஞா |
| 6. பாரூக்கு | பாரூக் | பாரூ |
| 7. தானியேல் இணைப்புகள் | --- | தானி (இ) |
| 8. 1 மக்கபேயர் | 1 மக்கபே ஆகமம் | 1மக் |
| 9. 2 மக்கபேயர் | 2 மக்கபே ஆகமம் | 2மக் |

## புதிய ஏற்பாடு

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள் | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. மத்தேயு நற்செய்தி | மத்தேயு | மத் |
| 2. மாற்கு நற்செய்தி | மாற்கு | மாற் |
| 3. லூக்கா நற்செய்தி | லூக்காஸ் | லூக் |
| 4. யோவான் நற்செய்தி | அருளப்பர் | யோவா |
| 5. திருத்தூதர் பணி | அப்போஸ்தலர் பணி | திப |
| 6. உரோமையர் | உரோமையர் | உரோ |
| 7. 1 கொரிந்தியர் | 1 கொரிந்தியர் | 1கொரி |
| 8. 2 கொரிந்தியர் | 2 கொரிந்தியர் | 2கொரி |
| 9. கலாத்தியர் | கலாத்தியர் | கலா |
| 10. எபேசியர் | எபேசியர் | எபே |
| 11. பிலிப்பியர் | பிலிப்பியர் | பிலி |
| 12. கொலோசையர் | கொலோசேயர் | கொலோ |
| 13. 1 தெசலோனிக்கர் | 1 தெசலோனிக்கேயர் | 1தெச |
| 14. 2 தெசலோனிக்கர் | 2 தெசலோனிக்கேயர் | 2தெச |
| 15. 1 திமொத்தேயு | 1 தீமோத்தேயு | 1திமொ |
| 16. 2 திமொத்தேயு | 2 தீமோத்தேயு | 2திமொ |
| 17. தீத்து | தீத்து | தீத் |
| 18. பிலமோன் | பிலமோன் | பில |
| 19. எபிரேயர் | எபிரேயர் | எபி |
| 20. யாக்கோபு | யாகப்பர் | யாக் |
| 21. 1 பேதுரு | 1 இராயப்பர் | 1பேது |
| 22. 2 பேதுரு | 2 இராயப்பர் | 2பேது |
| 23. 1 யோவான் | 1 அருளப்பர் | 1யோவா |
| 24. 2 யோவான் | 2 அருளப்பர் | 2யோவா |
| 25. 3 யோவான் | 3 அருளப்பர் | 3யோவா |
| 26. யூதா | யூதா | யூதா |
| 27. திருவெளிப்பாடு | திருவெளிப்பாடு | திவெ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

## மார்கழி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான |
|---|---|---|---|---|
| 30(கார்) | 18: 15-20 | - | - | - |
| 01 | 8: 5-11 | - | - | - |
| 02 | - | - | 10: 21-24 | - |
| 03 | - | 16: 15-20 | - | - |
| 04 | 7: 21, 24-27 | - | - | - |
| 05 | 9: 27-31 | - | - | - |
| 06 | 9: 35-10:1,6-8 | - | - | - |
| 07 | - | 1: 1-8 | - | - |
| 08 | - | - | 1: 26-38 | - |
| 09 | 18: 12-14 | - | - | - |
| 10 | 11: 28-30 | - | - | - |
| 11 | 11: 11-15 | - | - | - |
| 12 | 11: 16-19 | - | - | - |
| 13 | 17: 10-13 | - | - | - |
| 14 | - | - | - | 1: 6-8, 19-28 |
| 15 | 21: 23-27 | - | - | - |
| 16 | 21: 28-32 | - | - | - |
| 17 | 1: 1-17 | - | - | - |
| 18 | 1: 18-24 | - | - | - |
| 19 | - | - | 1: 5-25 | - |
| 20 | - | - | 1: 26-38 | - |
| 21 | - | - | 1: 26-38 | - |
| 22 | - | - | 1: 46-56 | - |
| 23 | - | - | 1: 57-66 | - |
| 24 | - | - | 1: 67-79 | - |
| 25 | - | - | 2: 15-20 | - |
| 26 | 10: 17-22 | - | - | - |
| 27 | - | - | - | 20: 2-8 |
| 28 | - | - | 2: 22-40 | - |
| 29 | - | - | 2: 22-35 | - |
| 30 | - | - | 2: 36-40 | - |
| 31 | - | - | - | 1: 1-18 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

### தை

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | – | – | 2: 16–24 | – |
| 02 | – | – | – | 1: 19–28 |
| 03 | – | – | – | 1: 29–34 |
| 04 | 2: 1–12 | – | – | – |
| 05 | 4: 12–17,23–25 | – | – | – |
| 06 | – | 6: 34–44 | – | – |
| 07 | – | 6: 45–52 | – | – |
| 08 | – | – | 4: 14–22 | – |
| 09 | – | – | 5: 12–16 | – |
| 10 | – | – | – | 2: 22–30 |
| 11 | – | 1: 7–11 | – | – |
| 12 | – | 1: 14–20 | – | – |
| 13 | – | 1: 21–28 | – | – |
| 14 | – | 1: 29–39 | – | – |
| 15 | – | 1: 40–45 | – | – |
| 16 | – | 16: 15–20 | – | – |
| 17 | – | 2: 13–17 | – | – |
| 18 | – | – | – | 1: 35–42 |
| 19 | – | 2: 18–22 | – | – |
| 20 | – | 2: 23–28 | – | – |
| 21 | – | 3: 1–6 | – | – |
| 22 | – | 3: 7–12 | – | – |
| 23 | – | 3: 13–19 | – | – |
| 24 | – | 3: 20–21 | – | – |
| 25 | – | 1: 4–20 | – | – |
| 26 | – | – | 10: 1–9 | – |
| 27 | – | 3: 31–35 | – | – |
| 28 | – | 4: 1–20 | – | – |
| 29 | – | 4: 21–25 | – | – |
| 30 | – | 4: 26–34 | – | – |
| 31 | – | 4: 35–41 | – | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

### மாசி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான |
|---|---|---|---|---|
| 01 | – | 1: 21–28 | – | – |
| 02 | – | – | 2: 22–40 | – |
| 03 | – | 5: 21–43 | – | – |
| 04 | 2: 1–2, 7–12 | – | – | – |
| 05 | – | 6: 7–13 | – | – |
| 06 | – | 6: 14–29 | – | – |
| 07 | – | 6: 30–34 | – | – |
| 08 | – | 1: 29–39 | – | – |
| 09 | – | 6: 53–56 | – | – |
| 10 | – | 7: 1–13 | – | – |
| 11 | – | 7: 14–23 | – | – |
| 12 | – | 7: 24–30 | – | – |
| 13 | – | 7: 31–37 | – | – |
| 14 | – | 8: 1–10 | – | – |
| 15 | – | 1: 40–45 | – | – |
| 16 | – | 8: 11–13 | – | – |
| 17 | – | 8: 14–21 | – | – |
| 18 | – | 8: 22–26 | – | – |
| 19 | – | 8: 27–33 | – | – |
| 20 | – | 8: 34–9: 1 | – | – |
| 21 | – | 9: 2–13 | – | – |
| 22 | – | 2: 1–12 | – | – |
| 23 | – | 9: 14–29 | – | – |
| 24 | – | 9: 30–37 | – | – |
| 25 | 6: 1–6, 16–18 | – | – | – |
| 26 | – | – | 9: 22–25 | – |
| 27 | 9: 14–15 | – | – | – |
| 28 | – | – | 5: 27–32 | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்புகளும், அவை கொடுக்கப்பட்டுள்ள திகதிகளும்


தற்பெருமை மார் 2,
ஆறுதல் மார் 10,
பொறுப்பு மார் 28,
அன்னா மார் 30,
இறைசக்தி தை 13,
தடைகள் தை 22,24,
உண்மை தை 28,
உவமை தை 30,
குற்ற உணர்வு மாசி 6,
பெறுதல் மாசி 9,
தொழுநோய் மாசி 15,
புளிப்புமாவு மாசி 17,
சீடத்துவம் மாசி 20,
மன்னிப்பு மாசி 22,
சிலுவை மாசி 24,26,
தலைமுறை மார் 17,
போதனை மார் 3,
துன்பம் மார் 11,26,
சிமியோன் மார் 29,
சான்று தை 3,
நோன்பு தை 19,20,
நற்செய்தி தை 5,12,
ஒளி தை 29,
சட்டம் மாசி 2,
ஆயன் மாசி 7,
தூய்மை மாசி 10,11,
அடையாளம் மாசி 16,
மெசியா மாசி 19,
உருமாற்றம் மாசி 21,
சவால் மாசி 23,
அதிகாரம் மார் 15,
திருமணம் மார் 18,
பரிவு மார் 6, மாசி 14,15,
வாக்கு மார் 4, தை 28,
வாழ்வு மார் 4,16, தை 25,
பார்வை மார் 5, மாசி 18,
ஆயத்தம் மார் 7, தை 2,
மனநிலை மார் 12, தை 21,
அன்பு கார் 30, மார் 9, தை 9,
பணிவு மார் 1, தை 10, மாசி 3,
நம்பிக்கை மார் 1,27, தை 31, மாசி 8,
இரக்கம் தை 7,15, மாசி 13,22,25,
மரியா மார் 8,22, தை 1, மாசி 4,
அழைப்பு மார் 8,21, தை 17,18,23,26,
இயேசு மார் 13,14,31, தை 4, மாசி 1,19,
இறையனுபவம் மார் 19,20,23,24, தை 11,
மகிழ்ச்சி மார் 25, மாசி 27,28
பணி தை 6,8,14,16, மாசி 5,
உறவு தை 27, மாசி 12,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org